பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 15 சனிக்கிழமை (27.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 093

## 2010 பொதுத் தேர்தல் களம் ஆரம்பமாகியது

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 9 ஆசனங்களுக்கு 324 வேட்பாளர்கள் களம் இறங்கினர்!

## வடக்கு, கிழக்கில் மொத்தம் 115 சுயேச்சைக் குழுக்கள்!!

யாழ்ப்பாணம்,பெப்ரவரி27

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திலிருந்து ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி நடைபெறும் ஏழாவது பொதுத்தேர்தலில் இதுவரை இல்லாதவாறு மொத்தம் 324 வேட்பாளர்கள் களம் இறங்கி உள்ளனர்! அதே போன்று மொத்தம் 12 சுயேச்சைக் குழுக்கள் தமது வேட்பாளர்களின் நியமனப் பத்திரத்தை நேற்றுத் தாக்கல் செய்தன.

இதேவேளை - வடக்கு, கிழக்கில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் முதல் தடவையாக அதிக எண்ணிக்கையாக 197 அணிகள் போட்டியில் குதித்துள்ளன. அவற்றில் 115 சுயேச்சைக் குழுக்களாகும்.

தமிழ்ப் பகுதிகளில் இம்முறை அதிக சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுவது இதற்கு முன்னர் நடைபெற்ற ஆறு பொதுத் தேர்தல் களங்களை விடவும் முற்றிலும் மாறுபட்ட பின்னணி ஒன்றைத் தோற்றுவித்துள்ளதாக நோக்கர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

| மாவட்டம் | கட்சிகள் | சுயேச்சை | மொத்தம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 15 | 12 | 27 |
| வன்னி | 16 | 12 | 28 |
| திருகோணமலை | 17 | 14 | 31 |
| மட்டக்களப்பு | 17 | 28 | 45 |
| திகாமடுல்ல | 17 | 49 | 66 |
| | 82 | 115 | 197 |

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று நண்பகல் 12மணியுடன் நிறைவு பெறுவதால் யாழ். செயலகத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்காக கட்சி உறுப்பினர்களும், சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளும் ஒன்றன் பின் ஒன்றாக வருகை தந்து கொண்டிருந்தனர்.

இதனால் யாழ்.செயலகத்தின் முன் வாயில் வேட்பாளர்களால் நிறைந்து வழிந்ததைக் காணமுடிந்தது.

நேற்று நண்பகல் 12மணியுடன் வேட்பு மனுத்தாக்கல் நிறைவு பெற்றதும் 12.30 மணி முதல் 1.30மணி வரை வேட்பு மனுத்

(24ஆம் பக்கம் பார்க்க)

## சுரேஷ் அணி அலுவலகம் மீது நேற்றிரவு கல்வீச்சு

யாழ்ப்பாணம்,பெப்.27

ஆரியகுளம்-வேம்படி வீதியில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) அலுவலகம் மீது நேற்றிரவு 9.45மணியளவில் கல்வீச்சு இடம்பெற்றதாக யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## நீரிழிவுக் கண்காட்சி இன்றுடன் பூர்த்தி

யாழ்ப்பாணம்,பெப். 27

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நடைபெற்றுவரும் 'நீரிழிவை வெற்றிகொள்வோம்' விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று மாலை 7.30 மணியுடன் முடிவடைகிறது. பயனுள்ள இந்தக் கண்காட்சியை இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பார்வையிட்டுவிட்டனர். நீரிழிவு நோயாளர்கள் மட்டுமன்றி சகல தரப்பினரும் பார்த்தும் கேட்டும் பயன்பெற்ற இக்கண்காட்சியை நீங்கள் தவறவிடலாமா? இப்போது இல்லாவிடினும் இனி எப்போதும் நீரிழிவில் இருந்து தப்பித்துக்கொள்ள வேண்டிய தகவல்களை அறிந்துகொள்ளுங்கள் இன்றைய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

**கல்விச் சுடர்**

உள்ளே

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

## மாவட்ட ரீதியில் 196 இடங்களுக்கு மொத்தம் 7,625 பேர் களத்தில் குதித்தனர்

கொழும்பு,பெப்.27

மொத்தம் 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெறும் பொதுத் தேர்தலில் மாவட்ட ரீதியில் தேர்ந்தெடுக்கப்படும் 196 இடங்களுக்காக ஏழாயிரத்து 625 வேட்பாளர்கள் களமிறங்கியிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்துக்குக் குறையாத சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கியுள்ள அதேசமயம், திகாமடுல்ல மாவட்டத்தில் மட்டும் 49 சுயேச்சைக் குழுக்கள் களத்தில் இறங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏழாவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்காக ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நடவடிக்கைகள்

(24ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் அணி வெற்றிலைச் சின்னத்தில் போட்டி; காங்கிரஸ் பட்டியலில் 3 முன்னாள் எம்.பிக்கள்

கொழும்பு,பெப்.27

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சி இம்முறை யாழ். மாவட்டத்தில் அரசுத் தரப்புடன் கூட்டுச் சேர்ந்து - ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பட்டியலில் - வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. ஆளும் தரப்புப் பட்டியலில் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் தற்போதைய நாடாளுமன்றத்தின்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையானின் பாதுகாப்பு நேற்றுத் திடீரென வாபஸ்!

### தனித்துத் தேர்தலில் களமிறங்கியதால்...?

கொழும்பு,பெப்.27

கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனிற்கு வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு நேற்றுத் திடீரென நீக்கப்பட்டுளது எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான காரணம் என்னவென்பது தமக்குத் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலை புலிகள்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு எதிராக 25 பேர் சாட்சியமளிப்பர்

கொழும்பு,பெப். 27

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராகச் சாட்சியமளிப்பதற்கு இதுவரை 25 பேர் முன்வந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள அரசு, அவருக்கு எதிரான தடயங்களைச் சேகரிக்கும் பணி முடிவடைந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளது.

இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க இதனைக் குறிப்பிட்டு

(24ஆம் பக்கம் பார்க்க)

## மனுத் தாக்கல் செய்து விட்டுத் திரும்பிய ஐ.தே.கட்சி வேட்பாளர் மீது தாக்குதல்!

கொழும்பு,பெப்.27

களுத்துறை மாவட்டத்துக்கான தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்து விட்டு பேருவளைக்குத் திரும்பிக்கொண்டிருந்த பேருவளை நகரசபைத் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைப்பாளருமான எம். மஸாஹிம் மொகமட் மீதும். அவரது ஆதரவாளர்கள் மீதும் பயாகல நகரில் இனந்தெரியாதோர் நேற்று முன்தினம் மாலை தாக்குதலை மேற்கொண்டனர். அத்துடன், அவர்கள் பிரயாணம் செய்த

(24ஆம் பக்கம் பார்க்க)

அறிமுகப்படுத்துகிறோம்
யாழ் நகரிலும், கொழும்பிலும்
ஒரே சுவை, ஒரே தரம், ஒரே விலை
Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm
விசேட வடஇந்திய காலை உணவு
பூரி, சப்பாத்தி, பரோட்டா, நாண், சைவ, அசைவ கறிவகைகளும் மற்றும்
Indian, Chinese, Panjabi & Jaffna Foods
கொசி உணவகம் Feel like home
இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். HOTLINE: 021-2225899



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் 1,601 குடும்பங்களுக்கு மீளக் குடியமர அனுமதி கிடைத்தது

### காணி துப்புரவுப் பணி ஆரம்பம்; பஸ் சேவையும் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், பெப்.27

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து 600மீற்றர் பிரதேசத்தில் 1,601 குடும்பங்களைச் சேர்ந்த 5,537பேரை மீள் குடியமர்த்த அனுமதி கிடைத்துள்ளது. அவர்களில் முதற் கட்டமாக 509 குடும்பங்களைச் சேர்ந்த 1,760பேரை மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இத் தகவலை தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியுடன் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் மீள்குடியேற்றத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து அரச அதிபர் விடுத்துள்ள தகவல்கள் வருமாறு:

* வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் பஸ்கள் பின்வரும் பாதை வழிகளில் தினமும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தெல்லிப்பழை-மாவிட்டபுரம்-கீரிமலை மற்றும் சேந்தான்குளம்-கீரிமலை.

* தெல்லிப்பழைச் சந்தி ஊடாக மகாஜனா கல்லூரிக்குச் செல்லும் வீதி மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் பாவனைக்கு திறக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ் வீதியூடான பாடசாலை பஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

* 600மீற்றர் உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றத்திற்கு 1,601குடும்பங்களைச் சேர்ந்த 5,537அங்கத்தவர்களுக்கான அனுமதி கிடைக்கப்பெற்று அவற்றில் 509 குடும்பங்களைச் சேர்ந்த 1,760 அங்கத்தவர்கள் உதவித் திட்டத்தின் கீழ் காணிகளைத் துப்புரவாக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

* தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, புற்றுநோய் வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் என்பன மாவட்ட கட்டளைத் தளபதி, பாதுகாப்பு படை அதிகாரிகள், அரசாங்க அதிபர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஆகியோர் 23.02.2010 ஆம் திகதி மேற்குறிப்பிட்ட இடங்களை நேரடியாகச் சென்று மீள்குடியேற்றம் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தை உடனடியாக மீளவும் சொந்த இடத்தில் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு துப்புரவாக்கும் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

* தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை மற்றும் புற்றுநோய் வைத்திய சாலை இரண்டையும் சொந்த இடங்களில் மீளஆரம்பிப்பதற்கான பாதுகாப்பு அனுமதி மிக விரைவில் பெற்றுக்கொடுப்பதாக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி உறுதியளித்துள்ளார். (ஒ-1)

## விஞ்ஞான ஆசிரியருக்குச் செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப்.27

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 6முதல் 11வரை விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சனிக்கிழமையும், உடுவில், தெல்லிப்பழை கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு ஞாயிற்றுக் கிழமையும் இந்தச் செயலமர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-38)

## தேர்த்திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், பெப்.27

புங்குடுதீவு கிழக்கு தல்லையம்பற்று-சங்கரமூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தானப் பெருந்திருவிழாவில் தேர்த்திருவிழா இன்று முற்பகல் 10மணிக்கு நடைபெறும்.

காலை 9மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று முருகன் முற்பகல் 10மணிக்கு தேரில் ஆரோகணித்து அருள் பாலிப்பார்.

நாளை காலை 9மணிக்கு கண்ணகை அம்மன் ஆலய மகா சமுத்திர தீர்த்தம் இடம்பெறும்.

(சிறப்பிதழ் 12ஆம், 13ஆம் பக்கங்களில்)

* * *

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்.வண்ணை கன்னாதிட்டி ஸ்ரீ காளி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திரு விழா நடைபெறும்.

காலை 8மணிக்கு வசந்த மண்ட பூசை இடம்பெற்று 9மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து அருள் பாலிப்பார்.

நாளை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம் பெற்று 9.30 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

(சிறப்பிதழ் 18 ஆம் பக்கத்தில்)

## கண்காணிப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.27

சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங் கும் வைத்திய நிறுனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் ஐந்தாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.


## பதினைந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
தியாகராசா அரசரத்தினம்
(ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச. காரைநகர்)

பிறப்பு: 18.04.1942 இறப்பு: 14.02.1995
திதி: 27.02.2010

எங்கள் அப்பாவே!
கூற்றுவன் உங்களைக் கவர்ந்தது
நேற்றுப் போலிருக்கிறது!
காற்றள்ளிச் செல்லும் வேகத்தில்
ஆண்டுகள் பதினைந்தாகிவிட்டன!
இன்னமும் ஈரவிழிகளோடும்
காயாத வலிகளோடும்
உங்கள் நினைவுகளை
ஏந்தி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (சி/565133)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 ★ 02 ★ 1956



இறைவன் திருவடியில் 19 ★ 02 ★ 2008

அமரர் கனகசபாபதிப்பிள்ளை கனகதாசன்

இடைநடுவில் எமைத் தவிக்கவிட்டுச்
சென்று ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ
தங்கள் பிரிவுத் துயர் தந்த ஆறாத காயங்கள்
எம் மனதில் என்றென்றும் ஓயாத அலைகளாய்ப்
பாய்ந்த வண்ணம் உள்ளன.

314, பலாலி வீதி,
கந்தர்மடம்.
தொ.பே.இல: 0214590395 (C/565167)

தகவல்,
த.தேவராசா
(மாஸ்டர்).

## பூபதி காட்சியறையில்

★ எலற்றோனிக் தராசு (ஒரு வருட உத்தரவாதம்)
★ பேக்கரிக்குத் தேவையான உபகரணங்கள்
★ ஹோட்டல்களுக்குத் தேவையான உணவைச் சூடாகவும், குளிராகவும் வைத்திருக்கும் உபகரணங்கள்
★ கைத்தொழிலுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட...

தொ.பே.இல: 0777427777
பூபதி காட்சியறை,
யாழ்.மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. (C/565564)

## கடைகள் வாடகைக்கு

பரமேஸ்வராச் சந்தியை
அண்மித்ததாக இரண்டு
கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: சாரங்கன் பூஞ்சோலை,
291, பலாலி வீதி (ஆலடிச் சந்தி),
யாழ்ப்பாணம். (C/565565)

## வீட்டுக்காவலாளி தேவை

வீட்டைப்பராமரிப்பதுடன் முழு நேர காவல் கடமையிலும் ஈடுபடக்கூடிய ஒருவர் தேவை. வயது 45க்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு - 0777760905

## பிறந்த தின வாழ்த்துக்கள்



இன்று (27.02.2010) சனிக்கிழமை
தனது 27ஆவது பிறந்த தினத்தை
கொண்டாடும் கௌரவ மாநகரசபை
உறுப்பினர்
எஸ்.விஜயகாந்
(B.C.A University of Madras)

அவர்களை மனமார வாழ்த்துவதோடு அவரின் சமூக
சேவைகள் மேலும் தொடர பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

(95141) K.திலக்ஷன், K.றுபேஷ், R.தீசன்.

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி)

### பழைய மாணவர் சங்க பொதுச்சபைக் கூட்டம் - 2010

நாளை (28.02.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்குக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்,
செயற்குழு சார்பாக.
(95146)

## கண்ணீர் அஞ்சலி



எமது மைத்துனர் இ.தர்மகுலசிங்கம்
அவர்களின் அன்புத் தந்தையும்
எமது சகோதரி திருமதி
த.சகுந்தலாதேவியின் அன்பு
மாமனாருமாகிய
சண்முகம் இரத்தினம் பத்தர்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

சிற்றம்பலம் நித்தியானந்தராசா குடும்பம் (நோர்வே),
தவலிங்கம் குடும்பம் - நோர்வே,
தவபாலன் குடும்பம் - நோர்வே,
கிருஷ்ணசாமி குடும்பம் - கொழும்பு. (C/65152)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 31 ★ 01 ★ 1960



இறப்பு 28 ★ 01 ★ 2010

திருமதி கலியுகரதி தவச்செல்வம் (கலி)

கடந்த 28.01.2010 வியாழக்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.02.2010) சனிக்கிழமை இந்தியாவில் நடைபெறுகிறது என்பதை அறியத் தருகிறோம். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைஞர் தெரு,
வளசரவாக்கம்,
சென்னை. (95138)

கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ANGEL INTERNATIONAL SHCOOL MANIPAY

### < WANTED >

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY
In God we trust
a school with a difference
humedica

| | |
|---|---|
| 1 VICE PRINCIPAL | Seeking degree holding person with managerial skill to guide teachers & students. |
| 2 SENIOR TEACHERS Commerce & physics | Efficient, degree holding teachers to teach physics and commerce for grade 8 – 13 in English medium |
| 3 ENGLISH TEACHER | Efficient & experienced persons possessing Degree or Trained Certificate to learn English for grade 8 – 13. |

Mathers Lane,Manipay, Jaffna. Contact No.-0777238300, 0212229738.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஜனநாயகத்தின் பெயரால் தமிழ்த் தேசியம் சிதைப்பா?

தற்போதைய அரசமைப்பின் கீழ் ஏழாவது நாடாளு மன்றத்துக்கான பொதுத் தேர்தலுக்குரிய வேட்புமனுத் தாக்கல் நேற்றுடன் முடிவடைந்துவிட்டது.

இனி சுமார் ஆறு வார காலம் பொதுத் தேர்தல் பிரசா ரம்களை கட்டப் போகின்றது. ஏப்ரல் 8 ஆம் திகதி வாக் களிப்புடன் தேர்தல் திருவிழா உச்சம்பெறும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில், தமிழர் தாயகத்தில், புதிய சூழலில் நடைபெறும் பொதுத் தேர்தல் இது என்பது மறுக்கப்பட முடியாத விடய மாகும்.

தமிழர்களின் உரிமைகளுக்காக ஆயுத வழியில் போராட்டம் நடத்தி மிகப் பலமான சக்தியாக விஸ்வரூபம் எடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், வேரோ டும் வேரடி மண்ணோடும் அழிக்கப்பட்டு விட்டதாக இலங்கை ஆட்சித் தலைமை மார்தட்டிப் பிரகடனப்படுத் தியுள்ள நிலையில், இத் தேர்தல் தமிழர் பகுதிகளுக்கும் சேர்த்து இப்போது நடத்தப்படுகின்றது.

அதாவது, ஆயுத ரீதியில் தமிழரின் பலம் அடித்து நொறுக்கப்பட்ட பெருமிதத்தில் தென்னிலங்கை வெற்றிக்களிப்போடு இத் தேர்தலையும் எதிர்கொள்கின் றது. வலிமையாகத் திகழ்ந்த விடுதலைப் புலிகள் அமைப்பு இங்கு இல்லாத நிலையில் தமிழர்கள் தங் களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் இந்தத் தேர் தலை எதிர்கொள்கின்றார்கள்.

தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் வேட்பு மனுத்தாக் கல் செய்யப்பட்டிருக்கும் போக்கே இது புலிகளின் கிடு குப் பிடியிலிருந்து விடுபட்ட பகுதிகள் என்பதை உணர்த் துவதற்குப் போதுமானது.

எண்ணிக்கையில் எதிர்பாராத அளவுக்கு, புதிது புதிதா கப் பல கட்சிகளும், பல டசின் சுயேச்சைக் குழுக்களும் அடித்துப் பிடித்துக் கொண்டு தமிழர் தாயகத்தில் கள மிறங்கியிருக்கின்றமை ஒரு புதிய போக்கே. அது ஜன நாயகப் பார்வையிலே மிக ஆரோக்கியமான விடயம்தான். அதில் குறை கூறுவதற்கோ, தவறு சொல்வ தற்கோ ஏதுமில்லை என்பதும் உண்மைதான்.

ஆனால் இப்படிப் பல தரப்புகளும் ஒரே சமயத்தில் தமிழர் தாயகப் பகுதி எங்கும் இலக்குவைத்துக் களமிறங் கியமைக்கு, முன்னர் எப்போதும் இல்லாதவாறு விடு தலைப் புலிகளின் பிடி இல்லாமல் போய், பலரும் குறிப் பிடும் 'சுதந்திர' நிலைமைதான் காரணம் என்றால், அது வரவேற்கத்தக்கதே.

ஆனால், அப்படியில்லாமல், புலிகள் போன்ற வலு வான ஆயுத பலத்துடன் கூடிய சக்திகள் அடியோடு புற மொதுக்கப்பட்ட சூழலை - பின்னணியை - நல்ல வாய்ப் பாகவும் பொருத்தமான சந்தர்ப்பமாகவும் பயன்படுத்திக் கொண்டு, தமிழர் தேசியம் என்ற உணர்வைத் தமிழர் தாயகத்தில் சிதறடிக்கும் உள்நோக்கத்துடன், திட் டமிட்டு இப்படி ஒரு கைங்கரியம் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்குமானால் அது குறித்து தமிழர்கள் விசேட கவனம் எடுக்க வேண்டியமை மிக முக் கியமானதாகும்.

தமிழ்த் தேசிய சக்திகள் நாடாளுமன்றுக்கு வலிமை யுடன் வருவதை - பிரதிநிதித்துவம் செய்வதை - நீர்த்துப் போக வைக்கும் தந்திரோபாய இலக்கோடு, தென்னி லங்கையில் மையம் கொண்டுள்ள சில சக்திகளே இப்படி எண்ணிக்கையில் அதிகமான கட்சிகளை - குழுக்களை - பின்னால் நின்று தூண்டி, இயக்கி, தமிழர் தாயகத்தில் களமிறக்கியிருக்கின்றன என்ற நெருடலான ஒரு கருத்து சில தரப்புகளில் இருந்து வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துத் தகர்ப் பதற்காகப் பல்வேறு சுயேச்சைக் குழுக்களை அரசுத் தரப்பு நிதி வழங்கி, தமிழர் தாயகப் பிரதேசத்தில் கள மிறக்கியிருக்கின்றது எனக் கூட்டமைப்பின் தலைவர் களுள் ஒருவரான அப்பாத்துரை விநாயகமூர்த்தி வெளிப் படையாகவே குற்றம் சுமத்தியிருக்கின்றமை இங்கு கவ னிக்கத்தக்கது.

தமிழர் தாயகத்தில் புறக்கட்டுப்பாடுகள், அழுத்தங் கள் இல்லாத ஜனநாயகச் சூழல் ஒன்று மலர்ந்திருப்ப தாகக் கூறிக்கொண்டு -

அத்தகைய வரலாற்றுப் புறநிலையை ஏற்படுத்திய சாதனையாளர்கள் தாமே என்று மார்தட்டிக் கொண்டு -

பெருமை பேசுகின்ற தரப்புகளும், சக்திகளும் அத் தகைய ஜனநாயகச் சூழலை, தமிழ்த் தேசியம் பற்றிய உணர்வுகளைச் சிதறடிக்க வைப்பதற்கான சந்தர்ப்ப மாகப் பயன்படுத்த எத்தனிக்கின்றமை குறித்துத் தமிழ் மக் கள் மிக மிக அவதானமாக இருக்கவேண்டும்.

அதுவும், இத்தகைய குழுக்கள், அணிகள் 'தமிழ்த் தேசியம்' பேசிக்கொண்டே களத்தில் இறங்கியிருக்கின்ற மையும் மிக ஆபத்தான விடயமாகும்.

'எய்தவன் இருக்க அம்பை நோவதேன்?' - என்ற கேள்வி நியாயமானதுதான். ஆனால், அத்தகையோர் எய் வதற்கு கோடரிக்காம்பான புல்லுருவிகள் தமிழர் சமூ கத்திலிருந்தே வந்தவர்கள்தாம் என்பதால் அவர்களைத் தமிழ் மக்கள் உரிய முறையில் அடையாளம் கண்டு, தகுந்த வழியில் எதிர்காலத்தில் கையாள முன்வரவேண்டும்.

பொதுத் தேர்தல் முடிவுகள் ஊடாகச் சரியான பாடத் தைப் படிப்பிப்பதும் நல்ல வழிமுறையாகும்.

'தமிழ்த் தேசியம்' என்ற உணர்வெழுச்சி குறித்துத் தமி ழர்கள் தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பம் இது. தங்கள் வரலாற்று விழுமியங்களை - பண்பாட்டுக் கோலங்களை - சரித்திரத் தனித்துவங்களை - சந்ததி ரீதியான தொடர் சிறப்புகளை - தமது பிரிக்க முடியாத பிறப்புரிமைகளையும்- தக்க வைப்பது தொடர் பில் தீர் மானம் மேற்கொள்ளவேண்டிய கட்டமும் இது தான்.

# நல்வழியின்பால் மக்களை ஈர்த்து புதுயுகம் படைத்த நபி பெருமான்

## உண்மைத் தூதுவராக உலகுக்கு அவர் காட்டிய வழி

புனித இஸ்லாம் உலகில் பல்கிப் பெருகி வளர்ச்சியடைவதற்காகவும், தனது சமூகம் இவ்வுலகிலும், மறு வுலகிலும் அல்லாஹ்விடத்தில் ஈடேற் றம் பெறுவதற்காகவும், தன்னுயிரை துச்சமென மதித்து சொல்லொணாத் துன்பத் துயரங்களையும், எதிர்ப்புக ளையும் எதிர்கொண்ட உத்தம நபி முஹம்மது (ஸல்) பிறந்த உன்னத மான தினம் (2010.02.27) இன்றாகும்.

நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினமே மீலாத் தினம் என அழைக் கப்படுகின்றது. இன்று உலகவாழ் அனைத்து முஸ்லிம் மக்களும் இத்தி னத்தை மிகவும் சிறப்பாகக் கொண் டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உண்மையில் மாநபியின் இந்தப் பிறந்த தினத்தில் பெரிய விழாக்கள் எடுத்துக் கொண்டாடு வதைவிட அந்த நபி மனித சமு தாயத்திற்கு வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறைப் படி வாழ்வதே சாலச் சிறந்ததும், அல்லாஹ்வுக்கும் அருமை நபி (ஸல்) அவர்களுக்கும் ஏற்புடைய துமானதான விடயமாகும்.

குறிப்பாக இத்தினத்தில் புனித அல்-குர்ஆனை ஓதுதல், ஸலவாத் துக்கள் ஓதுதல், ஐங்கால தொழு கைகளுடன் சுன்னத்தான ஏனைய தொழுகைகளை தொழுது கொள்ளல், தனிப்பட்ட முறையிலும், பொதுவான முறையிலும் அல்லாஹ்விடத்தில்

**இன்று மீலாதுன் நபி தினமாகும்**

நாம் செய்த பாவங்களுக்காகப் பாவ மன்னிப்புக் கோருதல் கடமையாகும்.

உண்மையில் முழு மனித சமுதா யத்திற்கும், இஸ்லாமிய வாழ்க்கை முறை பரப்பப்பட்டது நபி (ஸல்) மூலம் தான். அல்லாஹ் நபி முஹம்மது (ஸல்) அகிலத்தாருக்கோர் அருட் கொடையாகவும், இவ்வையகத்திற்கு நபிமார்கள் வரிசையில் இறுதி நபி யாகவும் இவ்வுலகில் வந்துதித்தார்.

அல்லாஹ், நபி(ஸல்) அவர்களை இவ்வுலகில் படைத்திராவிட்டால், வேறு எதையுமே இவ்வுலகில் படைத் திருக்கமாட்டேன் என்று கூறியுள்ள தில் இருந்து நபி (ஸல்) அவர்கள் எந் தளவிற்கு புனிதமும் மேன்மையான வரும் என்பதும் அவரது வருகை எவ்வளவு பெறுமதிமிக்கது என்பதும் புலனாகின்றது.

நபி(ஸல்) அவர்கள் அரேபிய தீப கற்பத்தில் புனிதமிகு மக்கா நகரிலே ரபிஉல் அவ்வல் 12 இல் (கி.பி.571 இல்) திங்கட்கிழமை அப்துல்லா (ரழி) அவர்களுக்கும், ஆமினாநாயகி அவர்களுக்கும் புதல்வராகப் பனூ ஹாஸிம் கோத்திரத்தில் பிறந்தார். இந்தத் தினமே இன்று மீலாத் தின மாக இஸ்லாமிய சமூகத்தால் மிக எளி மையான முறையில் கொண்டாடப் பட்டு வருகின்றது.

நபியவர்கள் தனது சிறு பராயத் திலேயே பெற்றோரை இழந்து பல் வேறுபட்ட தடங்கல்களுக்கு மத்தி யில் ஒரு உண்மைத் தூதராகவும் உல கம் போற்றும் ஒரு மா மனிதராகவும் விளங்குவதானது அல்லாஹ் நபிய வர்களை பொருந்திக் கொண்டான் என்பதாகும்.

நபியவர்கள் தனது வாழ்நாளில் எவருக்குமே கிஞ்ஜித்தும் கூட துன் பம் இழைக்காதவராகவே காணப் பட்டார்கள். அதுமட்டுமல்லாது, சிலை வணக்கம், போன்ற இஸ்லாத் திற்கு மாற்றமான வாழ்க்கை வணக்க முறைகளைத் தவிர்த்து ஒரே இறைவன் என்ற கொள்கையுடன் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

புனித இஸ்லாம் மார்க்கம் இன்று வரை பல புதுமைகளையும், உண்மை களையும் கொண்டதாகக் காணப்படு வதற்கும் அது ஒளிபரப்பிக் கொண்டி ருப்பதற்கும், அறியாமையில் மூழ் கிக்கிடந்த மானிடத்தை மனிதப் புனி தர்களாக ஆக்கிய ஒரு மார்க்கமாக இன்று காணப்படுவதற்கும் காரண கர்த்தாவாகக் காணப்படுபவர் அருமை நபி (ஸல்) அவர்கள்தான் என்றால் அது மிகையாகாது.

தீனுல் இஸ்லாம் முற்றிலுமே தீய வைகளில் இருந்து தவிர்ந்து நடக் கும்படியும், நன்மையானவற்றை செய்யும்படியுமே போதிக்கின்றது. நபியவர்கள் இப்பூவுலகில் சுமார் 63 வருடங்கள் வாழ்ந்துள்ளபோதிலும் அவருடைய பின் னைய 23 வருட காலமும் இஸ்லாமிய வரலாற்றில் பல திருப்புமுனை களை ஏற்படுத்தி யது எனலாம்.

நபியவர்களுக்கு அவரது 40 ஆவது வயதில் (நுபுவ்வத்) நபிப் பட் டம் கிடைத்ததிலிருந்து புனித அல்-குர்ஆன் நபி மூலமே அருளப்பட் டது. இஸ்லாமியர்களின் முக்கிய வழி காட்டியாக அல்-குர்ஆன் விளங்கு கின்றது.

இது அன்றிலிருந்து இன்றுவரை எவராலும் ஒரு அணுவளவேனும் மாற்றவோ அல்லது புதிதாக ஒரு சொல்லைக் கூட உருவாக்க முடியாத ளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தாகக் காணப்படுகின்றது.

நபியவர்களுக்கு 23 வருடகால மாக அருளப்பட்ட அல்-குர் ஆன் அக்கால சூழ் நிலைக்கேற் றவாறு மக்காவிலும் மதீனாவிலும் வைத்து அருளப்பட்டது. இவ் வாறு அருளப் பட்ட குர்ஆன் 30 அத்தியாயங் களைக் கொண்ட ஒரு கோப்பாக 6666 வசனங்களைக் கொண்டதாக

**சத்தார் எம். ஜாவித்**

காணப்படுகின்றது. இதுவே இஸ்லா மிய வாழ்க்கை முறையில் முதல் வழிகாட்டியாகும்.

நபியவர்களின் வாழ்வில் மற்று மொரு முக்கிய சம்பவம்தான் அவ ரது 53 ஆவது வயதில் மக் காவை விட்டு மதீனாவிற்கு புனிதப் பயணம் சென்றதாகும். அந்தச் சம்பவம் 'ஹிஜ்ரத்' எனப்படுகின்றது.

ஹிஜ்ரத்தானது இறை கட்ட ளைக்கு அடிபணிந்து தனது பிறந்த மண்ணையும் உற்றார், உறவி னர்களையும் விட்டுவிட்டு இறைகட் டளையை செய்வதற்காகச் சென்ற தாகும். இந்தப் பயணம் இஸ்லாமிய வரலாற்றில் பல் வேறுபட்ட திருப்பு முனைக்கும், விழிப்புணர்வுக்கும் வழிவகுத்தது எனலாம்.

எனவே, இவ்வாறு இஸ்லாம் வளர் வதற்கும் அதன் மூலம் இஸ்லாமியக் கடமைகளை முஸ்லிம்களுக்கு அறி முகப்படுத்தி தீயவழியில் செல்லாது, நல்வழியின்பால் மக்களை ஈர்த்த மாநபியின் இந்தப் பிறந்த தினத்தில் நபிகாட்டிச்சென்ற நல்வழியின்பால் வாழ்வதற்கு முஸ்லிம்களாகிய நாம் வாழப்பழகுவதற்கு வல்ல அல்லாஹ் இம்மையிலும், மறுமையிலும் நல் லருள் பாலிப்பானாக ஆமீன். *

# கணவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்வதற்கு ஆணை தருமாறு கோருகிறார் விஜயகலா மகேஸ்வரன்

யாழ்ப்பாணம், பெப்.27



எனது கணவர் மகேஸ்வரன் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்வதற்காகவே நான் இத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். தமிழ் மக்களின் உடனடிப் பிரச் சினைகளுக்கும் அடிப்படைப் பிரச் சினைகளுக்கும் தீர்வுகாணக்கூடிய கட்சியிலேயே நாம் களமிறங்கியுள் ளோம். குடா நாட்டு மக்கள் எமது கட் சியினை வெற்றிபெறச் செய்யவேண் டும். அவர் விட்டுச் சென்ற பணி தொடர ஆணை தரவேண்டும்.

படுகொலை செய்யப்பட்ட முன் னாள் இந்து கலாசார அமைச்சர் தியா கராஜா மகேஸ்வரனின் துணை வியா ரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாள ரு மான விஜயகலா மகேஸ்வரன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்ற னர். யுத்தம் முடிவடைந்த நிலையில் நாம் ஒரு வரலாற்று திருப்பு முனை யில் இன்றிருக்கின்றோம். இந்த நிலை யில் நாம் தனித்து பிரித்து நின்றோ செயற்படுவதில் அர்த்தமில்லை. இதனால் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் அடிப்படை பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணக் கூடிய விதத்தில் செயற்படும் பிர தான கட்சியான ஐக்கிய தேசியக் கட் சியுடன் இணைந்து செயற்பட்டு எமது பிரதிநிதித்துவத்தினை அதிக ரித்துக் கொள்ளவேண்டும்.

குடா நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி 6 நாடாளுமன்ற உறுப்பினர் க ளைப் பெறுமானால் மத்தியில் ஆட்சி மாற்றம் என்பது நிச்சயமாகும். இதற் கான நடவடிக்கையில் எமது கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க ஈடுபட்டுள்ளார். எனவே குடா நாட்டு மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

எனது கணவர் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குறிப்பாக குடா நாட்டு மக்களின் உரிமைகளுக்காக துணிந்து குரல் கொடுத்து வந்தார். இதனால் தான் அவர் படுகொலை செய்யப்பட்டார். அவரது படுகொலை என்னை நிலை குலையச் செய்த பொழுதிலும் அவர் விட்ட பணி யினை தொடர்வதற்காகவே இந்த தேர்தலில் நான் போட்டியிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே எனது கணவரின் சேவை கள் தொடர்வதற்கு எனது அணிக்கு குடாநாட்டு மக்கள் ஆணை வழங்க வேண்டும்.

எனது கணவர் பெரும் இன்னல்க ளுக்கு மத்தியிலேயே தமிழ் மக்க ளுக்காக அரசியலில் ஈடுபட்டார். பெரும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தி யிலும் அவர் தமிழ் மக்களுக்கான சேவைகளை தொடர்ந்தார். எனவே அவரது சேவை பல மடங்காக குடா நாட்டு மக்களுக்கு தொடர வேண்டு மானால் எமது பிரதிநிதித்துவம் அதி கரிக்கப்படுவது அவசியமாகும். இதற்கு உரிய ஆணையினை குடா நாட்டு மக்கள் வழங்க வேண்டும்.

தமிழ் மக்கள் யுத்தத்தின் கோரப் பிடியில் சிக்கி சின்னாபின்னமாகியுள் ளதுடன், இடம்பெயர்ந்து முகாம்களி லும் பெரும் அவலங்களை அனுப விக்கின்றனர். எனவே இத்தகைய அவலங் களுக்கெல்லாம் ஒரு முடிவு கட் டப்படவேண்டும். எனவே எமது அணியினை ஆதரித்து எமது பிரதி நிதித்துவத்தை அதிகரித்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே இதற்கெல்லாம் விடிவைக் காண லாம். பிரிந்து நிற்பவர்களை ஆதரித்து வாக்குகளை வீணாக்காது நிம்மதி யான வாழ்க்கையை ஏற்படுத்தும் விதத்தில் குடாநாட்டு மக்கள் சிந் தித்துச் செயற்பட வேண்டும். எமது அணியின் வெற்றி குடாநாட்டு மக் களின் வெற்றியாகும். - என்றுள்ளது.

## நாளை

மாசி 16 28.02.2010

ஞாயிற்றுக்கிழமை

திதி :பூரணை

மு.இ. 10.56 வரை

நட்சத்திரம்: மகம்

மாலை 06.25 வரை

சுபநேரம் : 09.28-10.58 வரை

ராகுகாலம்: 04.58-06.28 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிவதனன் பந்து வீச்சில் அசத்தல்; சென்றலா? சென்.ஜோன்ஸா? இன்று முடிவு



வடக்கின் பெரும் போரில் நேற்று திரண்ட ரசிகர்கள் வீரர்களுக்கு ஊற்சாமளிப்பதையும் அங்கு வைக்கப்பட்ட விளம்பர பதாகையினுள் பார்வையாளர் ஒருவர் வெயிலுக்காக ஒதுங்கி இருந்து பார்வையிடுவதையும் பாடங்களில் காணலாம். (படங்கள் : தமிழினியன்)

யாழ்ப்பாணம், பெப்.27

ஹரிவதனின் பந்து வீச்சுக்கு முகங் கொடுக்க முடியாத யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வீரர்கள் மளமளவென்று தமது விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர்.

'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக் கப்படும் மத்திய கல்லூரி - சென்ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று மு.ப. 10 மணிக்கு மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நேற்றுமுன்தினமீ ஆட்ட முடிவில் களத்தில் இருந்த ஜெரிக் துஷாந்தும் (35) அணித்தலைவர் ஜேம்ஸ் ஜான்சனும் (26) தமது ஆட்டத்தைத் தொடர்ந்தனர். ஜெரிக்துசாந் 46ஓட்டங்களைப் பெற்ற போது ஹரிவதனன் வீசிய பந்தில் யோகேஸ்வரனிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார்.

ஜேம்ஸ் ஜான்சனுடன் ஜோடி சேர்ந்தார் ஜெனோசன். இந் நிலையில் ஜேம்ஸ் ஜான் சன் தமது அரைச் சதத்தை பதிவு செய்த துடன் ஹரிவதனின் வேகத்தில் யோகேஸ் வரனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய யுவேந்திரன் 2ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹரி வதனனின் பந்தில் வெளியேற அடுத்து வந்த ரதீசன் 14 பந்துகளில் ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்று ஹரிவதனின் பந்தில் பிரணவனிடம் பிடிகொடுத்து பெவிலி யன் திரும்பினார்.

ஜெனோசன் 9 ஓட்டங்களில் வெளி யேற தனுஜன் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் விதுசனின் பந்தில் பிரணவ னால் பிடியெடுக்கப்பட்டு வெளியேற்றப் பட்டார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 159ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய ஹரிவதனன் 16ஓவர்களை வீசி (5ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக) 39 ஓட்டங்களுக்கு 7விக்கெட்டுக்களை கைப் பற்றினார். டக்சன் 2விக்கெட்டுக்களையும் விதுசன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தி னர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம் பித்த செ.ஜோன்ஸ் கல்லூரி 67 ஓவர் களில் 124ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட் டுக்களையும் இழந்து ரசிகர்க ளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியை வீழ்த்த வியூகம் வகுத்த மத்திய கல்லூரி அணிக்கு விதுசனன், தர்சன் ஆகியோரின் பந்து வீச் சுக்கள் கைகொடுத்தன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி 50ஓட்டங் களைப் பெறுவதற்குள் முன்னணித் துடுப் பாட்ட வீரர்கள் ஆறுபேரின் விக்கெட் டுக்களை இழந்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான அட்ரி யன் விதுசனின் பந்தில் 'எல்.பி.டபிள்யூ' முறையில் ஓட்டம் எதனையும் பெறாது வெளியேறினார்.

மறுபுறத்தில் கஜீபன் பொறுப்புடன் ஆடிய போதும் ஜெயந்தன் 8ஓட்டங்க ளைப் பெற்ற நிலையில் விதுசனின் வேகத் தில் வெளியேறினார்.

கஜீபனுடன் ஹரிவதனன் ஜோடி சேர்ந்த போது 28பந்துகளைச் சந்தித்த கஜீ பன் 3ஓட்டங்களைப் பெற்று திவாகரின் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

ஹரிவதனன் 9ஓட்டங்களுடன் வெளி யேற யோகேஸ்வரனுடன் ஜோடி சேர்ந்த விதுசன் பொறுமையாக ஆடினார்.

48பந்துகளைச் சந்தித்த யோகேஸ் வரன் 10ஓட்டங்களைப் பெற்று விதுச னின் பந்தில் ஜேம்ஸ் ஜான்சனிடம் பிடி கொடுத்து வெளியேற பிரணவனும் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

விதுசன்-பிரியதர்சன் ஜோடி பொறுப் புணர்ந்து ஆடின. 10ஓவர்களைச் சந்தித்த இந்த ஜோடி இணைப்பாட்டமாக 15ஓட் டங்களைப் பெற்றது. ஆனால் 81பந்து களைச் சந்தித்த விதுசன் 20ஓட்டங் க ளைப் பெற்று தர்சனின் பந்தில் திவாகரி டம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தர்சன் (33), டக்சன் (13), மதுசன் (3) என ஆட்ட மிழந்த போதும் இவர்கள் பந்தைத் தடுத்து ஆடுவதில் மட்டுமே கவனம் செலுத் தினர். ஆனால் மத்தியின் வீரர்களான தர்ச னும் விதுசனும் இவர்களின் விக்கெட்டுக் களை பதம் பார்த்தனர்.

ஜெரூசன் 47 பந்துகளுக்கு முகங் கொடுத்து 8 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது இருந்தார்.

மத்திய கல்லூரி சார்பில் பந்து வீசிய விதுசன் 16ஓவர்கள் பந்து வீசி (8ஓட்ட மற்ற ஓவர்கள் அடங்கலாக) 22 ஓட்டங் களைக் கொடுத்து 4விக்கெட்டுக்களையும் தர்சன் 16ஓவர்கள் பந்து வீசி (6ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக) 20ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர். திவாகர், ரதீசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

131ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் நிலையில் களமிறங்கிய யாழ்ப்பா ணம் மத்திய கல்லூரி 34ஓட்டங்களைப் பெற்று 2விக்கெட்டுக்களை இழந்த நிலை யில் நேற்றைய ஆட்டம் நிறைவு பெற்றது.

ஆட்டத்தின் மூன்றாவதும் இறுதியு மான நாள் இன்றாகும்.

(6-23-86)

# கமில்டன் சகல துறையிலும் ஜொலிப்பு; யாழ்ப்பாணக் கல்லூரி 180 ஓட்டங்களுக்கு ஆட்டமிழப்பு



*நேற்று ஆரம்பமான 'பொன் அணிகளின் போரில்' வீரர்களை அதிபர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதையும் அணித்தலைவர்கள் கைலாகு கொடுப்பதையும் நேற்றைய ஆட்டத்தில் வீரர் ஒருவர் துடுப்பெடுத்தாடுவதையும் பந்துவீசுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)*

யாழ்ப்பாணம், பெப்.27

கமில்டனின் அரைச்சதம் கைகொடுக்க 3விக்கெட்டுக்களை இழந்து 113ஓட்டங் களைப் பெற்று வலுவான நிலையில் உள் ளது சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

'பொன் அணிகளின் போர்' என வர்ணிக் கப்படும் சென்.பற்றிக்ஸ்-யாழ்ப்பாணக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டி சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதா னத்தில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத்தீர்மானித்தது. இதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப் பாணக் கல்லூரி 180 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய பிரசாத் ஒரு ஓட்டத்துடனும் பிரசோபனன் 17ஓட்டங்களுடனும் ஆட்ட மிழந்தனர்.

மதுசன் 6ஓட்டங்களைப் பெற்ற நிலை யில் சஜீந்திரனின் பந்தில் ஜெகனிடம் பிடிகொடுத்து வெளியேற பெண்டில்கரன் (5) கவாஸ்கரின் பந்தில் 'எல்.பி.டபிள்யூ' முறையில் வெளியேறினார்.

நிகேதன் மிகச் சிறப்பாக ஆடி 98 பந் துகளில் 49ஓட்டங்களைப் பெற்று கமில் டனின் பந்தில் நவதீபனிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அணித்தலைவர் ஸ்ரீகுகன் ஒரு ஓட் டத்தைப் பெற்று ஏமாற்ற நிரோசன், சேர லன் ஆகியோர் சிறப்பாக ஆடினர். நிரோ சன் 31ஓட்டங்களுடனும், சேரலன் [illegible] ஓட் டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடுத் துக் களமிறங்கிய பிரியலக்ஷன் ஓட்ட மெதனையும் பெறாமலும் பெஞ்சமின் ஒரு ஓட்டத்துடனும் வெளியேறினர். கோமளதரன் ஒரு ஓட்டத்துடன் ஆட்டம் இழந்தார்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய சஜீந்திரன் 15ஓவர்கள் பந்து வீசி 3விக்கெட்டுக்களையும், கமில்டன் 12 ஓவர்கள் பந்து வீசி 3விக்கெட்டுக்களை யும், மனோஜ் 2விக்கெட்டுக்களையும், கவாஸ்கர் ஒரு விக்கெட்டினையும் கைப் பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்து ஆடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி நேற்றைய நாள் முடிவில் 3விக்கெட்டுக்களை மாத் திரம் இழந்து 113 ஓட்டங்களுடன் வலு வான நிலையில் உள்ளது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் கள மிறங்கிய கமில்டனின் அதிரடியான அரைச்சதத்தால் (59) பற்றிக்ஸ் கல்லூரி வேகமாக ஓட்டங்களைக் குவித்தது.

மனோஜ் 18ஓட்டங்களையும் ருடர் 8ஓட்டங்களையும் பெற்ற நிலையில் நிரோசனின் பந்தில் ஆட்டமிழந்தனர்.

ஜெகன் 6ஓட்டங்களுடன் பிரசோ பனால் 'ரன்அவுட்' செய்யப்பட்டு வெளி யேற்றப்பட்டார்.

கமில்டன் 59ஓட்டங்களையும் மைக் கல் ஒரு ஓட்டத்தையும் பெற்ற நிலையில் நேற்றைய நாள் ஆட்டம் நிறைவடைந் தது.

இன்று போட்டியின் இரண்டாம் நாளும் இறுதி நாளுமாகும்.

(6-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பாடல் யுகத்தின் புதையலாக
# யாழ்ப்பாணத்தில் 'மினி இன்போரெல்' கண்காட்சி

"அண்டா கசம்! அபூகா கசம்! திறந்திடு சீசேம்!" என்ற மந்திரச் சொல்லை உச்சரித்த மறுநொடியே திறந்துகொள்ளும் தங்கப்புதையலைத் தன்னுள் கொண்டுள்ள குகையை எம்.ஜி.ஆரின் பழைய படமொன் றில் பார்த்திருப்பீர்கள். அதுபோலவே இன்றைய இளைஞர்களுக்கு மிகவும் அவசியமானதும் அவர்களது ஆற்றல்களைத் துரித வேகத்தில் உயர்த்துவதற்கு வழிகோலக்கூடியதுமான தகவல் தொழில்நுட்ப புதையலை அடைவதற்கான மந்திரச்சொல்தான் 'மினி இன்போரெல்' கண்காட்சி.

யுத்தத்தின் சத்தங்களால் எங்கள் காதுகள் அடைபட்டுக்கிடந்த அதேகணத்தில் குடாநாட்டு மக்களுக்கான எந்தவொரு வெளித்தொடர்பும் சரிவரக் கிடைக்க வில்லை. இதனால் உலகத்தின் வேகத்தோடு ஒத்திசைந்து ஓடுவதற்கு எம்மால் முடியாமலிருந்தது. எமக்குப் பக்கத்தி லுள்ள இந்தியாவில் - ஏன் எமது தலைநகர் கொழும்பில்கூட - சகல அலுவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட காலத்தில்தான் நாங்கள் ஒரு விநோதப் பொருளைப் போல கணனியைக் கண்டுகொள்ள முடிந்தது. இதனால் உலகமயமா தலின் மூலம் எல்லா நாடுகளும் தமக்கிடை யேயான வலையமைப் புகளை இறுக்கப் பிணைத் துக்கொண்டு கிராமங்கள் போல சுருங்கி முன்னே றிக்கொண் டிருந்தன. ஆனால் தகவல் தொடர் பாடல் என்ற ஓட்டப் பந்த யத்தில் குடாநாட்டில் இளைய தலைமுறை யினர் இளைக்க இளைக்க வெகு தொலை வில் பின்தங்கியே நின்றனர். குடாநாட்டுக்கான சகல பொருள்களும் எடுத்துவரப்படும் காலத்தில்கூட தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பொருள்களை யாழ்ப் பாணத்துக்குக் கொண்டுவருவதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கவே செய்தன. பாதுகாப்புக் கெடுபிடிகளும், அதிஉயர்வான விலைப்பெறுமதிகளும் இத்தகைய தொழில்நுட்பம்சார் பொருள்கள் யாழ்ப்பாணம் வருவதற்குப் பெருந்தடையாக இருந் தன. ஆயினும் கணனி மற்றும் ஏனைய தொழில்நுட்பம்சார் விடயங்களை அறிந்துகொள்வதி லும் அவை பற்றிய தேடல்களில் ஈடுபடவும் எமது இளை ஞர் யுவதிகள் பெரும் விருப் புடையவர்களாகவே இருந்தனர்.



அந்த விருப்புகளுக்குத் தீனி போடுவதுபோல இப்போது காலம் கனிந்திருக் கிறது. பாதை திறந்திருக்கிறது. யாழ்.நகரில் முதல்முறையாகத் தகவல் தொழில்நுட் பம்சார் கட்புலப் பொருள்களைக் காட்சிப்படுத்தும் வகையிலும் அவை தொடர்பான புதிய உயர் கற்கைகளை அறிந்துகொள்ளும் வகையிலும் கையைக் கடிக்காத சலுகை விலையில் தொழில்நுட்பம்சார் பொருள்களை ஒரே கூரையின்கீழ் பெற்றுக் கொள்ளவும் யாழ்ப்பாணத் தில் வேம்படி மகளிர் கல்லூரி யில் நேற்று ஆரம்ப மான 'மினி இன்போ ரெல்' தகவல் தொழில் நுட்பக் கண்காட்சி வழிகோலி யிருக்கிறது.



தொகுப்பு: ஒளண்யன்

இலங்கை யில் - நாடளாவிய ரீதியில் - நடைபெற விருக்கின்ற 'இன் போரெல்' கண்காட்சி யின் முன்னோடி யாகவே இந்நிகழ்வு யாழ்ப் பாணத் தில் இலங்கைத் தகவல் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப முகவராண்மை அமைப்பு இணை ஏற்பாட் டாளராகப் பங்குகொண்டு வெகுசிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

55இற்கும் அதிகமான காட்சிக்கூடங்களில் விதவிதமான நவீன தொழில்நுட்ப சாதனங்களும், கணனி வகை களும், கைத் தொலை பேசி களும் பார்வை யாளர்களாகக் குவிகின்ற மாணவர்களையும், மாணவிகளையும், இளைஞர்களையும், யுவதிகளையும் மட்டுமல்லாது சகலரையும் சுண்டி இழுக்கின்றன. வெறுமனே பார் வைக்கு மட்டும் கவர்ச்சியாக இல்லாமல் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் எல்லாப் பொருள்களுமே ஒவ்வொரு வகையிலும் இளைய தலைமுறையின் தகவல் தொடர்பாடலை உயர்த்தும் வல்லமை மிக்கவை.



தனியே காட்சிப் பொருள்களோடும், அவற்றின் சலுகை விலையிலான விற்பனையோடும் நின்றுவிடாது மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைப் பாதையினைச் சரிவர அமைத் துக்கொள்வதற்கான தொழில்நுட்ப வழிகாட்டல் கருத்தரங்குகளும், நெறிப்படுத்தல்களும் தேர்ச்சிமிக்க வளவாளர்களால் சீரிய முறையில் சகலருக்கும் வழங்கப்படுகின்றன. இதனூடாகத் தமது கல்விக்குப் பின்னர் வாழ்க்கைக்கு உதவக்கூடிய தொழில்முறைக் கல்வியை எவ்வித சிக்கலுமின்றி சரியான முறையில் தேர்வு செய்யக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதுதவிர இன்று எல்லோருடைய கரங்களிலும் சிணுங்கிக் கொண்டிருக் கின்ற கைத்தொலைபேசிகளின் அலைவரிசைப் பரிவர்த்தன இரகசியங்களையும் விலாவாரியாக அறிந்துகொள்ள முடிகிறது. கரும்புதின்னக் கிடைத்த கைக்கூலிபோல கண்காட்சியைப் பார்க்கும் எல்லோருக் கும் பரிசுகளும் இலவச 'சிம் கார்ட்டு' களும் காத்திருக்கின்றன.

கண்காட்சியின் அச்சுஊடக அனு சரணையாளர்களான உதயனின் காட்சிக்கூடம், மற்றைய காட்சிக்கூடங் களை விட வும் தனித்து வமாகத் தெரிவதைக் குறிப்பிட்டே யாகவேண் டும். அதிலும் இரத்தத் திலும் சோதனை களிலும் தோய்ந்து போன உதயனின் துயர்நி றைந்த நெடிய பயணம் புகைப்படங் களால் காட்சிப் படுத்தப்பட் டிருப்பது பார்வை யாளர்களி டம் அதிக தாக் கத்தை உண்டு பண்ணுகிறது.

மொத்தத்தில் எல்லோருக்குமான தகவல் தொழில்நுட்பப் பெரும் புதையல் வேம்படி மகளிர் கல்லூரியில் - 'மினி இன்போரெல்' கண்காட்சியில் - மூன்று நாள்களுக்குக் காத்திருக்கின்றது. அந்தப் புதையலைக் கண்டடைந்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் முன்னேற்றமடைய நீங்கள் தயாரா?

படங்கள்: கரன்

## புதியதோர் வாழ்வுக்கான சந்தர்ப்பம்

### - ஜனாதிபதி வாழ்த்து -



இந்த நிகழ்வை யாழ்ப்பாணத்தில் நடாத்தி, அப்பிரதேசத்தில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை முன்னேற்றுவதற்காக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் தொழில் சம்மேளனம் முன்னெடுத்திருக்கும் இந்த முயற்சி காலத்திற்கேற்றதும் பாராட்டுக் குரியதுமாகும். இந்த நிகழ்வு பூகோலமய மான உலகின் சவால்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அறிவின் பலத் தோடு முகங்கொடுப்பதற்கான வாய்ப்பை வடக்கிலின் எல்லா பிரதேசங்களிலும் வாழும் மக்களுக்கும் பெற்றுக்கொடுக்கின்றது.

இந்நிகழ்வில் மிகவும் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் கைதடி, தெல் லிப்பளை, செட்டிக்குளம் போன்ற பிரதேசங் களில் அண்மையில் புனர்வாழ்வு வசதியளிக் கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன் பயிற் சியும் புத்தாக்கம் மற்றும் தொழில் முயற்சி களுக்கான வாய்ப்பும் கிடைப்பதாகும். இதன் மூலம் இந்த மக்களை சமூகத்திற் குள் மீள ஒருங்கிணைத்து, அவர்களது சொந்த முன்னேற்றத்திற்கும் தேசிய தொழிற் படைக்கும் அவசியமான திறன்களை வழங்கி புதியதோர் வாழ்க்கையை ஆரம் பிப்பதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு பெற்றுக்கொடுப்பது மிகவுமே முக்கிய மான விடயமாகும்.

பாடசாலையை விட்டு விலகியவர்களும் தமக்கு பொருத்தமானதொரு தொழிலைத் தெரிவு செய்துகொள்ளும் வகையில் அவர் களது பலத்தை கண்டறிந்து கொள்வதற்கு எற்றவிதத்தில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தொழில் வழிகாட்டல் நிகழ்ச் சித் திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டிருப் பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இது இப்பிரதேசத்திலுள்ள திறன்க ளைப் பயன்படுத்தி யாழ்ப்பாண வர்த்தக சமூகம் அவர்களது வர்த்தக நடவடிக்கை களை மேம்படுத்துவது தொடர்பாக அர்த்த முள்ள கலந்துரையாடல்களை மேற்கொள் வதற்கான ஒரு தளத்தை அமைத்துக் கொடுக் கும் என்பதிலும் எவ்வித சந்தேக மும் இல்லை.

## வேலைவாய்ப்புக்காக உந்துசக்தியாக 'மினி இன்போரெல்' அமையும்

### - விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண -



கண்காட்சியின் சாதாரண அம்சங் களுக்கு மேலதிகமாக, விசேட அம்சங்க ளாக தகவல் தொழில்நுட்ப பாட நெறிவழிகாட்டல், தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் திறமை விருத்தி, கற்பனை வளம், தனி முயற்சி மற்றும் FITIS வர்த்தக கருத்தரங்கும் ஒழுங்கு செய்யப்பட் டுள் ளமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இது யாழ்ப்பாண மக்களுக்கு, தகவல் தொழில் நுட்ப துறைக் குள் பிரவேசிக்க வும், தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யவும், வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளவும் உந்து சக்தியாக அமையும் என் பதில் ஐயமில்லை. நான் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள முடி யாமையையிட்டு வருந்தும் அதே வேளை, இந்த நிகழ்ச்சி ஒருங்கமைப் பாளர் களுக்கும் யாழ் மாவட்ட மக்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள் கிறேன். யாழ் ப்பாண மக்கள் கடந்த கால யுத்தத்தி னால் இழந்த சந்தர்ப்பங்கள் மற் றும் வசதி களை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வார்கள்.

**தகவல் தொடர்பாடலின் புதிய திசையை நோக்கி....**
**மினி இன்போரெல் - யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கொக்குவில் கணக்காய்வு

மேற்படி ஆலயத்தின் 2009 ஆம் நிதியாண்டின் (01.01.2009 தொடக்கம் 31.12.2009 வரையிலான) வரவு - செலவு கணக்கினைப் பரிசோதிப்பதற்கு, பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து 06.03.2010 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களை ஆலயப்பணி மனையில் ஆலயம் திறந்திருக்கும் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில். (95121) செயலாளர்.


## நல்லூர் சரவணா ரெக்ஸ்



புதுக்கடை வியாபாரமும் மலிவு விற்பனையும்

★இந்தியன் திருமண பட்டு சாறிகள்
★சீக்குன் சாறிகள்
★சில்க் சாறிகள்
★கொட்டன் சாறிகள்
★சில்க் பஞ்சாபி துணிகள்
★கொட்டன் பஞ்சாபி துணிகள்
★பாகிஸ்தான் பஞ்சாபி
★கொட்டன் துணி
★மற்றும் இந்தியன் விதம்விதமான சாறிகள் மற்றும் ரெடிமேற் ஆடைகள் பெற்றுகொள்ள

குறிப்பு:
தினசரி காலை 8 மணிமுதல்
இரவு 8 மணிவரை
வியாபாரம் நடைபெறும்

**Nallur Saravana Tex**

526, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(பின் வீதி)
சிவன்கோயில் அருகில்,
யாழ்ப்பாணம். (சி/564964)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



27 ☆ 02 ☆ 2010

செல்வன் பார்த்தீபன் கோபீசன்

கைதடி கிழக்கைச் சேர்ந்த பார்த்தீபன்-குகாமினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கோபீசன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (27.02.2010) சனிக்கிழமை தமது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.



இவரை சகல சம்பத்துக்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துவோர்:
திரு.திருமதி. பார்த்தீபன்

'குககிரி', கைதடி கிழக்கு.
கைதடி. 021 321 6394 (95124)

## பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.03.2010 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை 50 ரூபாவாக அதிகரிக்கவுள்ளது. பால் உற்பத்தியாளரின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் முகமாக பாலின் கொள்விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விற்பனை விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அரிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (அ/65141)

## ஓராண்டு நீங்காத நினைவலைகள்




தோற்றம் 15.10.1931 — திருமதி — மறைவு 09.03.2009

**மயில்வாகனம் பூரணபாக்கியம**

அன்பாக அரவணைத்து அறிவுதனை எமக்கு ஊட்டி
பண்பிலே சிறந்து விளங்கிய
- எம் அம்மாவே!
உம்போலும் உத்தமரை உலகினிலே யாம் இனிமேல்
எப்போது காண்போம் எம்மினிய தாயாரே!

டாக்டர் செல்லத்துரை வீதி,
சங்கரத்தை. (95128)
என்றும் நினைவுடன்...
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



தாவடியைப் பிறப்பிடமாகவும், தற்போது லண்டன்,
கிறவுளி மாநகரின் சொர்ண காமாட்சி
அம்மன் ஆலய பிரதம குருவும்
முன்னாள் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தான பிரதம குருக்களுமாகிய
வேதாகம சங்கிரகர், முத்ராகலா வித்தகர்

பிரம்மஸ்ரீ

**சுவாமிரத்ன சர்மா சுந்தரேசக் குருக்கள்**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு,
ஐயா அவர்களது ஆத்மா வேங்கடேச வரதராஜப்
பெருமாளின் பாதார விந்தங்களில் நித்தியமாக
இருக்க அருளுமாறு பெருமாளைப்
பிரார்த்திக்கின்றோம்.

(அ/56140)

**வண்ணை ஸ்ரீ வேங்கடேச பெருமாள்
கோயில் ஆதீன மகா சபை
நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள்.**

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மக்கள் யுத்த காலத்தைவிட தற்போது மிகமோசமாக வாழ்கின்றனர்

## 'பிள்ளையான்' - கட்சியின் வன்னி முதன்மை வேட்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப்.27

வன்னிப் பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் யுத்த காலத்தில் வாழ்ந்ததை விட மிகவும் மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் கட்சியின் பொதுச்செயலாளரும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடவுள்ளவருமான எம்.சில்வா கைலேஸ் சிவராசா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வேட்புமனுத் தாக்கலை மேற்கொண்டுவிட்டு ஊடகவியலாளர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வன்னியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் நிலையை நேரில் சென்று பார்த்தோம். மிகவும் பரிதாபமான முறையில் தமது வாழ்வாதாரத்தை நகர்த்துகிறார்கள். அந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டிய தார்மீகக் கடமை எம் அனைவருக்கும் உள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமது தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி வன்னி மாவட்டத்தில் போட்டியிடுகின்றது. மக்கள் எமது கட்சியின் உறுப்பினர்களுக்கு வாக்களித்து எமது அணியை வெற்றிபெறச் செய்தால் அரசியல் ரீதியாக எமது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவோம்-என்றார். (ஒ-9)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.27

கல்வியங்காடு ஜே/259 கிராம அலுவலர் பிரிவின் ஓய்வுபெற்ற கிராம அலுவலர் சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமியின் சேவை நயப்புப் பாராட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஞான பாஸ்கரோதய சங்க மண்டபத்தில் இடம் பெறும்.

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கத் தலைவர் நா.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கோப்பாய்ப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் சு.மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலர் செ.செல்வச்சந்திரன், கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவுத் தலைவர் கோ.சிவசுந்தரமூர்த்தி, ஞானபாஸ்கரோதய சங்கத் தலைவர் ஜி.ரி.ஞானசேகர வேல், கோப்பாய் மத்தியஸ்தர் சபை உறுப்பினர் கெ.காண்டீபன் உள்ளிட்டோர் கலந்து கொள்வர். (50-14)

## 'மாக்பெட்' எரிபொருள் நிலையத்துக்கு புதிய நிலத்தடி எண்ணெய் தாங்கி

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்.நகரில் 'மாக்பெட்' எரிபொருள் விற்பனை நிலையத்தில் மீண்டும் மண்ணெண்ணெய் விநியோகம் ஆரம்பிக்கப் படவுள்ளது.



இதற்கெனக் கொழும்பில் இருந்து பாரிய நிலத்தடி எண்ணெய் தாங்கி ஒன்று கனரக வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் ஏற்கனவே இருந்த மண்ணெண்ணெய் தாங்கியில் துவாரம் ஏற்பட்டமையால் மண்ணெண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டிருந்தது.

தற்போது எடுத்துவரப்பட்டுள்ள புதிய தாங்கியைப் பொருத்தும் பணிகள் முடிவடைந்ததும் மண்ணெண்ணெய் விநியோகம் ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப் பட்டது. (50-24)

## கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் மார்ச் முதல் வாரத்தில் அக்குபஞ்சர் சிகிச்சை

வண்ணை, பெப்.27

கைதடி, சுதேச சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் கொரியன் அக்குபஞ்சர் விசேட சிகிச்சைகள் மார்ச் மாதம் 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாகப் பொறுப்பதிகாரி திருமதி பிரேமா சிவசண்முகநாதன் தெரிவித்தார்.

மேற்படி மூன்று தினங்களிலும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை கொழும்பு, திணைக்கள தலைமையகத்திலிருந்து வருகை தரும் விசேட வைத்திய நிபுணர்கள் சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கொரியன் அக்குபஞ்சர் சிகிச்சைகளைப் பெறவிரும்பும் நோயாளர்கள் இச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் பயன் படுத்திக்கொள்ளுமாறு வைத்தியப் பொறுப்பதிகாரி தெரிவிக்கின்றார். (50-ரி-160)

## 'சலங்கையின் ஜதிகள்' நடன அளிக்கைகள்

யாழ்ப்பாணம், பெப்.27

திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் 'சலங்கையின் ஜதிகள்' என்னும் நடன அளிக்கைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவவும், சிறப்பு விருந்தினராக யாழ்.இந்துமகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி வே. பேரின்பநாதனும் கலந்து சிறப்பிப்பார்கள்.

'சலங்கையின் ஜதிகள்' நிகழ்வானது கலைத்தூது அழகியல் கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், கல்லூரியில் நடனம் பயில்கின்ற மாணவர்களின் திறன்களை வெளிக்காட்டும்முகமாகவும் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (50)

## கோம்பையன் மணல் மயானத்துக்கு முன்பாக எந்நேரமும் முறிந்து விழும் நிலையில் மின்சார, தொலைபேசிக் கம்பங்கள்

சண்டிலிப்பாய், பெப்.27

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் கோம்பயன் மணல் மயானத்திற்கு முன்பாக உள்ள பல தொலைபேசி, மின்சாரக் கம்பங்கள் எந்த நேரமும் முறிந்து விழும் நிலையில் இருக்கின்றன. மக்கள் போக்குவரத்துச் செய்யும் பிரதான வீதியில் அமைந்துள்ள இக்கம்பங்கள் அகற்றப்படாதமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் ஊடாக காரைநகருக்குச் செல்லும் பிரதான வீதியால் இ.போ.ச.பஸ்கள், மினி பஸ்கள் உட்பட நூற்றுக்கணக்கான வாகனங்கள் தினமும் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

மக்கள் போக்குவரத்து அதிகரித்துள்ள இவ்வீதியில் கோம்பயன்மணல் மயானத்திற்கு முன்பாக உள்ள பல பழைய மின் கம்பங்கள் சிமெந்து உடைந்து கம்பிகள் தெரியும் நிலையில் காணப்படுகின்றன. எந்த நேரத்திலும் இக்கம்பங்கள் முறிந்து விழுந்து மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் இருப்பது குறித்து அச்சம் தெரிவித்துள்ள பொதுமக்கள், சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்கள். (50-ரி-115)




## நிவாரண விநியோகம் தொடர்பாக உலக உணவுத் திட்டக்குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.27

உலக உணவுத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்டு வரும் நிவாரணப் பொருள்களின் விநியோகத்தை உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் பார்வையிட்டு வருகின்றனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்படும் இந்த உலக உணவுத் திட்டத்தின் கீழான நிவாரணப் பொருள்கள் உரிய முறையில் விநியோகிக்கப்படுகின்றனவா என இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் பல்வேறு இடங்களுக்கும் சென்று ஆராய்ந்து வருகின்றனர்.

விநியோகிக்கப்படும் பொருள்களின் நிறை, அவற்றின் தரம் என்பனவும் இவர்களினால் சோதனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

## லாண்ட் மாஸ்ரர்-சைக்கிள் விபத்தில் குடும்பப் பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.27

லாண்ட் மாஸ்ரரும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை 6மணியளவில் கோப்பாய் கிருஸ்ணன் கோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நீர்வேலிப் பகுதிக்கு உறவினர் வீட்டிற்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த உரும்பிராய் மேற்கு, அன்னங்கையைச் சேர்ந்த ஸ்.ஜெயா (வயது 36) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தவர் ஆவார்.இவர் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ரி-78)

## மீலாதுன் நபி தினப் போட்டி பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், பெப்.27

மீலாதுன் நபி தினப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனாப், எம். எஸ்.ஏ.எம். முபாரக் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக அரபு, இஸ்லாமியத்துறைத் தலைவர் அஷ்ஷெய்ஹ் எம்.எஸ்.அப்துல்பாரி, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்ப்பாண கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி வ. சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (50-14)

## ஆயுள்வேத மருத்துவக் கண்காட்சி ஒத்திவைப்பு

வண்ணை, பெப்.27

சுதேச வைத்திய அமைச்சு மற்றும் ஆயுள்வேத திணைக்களம் என்பன இணைந்து கைதடி, அரச ஆயுள்வேத போதனா வைத்தியசாலையில் நடத்தவிருந்த மருத்துவக் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கண்காட்சி ஏப்ரல் மாத இறுதி வாரத்தில் நடைபெறுமென இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதியிலும் அடுத்த மாத முற்பகுதியிலுமாக மூன்று தினங்கள் இக்கண்காட்சி நடைபெறுவதாக இருந்தது.

மருத்துவக் கண்காட்சியில் வடக்கு, கிழக்கு மற்றும் தென்பகுதிகளைச் சேர்ந்த 40இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்று தமது காட்சிக்கூடங்களையும் விற்பனை நிலையங்களையும் அமைக்க விருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-ரி-160)




யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் புதிய விளையாட்டு மைதானம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் அழைத்து வரப்படுவதை முதல் படத்திலும் [illegible] மைதான நுழைவாயிலை நாடாவெட்டித் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும், நல்லூர்ப் பிரதேச செயலர் ப[illegible] பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: நந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

தெல்லிப்பழை, சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு அண்மையில் 5பரப்புடன் கூடிய 3அறைகள், குசினி, மண்டபம், கிணறு கொண்ட வீடு விற்பனை செய்யப்படவுள்ளது. உத்தேச மதிப்பீடு 18லட்சம்.

விவரங்களுக்கு: 0717524218 (C/565134)

## விற்பனைக்கு

இசுசு ரிப்பர் 68 xxxx 1கியூப் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771754667 (95038)

## தேவை - விற்பனைப்பிரதிநிதி (Sales Rep)

தேயிலை நிறுவனம் ஒன்றிற்கு தேயிலை விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளத்துடன் ஊக்குவிப்புக் (Commission) கொடுப்பனவும் உண்டு. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

* Accounts Clerk

பிரத்தியேகமாக இத்துறையில் கல்வி கற்றோர் விரும்பத்தக்கது.

தங்களின் சுயவிவரக்கோவையைக் கீழ்க்காணும் முகவரிக்கு 03.03.2010ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர், 248, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (95030)


# நூலகக் கற்கைக்கான நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், பெப்.27

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் மட்டம் 1 கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு மார்ச் மாதம் 6 ஆம் திகதி காலை9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப் பித்தவர்கள் தகைமைச் சான்றுகளின் மூலம் பிரதிகளுடன் சமுகமளிக்குமாறு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கேட்டுள்ளார். (50-10)

# நந்திக்கொடிகள் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.27

இந்து ஆலயங்களின் கும்பாபிஷேக வைபவங்கள் மற்றும் வருடாந்தத் திருவிழாக்கள் என்பவற்றுக்கான இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் நந்திக் கொடிகள் விநியோகிக்கப்படுகின்றன.

இவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆலய பரிபாலன சபையினர், தலைவர், செயலாளர் ஒப்பமிட்ட கடிதம் மற்றும் கும்பாபிஷேக, வருடாந்தத் திருவிழாக்களை உணர்த்தும் விஞ்ஞாபனங்கள் என்பவற்றைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்து ஒரு சிறு எண்ணிக்கையிலான நந்திக் கொடிகளை நேரில் பெற்றுக் கொள்ளலாம் எனத் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)


## கருங்கல்லுச் சல்லி

கட்டட நிர்மாணங்களுக்குத் தேவையான கருங்கல்லுச் சல்லி பெற்றுத்தரப்படும்.

தொ.பே.இல: 0771754667 (95039)

## விற்பனையும் திருத்தமும்

வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப்பாவனைக்குமேற்ற திண்டுக்கல் இரும்புப் பெட்டகங்கள் விற்பனைக்குண்டு. சகலவிதமான பழுதடைந்த இரும்புப் பெட்டகங்களும் சிறந்த முறையில் திருத்தியமைத்துக் கொடுக்கப்படும்.

இல. 13, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (94999)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 0212228093,
E.mail: allianc.jaffna@yahoo.com

## Learn French the French Way
## French Classes

சர்வதேச மொழியான French மொழி யாழ்ப்பாணத்தில் French Embassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரஞ்சு கலாசார மையத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது.

எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

விரிவுரையாளர்கள்: பிரான்ஸியரும், பிரெஞ்சில் தகைமை பெற்றோர்களும். (95109)

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப்பெறலாம்.


# புலோலிப் பாடசாலையில் இன்று கண்காட்சி

வடமராட்சி, பெப்.27

பருத்தித்துறை பிரதேச நிலையத்தால் நடத்தப்படும் தொழிற்திறன் கண்காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கிராம அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் திருமதி அ.ஜெயராஜன், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி உமாசுபலிங்கம், உதவித்திட்டப் பணிப்பாளர் திருமதி த.ஜெயராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-236)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

## றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY: ROYAL Industries
Colombo 12
T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## இராமகிருஸ்ணன் நாகராசா (பத்தர்)

திதி: சதுர்த்தசி (27.02.2010)

தோற்றம்
01★06★1949

மறைவு
01★03★1999

அன்பெனும் ஒன்றினால் மட்டுமே
எம்மை ஆளாக்கி
உயர்வடையச் செய்த எம் அப்பாவே!!
உம்மை நாம் இனி எப்பிறப்பில் காண்பது?
ஆண்டுகள் பதினொன்று சென்றாலும்
உங்களுக்கு நிகராக யாருமில்லை
உங்கள் நினைவுகள் மட்டுமே எமக்கு
ஆசியுடன் என்றும் உள்ளது.

88/25, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
ஸ்ரீ லக்சுமி ஜூவலறி
162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
15 ★ 07 ★ 1922



மறைவு
28 ★ 01 ★ 2010

## அமரர் முருகர் ஐயாத்துரை பொன்னப்பா

கடந்த 28.01.2010 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து எமக்கு சகல வழிகளிலும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு. நாளை (28.02.2010) ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் கொழும்பில் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

34/4, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.
0776171519.

குடும்பத்தினர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
15 . 05 . 1925

விண்ணில்
26 . 01 . 2010



## திருமதி சின்னத்துரை செல்லாச்சி

அன்பான உங்களது பாசமொழி எம்
அகந்தன்னில் என்றென்றும் ஒலிக்குதம்மா!
வேராக நீரிருந்த எம் குடும்பம்-இன்று
தீராத வேதனையில் துடிக்குதம்மா
ஆறாத சோகமது எமை வாட்ட
ஆறாகக் கண்ணீர் பெருகுதம்மா
எம் உயர்வுக்காய் அரும்பாடுபட்ட
எம் அன்புத் தெய்வமே!
மண்ணுலகில் மாட்சியுடன் நாம் மிளிர எமை
கண்ணெனக் காத்து நின்ற தாயே!
மீண்டும் ஒரு பிறப்பு உண்டாயின்-எம்
மனையிற் பிறந்து மனவருத்தம் தீருங்கள்
கண்ணீர் சொரிந்து இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

கடந்த 26.01.2010 அன்று இறைபதமடைந்த எம் அன்புத் தெய்வத்தின் மரண நிகழ்வில் பங்குபற்றியோருக்கும் இரங்கல் தெரிவித்தோருக்கும் மற்றும் பல்வேறு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்: பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(ச/565139)


## Jaffna College Institute of Technology
Vaddukoddai, Sri Lanka

பின்வரும் பாடநெறிகள் மார்ச் - 2010 முதற்கிழமை தொடங்கவுள்ளது.

Certificate Craft Courses (தமிழ் மூலம்)

- Refrigeration & Air-Conditioning Mechanic (குளிரூட்டுதல் பயிற்சி
- Automobile Technology (மோட்டார் வாகன தொழிநுட்பம்)
- Machine shop Practice (லேத் வெல்டிங் பயிற்சி)

*Duration : 1 Year (full time)*

- Electrician (வீட்டு மின் இணைப்பும் நிர்மாணமும்)
- Radio & T.V Servicing (றேடியோ ரீவி பழுதுபார்த்தல்)
- Electrical & Electronics

*Duration : Six months (full time)*

- அரச "Tertiary and Vocational Education Commission" ஆல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

Email:jcit @sltnet.lk

DIRECTOR
Jaffna College Institute of Technology
Vaddukoddai.

Tel.Phone:021-2228275
021-3213139


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னம்பலங்களின் வெளியேற்றங்களும் தமிழ் மக்களின் தீர்ப்புகளும்

ஊடகவியலாளர்
இரா. துரைரெத்தினம்
(சுவிஸ்)


குமார் பொன்னம்பலம்

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியேறிவிட்டார் என்ற செய்தி தமிழ் மக்களின் அரசியல் தலைமையைப் பிளவுபடுத்திச் சிதைக்க வேண்டும் என கங்கணம் கட்டி செயற்பட்டு வந்தவர்களுக்கு மிக உவப்பான செய்தியாக இருந்தாலும் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்துப் பலமான அரசியல் தலைமை ஒன்று உருவாக வேண்டும் என உழைத்தவர்களுக்கு மிகுந்த வேதனை தருகின்ற விடயம்தான்.

காலத்தின் தேவை கருதி பலமான அரசியல் தலைமை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உருவாக்கத்திற்காக உழைத்த நண்பர் சிவராமின் ஆத்மா இந்தச் செய்தியைக்கேட்டு நிச்சயம் துடித்திருக்கும் என்பது மட்டும் உண்மை.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் வெளியேறிய


சிவராம்

மைக்கு அவர் தெரிவித்த காரணங்கள் பற்றிப் பார்ப்பதற்கு முதல் கடந்த காலங்களில் பொன்னம்பலங்களின் வெளியேற்றங்களும் அரசியல் நடவடிக்கைகளும் பற்றிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எதிர் வரும் பொதுத்தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தி, வரும் ஆலோசனைக்கூட்டம் கடந்த ஒருவாரத்திற்கு மேலாக நடந்து வந்திருக்கிறது. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் வேட்பாளர்கள் தெரிவு நிறைவடைந்த நிலையில் அதற்கு கஜேந்திர குமார் பொன்னம்பலம் தமது பூரண ஆதரவை தெரிவித்திருந்தார்.

வன்னி மாவட்டம் மற்றும் யாழ். மாவட்டங்களுக்கான வேட்பாளர் தெரிவு நடைபெற்ற போதே கஜேந்திரகுமார் அந்த வேட்பாளர் தெரிவில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வெளியேறியிருக்கிறார்.

இந்த வெளியேற்றக் காட்சியை ஒட்டி எனக்குக் கடந்த காலங்களில் பொன்னம்பலங்களின் வெளியேற்றங்கள் சில நினைவுக்கு வருகின்றன.

1976ஆம் ஆண்டு தமிழீழத் தனியரசுத் தீர்மானத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் நிறைவேற்றி அதை ஒரு பொதுஜன வாக்கெடுப்பாக முன்வைத்து 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டது அனைவரும் அறிந்த விடயம். அந்த நேரத்தில் அனைத்துத் தமிழர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கையின் கீழ் அணிதிரண்டிருந்தனர். ஆனால் குமார் பொன்னம்பலம் 1977ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு எதிராக யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டு படுதோல்வியடைந்தார் என்பது பலருக்கு நினைவிருக்கலாம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவின்போது எவ்வாறு வெளியேறினாரோ அதேபோல 1977ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் வேட்பாளர் தெரிவின் போதும் குமார் பொன்னம்பலம் வெளியேறி சர்ச்சை ஒன்றை உருவாக்கியிருந்தார்.

1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்காகத் தமிழர் விடுதலைக்கூட்டணி தொகுதி ரீதியாக வேட்பாளர் தெரிவில் ஈடுபட்ட போது( 1977ஆம் ஆண்டில் தொகுதி வாரியான தேர்தலே நடைபெற்றது) வட்டுக்கோட்டை, நல்லூர், கிளிநொச்சி தொகுதிகள் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் யாழ்.மாவட்டத்தில் ஏனைய தொகுதிகளில் தமிழரசுக்கட்சியைச்சேர்ந்தவர்களுக்கும் ஒதுக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 1970ஆம் ஆண்டு தேர்தலில் இந்த மூன்று தொகுதிகளிலுமே அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருந்தது. இதன் அடிப்படையிலேயே வட்டுக்கோட்டை, நல்லூர், கிளிநொச்சி தொகுதிகளில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்தவர்களை நிறுவத்துவது என முடிவு செய்யப்பட்டது.

அந்த வேட்பாளர் தெரிவுக்குழு நல்லூர் தொகுதிக்கு சிவசிதம்பரத்தையும், வட்டுக்கோட்டைத்தொகுதிக்கு குமார் பொன்னம்பலத்தையும், கிளிநொச்சித் தொகுதிக்கு ஆனந்தசங்கரியையும் நிறுத்துவதென முடிவு செய்த போது குமார் பொன்னம்பலம் பல நிபந்தனைகளை விதித்ததுடன் யாழ்ப்பாணத் தொகுதியே தமக்கு வேண்டும் என விடாப்பிடியாக இருந்தார்.

அதன் பின்னர் நல்லூர் தொகுதியில் அவரை நிறுத்துவதற்கு தெரிவு குழு ஓரளவிற்கு இணங்கி வந்த போதிலும் அதையும் நிராகரித்த குமார் பொன்னம்பலம் தான் யாழ்ப்பாணத்தொகுதியிலேயே போட்டியிடப்போகிறார் எனக் கூறி தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறினார்.

அந்த நேரத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியில் பிளவுகள் ஏற்படுவதையோ, தமிழ் மக்களின் ஒற்றுமை சிதைவடைவதையோ விரும்பாத பல பிரமுகர்கள் குமார் பொன்னம்பலத்தை சமாதானப்படுத்தி ஓர் இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவர் தமிழர் விடுதலைக்கூட்டணியிலிருந்து விலகி தனியாகப் போட்டியிடுவது என்பதில் உறுதியாக இருந்தார். அந்த நேரத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியை எதிர்த்து நின்று வெற்றி பெற முடியாது என்ற உண்மையைப் பலரும் எடுத்துக்கூறினர். ஆனால் அதற்குக் குமார் பொன்னம்பலம் இணங்கவில்லை.

இதன் பின்னர் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணத்தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் யோகேஸ்வரனும், எதிர்த்து குமார் பொன்னம்பலமும் போட்டியிட்டனர். அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரச்சாரங்களின் போது தமிழர் விடுதலைக்கூட்டணியையும் அவர்களின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் மிக மோசமாகத் தாக்கி பிரசாரங்களை மேற்கொண்டவர் குமார் பொன்னம்பலம்தான் என்பது அன்றைய அரசியலை அறிந்து கொண்ட பலரும் அறிந்த ஒரு விடயம்தான். அந்தத் தேர்தலில் குமார் பொன்னம்பலம் படுதோல்வியைச்சந்தித்தார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் உருவாக்கத்திலும் சரி, அதன் பின்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் உருவாக்கத்தின் போதும் சரி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியே ஏனைய கட்சிகளைவிட முரண்டு பிடித்து பல நிபந்தனைகளை விதித்து இந்த இணைப்புக்களுக்கு பின்னடித்தது என்பதையும் நாம் மறக்க முடியாது.

ஆனால் வடபகுதியை மட்டும் மையப்படுத்தியிருந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் அறியப்படாத - செல்வாக்கில்லாத - கட்சியாக இருந்ததுடன் மலையக தமிழ் மக்களால் வெறுக்கப்பட்ட ஒரு கட்சியாகவும் இருந்து வந்தது.

தமிழ்க் கட்சிகளில் மிகவும் பழமை வாய்ந்த கட்சி என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி கூறப்படுகின்ற போதிலும் கிழக்கு மாகாணத்தில் அக்கட்சி - முக்கியமாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் - ஒரு போதுமே கால் வைத்ததும் இல்லை, தேர்தலில் போட்டியிட்டதும் இல்லை. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வடமாகாணத்தை முக்கியமாக யாழ்.மாவட்டத்தை மையப்படுத்தியே தனது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கிறது. ( மேற்குலக நாடுகளில் உள்ள சிலர் இன்று நினைப்பது போல அவர்களும் அந்த நேரத்தில் யாழ்ப்பாணம் மட்டும் தான் தமிழ் ஈழம் என நினைத்திருக்கலாம்)

1972ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் சிறிலங்காவை குடியரசாக பிரகடனப்படுத்தி புதிய அரசமைப்பை கொண்டுவந்த போது அதற்கு தமிழரசுக்கு கட்சி எதிர்ப்பை தெரிவித்த போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த அருளம்பலம், தியாகராசா ஆகியோர் சிறிமாவோ அரசிற்கு ஆதரவை தெரிவித்தனர். கிளிநொச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்து எதிர்ப்பை தெரிவித்தார். இதனைத்தொடர்ந்து தமிழ்க் கட்சிகளை இணைத்து ஒரு கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது அக்கட்சியின் முக்கியஸ்தர்களான சிவசிதம்பரம், ஆனந்தசங்கரி, வவுனியா சிவசிதம்பரம் உட்படப் பலர் ஆதரவு தெரிவித்த போதிலும் அக்கட்சியின் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் பல நிபந்தனைகளை விதித்து வந்தார் எனச் செய்திகள் வெளிவந்திருந்தன.

ஒருவாறு பிற்பட்ட காலத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் இணைக்கப்பட்டது.

அதேபோல 2000ஆம் ஆண்டு தமிழ் தேசியக்கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது ஏனைய கட்சிகளை விட அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியே பல நிபந்தனைகளை விதித்து சிக்கல்களை உருவாக்கியது.

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைக்கப்பட்டாலும் தமது கட்சியே அதற்குத் தலைமை தாங்க வேண்டும் என்றும் தமது கட்சியின் சின்னமான சைக்கிள் சின்னமே பொதுக்கட்சிக்கான சின்னமாக இருக்க வேண்டும் என்றும் நிபந்தனைகளை விதித்தனர். யாழ். மாவட்டம் உட்பட சில மாவட்டங்களில் தமது கட்சியைச் சேர்ந்தவர்களே தலைமை வேட்பாளர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளைக் கூட முன்வைத்தனர்.

சில கட்டங்களில் இவர்களின் நிபந்தனைகளினால் கோபமடைந்த சிவராம் தலைமையிலான ஊடகவியலாளர்கள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியுடனான பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறி வந்திருக்கிறார்கள்.

மிகவும் பலமான கட்சியாக வடக்கு, கிழக்கு மாகாணம் முழுவதிலும் திகழ்ந்த தமிழர் விடுதலைக்கூட்டணி விதிக்காத நிபந்தனைகளையும் நெருக்கடிகளையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அந்த நேரத்தில் கொடுத்திருந்தது என்பதைத் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் உருவாக்கத்தின் பின்னணியில் இருந்த ஊடகவியலாளர்களில் ஒருவனான நான் அனுபவபூர்வமாக அறிந்திருந்தேன்.

சரி அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஏன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது? இந்த வெளியேற்றம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் களத்தை பாதிக்குமா என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.


ஜீ.ஜீ. பொன்னம்பலம்

மட்டக்களப்பு, அம்பாறை திருகோணமலை மாவட்டங்களுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணிகள் நடைபெற்றபோது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவுக்குழுவில் இருந்து அந்த தெரிவுகளுக்கு முழுமையாக ஆதரவை வழங்கிய கஜேந்திர குமார் பொன்னம்பலம் அம்மாவட்டங்களின் வேட்பாளர் பட்டியல் தெரிவு நிறைவடைந்த பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் தெரிவு நடைபெற்ற வேளையிலேயே சில நிபந்தனைகளை வைத்தார் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

யாழ்.மாவட்டத்தில் வேட்பாளர் தெரிவின்போது தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகள் தமது கட்சிகளுக்குக் கிடைத்த விண்ணப்பங்களைத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பித்து அவற்றை ஆராய்ந்து கொண்டிருந்தன.

2001ஆண்டு இக்கட்சிகள் ஒன்றிணைக்கப்பட்ட போது ஒவ்வொரு கட்சிகளிலிருந்தே வேட்பாளர்களைத் தெரிவு செய்வதென்றும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு அவற்றின் முடிவுகளுக்கு கட்டுப்படாதபோது அவர்கள் மீது அந்தந்தக் கட்சிகளே ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.


கஜேந்திரகுமார்

ஆனால் 2004ஆம் ஆண்டு இதற்கு விதிவிலக்காக விடுதலைப்புலிகளும் தமக்கு ஆதரவான சிலரின் பெயர்களை சிபார்சு செய்த காரணத்தால் அந்த தேர்தலில் இந்த நான்கு கட்சிகளைச் சேராதவர்களும் கட்சி உறுப்பினர்கள் அல்லாதவர்களும் வேட்பாளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இம்முறை 2001ஆம் ஆண்டு தேர்தலின் போது எவ்வாறு கட்சிகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டதோ அதேபோன்றே இம்முறையும் கட்சிகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றே வேட்பாளர்களை தெரிவு செய்வது எனக் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னரே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முடிவு எடுத்த போது அதற்கு கஜேந்திர குமார் பொன்னம்பலமும் பூரண சம்மதத்தை தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்ட வேட்பாளர் தெரிவு நிறைவடைந்து யாழ்.மாவட்ட வேட்பாளர் தெரிவு நடைபெற்றுக்கொண்டிருந்த போது தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 'இலங்கையில் இரு நாடு' என்ற கோரிக்கையை முன்வைத்தே தேர்தலில்

*(16 ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 02

# வினாத்தாள் - II

நேரம் : 1மணி 15 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

* பின்வரும் பாடலைக்கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

சத்தம் தொடர்ந்து போட்டிடுமே
நித்தம் வெளியில் காட்டிடுமே
தத்தித் தத்திச் சென்றிடுமே
தண்ணீர் என்றால் ஒன்றிடுமே.

பாம்மைக் கண்டால் நடுங்கிடுமே
பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே
வீம்பாய் கத்திக் கெட்டிமே
விரோதி கண்ணில் பட்டிடுமே.

நதியில் நீச்சல் அடித்திடுமே
நாக்கால் பூச்சி பிடித்திடுமே
அதிகம் பேசி ஆடிடுமே
அழிவை அதுவே தேடிடுமே.

01. 1) இங்கே குறிப்பிடப்படும் பிராணி எது?
..........................................................................
2) மேற்படி பிராணி எச்சந்தர்ப்பத்தில் உரத்து சத்தமிடும்?
..........................................................................
3) இங்கு வந்துள்ள அடுக்கு மொழிச்சொல் எது?
..........................................................................
4) தண்ணீர் என்பதற்கு எதிர் கருத்துச்சொல் என்ன?
..........................................................................
5) வீம்பாய் கத்துதல் என்றால் கருத்து என்ன?
..........................................................................
6) கண்ணில் என்பதனை பன்மையில் எழுதுக.
..........................................................................
7) இங்குள்ள அஃறிணை, எதிர்கால வினைச்சொல் எது?
..........................................................................
8) மேற்குறிப்பிடப்பட்ட பிராணி ஒரூடக வழியா? ஈரூடக வழியா?
..........................................................................
9) ஒத்த கருத்து தருக.
அ. நதி - ..................................................
ஆ. பாம்பு - ..................................................

02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வசனம் ஆக்குக.
1) சுட்ட/ருசியானது/தோசை/அம்மா
..........................................................................
2) அலைந்து/மக்கள்/பண்டைக்/காடுகளில்/வாழ்ந்த/திரிந்தனர்/காலத்தில்
..........................................................................

03. பின்வரும் வசனங்களை எழுவாய்க்குப் பொருத்தமாக மாற்றி எழுதுக.
1) அவர்கள் நேற்று பாடசாலைக்கு வரவில்லை.
நான் ..........................................................................
2) புறாக்கள் வானில் பறந்து சென்றன
கிளி ..........................................................................

04. 1) பின்வரும் பழமொழி/ மேற்கோள்கள் குறித்து நிற்கும் தொழிலை எழுதுக.
* சீரைத் தேடின் ஏதைத் தேடு.   * தன்கையே தனக்கு உதவி.
* உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை
(......................................)
2) முயற்சி திருவினையாக்கும் என்பதை உணர்த்தும் கருத்துக்கு பொருத்தமாகக் கூறக்கூடிய உயிரினம் எது?
(......................................)

05. பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.
1) சுற்றுலாப்பயணி ஒருவர் கண்டிக்கு செல்லும் ...................................... எது வெனக் கேட்டார். (வலி, வளி, வழி)
2) ...................................... பார்த்தவன் நகரக் காவலரால் பிடிக்கப்பட்டான். (உலவு, உளவு, உழவு)

06. பின்வரும் தமிழ் சொற்களுக்கான சிங்கள உச்சரிப்பை தமிழில் எழுதுக.
1) துள்ளிப் பாயுங்கள் - ..................................................
2) கண்களை மூடுங்கள் - ..................................................
3) எனக்கு தேநீர் தாருங்கள் - ..................................................

07. பின்வரும் சிங்களச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.
1) அப்பே பவுள - ..................................................
2) மட்ட வத்துர டிகக் தென்ன - ..................................................

08. பின்வரும் தமிழ் சொற்களுக்கான ஆங்கிலப்பதத்தினை எழுதுக.
1) நடத்தை - ..................................................
2) நான் வெளியே போய்க் கொண்டிருக்கிறேன் -
..................................................
3) ஓடை - ..................................................

09. பின்வரும் ஆங்கிலப்பதத்தின் கருத்தை எழுதுக.
1) Green - ..................................................
2) Don't Shout Please - ..................................................

10. மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

01) காடுகள் தீப்பற்றினால் தொடர்பு கொண்டு அறிவிக்க வேண்டிய தொலை பேசி இலக்கம்,
1) 1919   2) 1991   3) 218   4) 9999

02) நீரில் கரையும்போது நீரின் நிறத்தை மாற்றக்கூடிய பொருள்,
1) சீனி.   2) கருப்பட்டி.   3) உப்பு.   4) வினாக்கிரி.

03) பயிர்ச்சாடிகளில் மண்ணை நிரப்பும் சரியான முறை,
1) சாடியின் அரைவாசி வரை மண்ணிடல்.
2) சாடியின் மேல்வாய் வரை மண்ணிடல்.
3) சாடியின் மேல்வாயிலிருந்து 5cm அளவு குறைவான அளவு மண்ணிடல்.
4) சாடியின் கால்வாசி வரைக்கும் மண்ணிடல்.

04) பின்வரும் பூக்களில் எட்டு இதழ்களை உடைய பூ,
1) மயிர்க்கொன்றை.   2) கரணைப் பூ.
3) சீனியாஸ்.   4) திருவார்த்திப் பூ.

05) முட்டையிட்டுக் குஞ்சுபொரித்து, பாலூட்டும் விலங்கு,
1) பிளாற்றிப்பசு.   2) சுறா.
3) வெளவால்.   4) கிவி.

06) உற்பத்தியின்போது உணவின் போசணைப் பெறுமானம் இழக்கப்படும் சந்தர்ப்பம் எது?
1) அறுவடை செய்யப்பட்டு நீண்டகாலம் வயலில் குவித்து வைக்கப்படல்.
2) நீண்டகாலம் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
3) நீண்ட நேரம் அவித்தல்.
4) உணவுப்பொருட்கள் நசுங்குதல்.

07) பின்வருவனவற்றில் கலப்பட உணவு அல்லாதது,
1) பாலில் நீரைக்கலத்தல்.
2) மிளகில் பப்பாசி விதை கலத்தல்.
3) பாற்சோற்றில் பயறு சேர்த்தல்.
4) மஞ்சள் தூளில் கோதுமை மா கலத்தல்.

08) இலங்கையின் அழகிய காடுகளில் படகமுவ வனம் அமைந்திருப்பது,
1) முல்லைத்தீவில்.   2) குருநாகலில்.
3) இரத்தினபுரியில்.   4) பாணமயில்.

09) அண்மையில் உலகை அச்சுறுத்திய பன்றிக்காய்ச்சலுக்கு காரணமான நுண்ணங்கி,
1) பற்றீரியா.   2) பங்கஸ்.
3) வைரஸ்.   4) எலி.

10) இலங்கையில் அதிகளவு சனத்தொகை கொண்ட மாவட்டம்,
1) கொழும்பு.   2) கம்பஹா.
3) கண்டி   4) அநுராதபுரம்.

11) சிலந்தி வலை பின்னப் பயன்படுத்தும் பொருள் உற்பத்தியாவது அதன் எப் பகுதியில் இருந்து,
1) வாய்.   2) பல்.
3) வயிறு.   4) உணர்கொம்பு.

12) உலகில் அதிகளவான மக்கள் சீன மொழியான மண்டரின் மொழியை பேசுகின்றனர். உலகில் பொருளாதாரத்துறையில் அதிக வளர்ச்சியை சீனா காட்டி வருகிறது. இதன் நாணயம்,
1) யென்.   2) டொலர்.   3) யூரோ.   4) யுவான்.


13) தடித்த காட்போட்டில் வெட்டி எடுக்கப்பட்ட துவாரங்களின் ஊடாக மையைப் பூசுவதன் மூலம் ஆக்கப்படும் சித்திரம்,
1) கிறபிக் அச்சுப்பதித்தல்.   2) ஸ்ரென்சில் அச்சுப்பதித்தல்.
3) ரெம்ளற் அச்சுப்பதித்தல்.   4) லித்தோ அச்சுப்பதித்தல்.

14) சூரியகாந்தி வித்தின் நிறம்,
1) கருமை.   2) சிவப்பு.
3) மஞ்சள்.   4 ) கபிலம்.

15) இந்தச் சித்தரம் காணப்படுவது,
1) தலதா மாளிகையில்.
2) மிகிந்தலையில்.
3) ருவான்வெலிசாயவில்.
4) சீகிரியாவில்.



16) இந்தக் கொண்ணிலைக்குரிய கட்டளைச்சொல் யாது?



1) ஆயத்தம் செய்.
2) செல்க.
3) குறிப்பிற்குச் செல்க.
4) வெடியோசை.

17) யோகாசனம் மூலம் தடுக்கப்படும் நோய் அல்லாதது,
1) நீரிழிவு.   2) இதய நோய்கள்.
3) சிக்குன் குனியா.   4) ஆஸ்த்துமா.

(15ஆம் பக்கம் பார்க்க)

2010 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக பல் மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது சுடலைக் காதல்

'தலையங்கத்தைப் பார்த்தவுடன் காதலைக் கொச்சைப் படுத்துகின்றோம் என்று உண்மைக் காதலர்களின் உள்ளங்கள் குமுறுகின்றன. எமக்குப் புரிகிறது அவ்வாறு குமுறிக்கொள்ளும் உள்ளங்களே பந்தியை முழுமையாக வாசித்த பின் உங்கள் உள்ளக்குமுறல் தானாகவே தணிந்து விடும்.




ஆட்டோவுக்குள் காதல் ஜோடிகள் நடந்துகொண்ட விதத்தை இப்பத்தியில் எழுதக்கூட என் பேனா நாணம் கொள்கிறது.

பார்த்தீர்களா?

சம்பவத்தை யாழ்.நகரை அண்டியுள்ள பிரபல்யமான சுடலைக்கு மேற்குப் பக்கமாக உள்ள ஒழுங்கை ஒன்றில்

அது ஒரு மயானத்திற்கு அருகில் இருக்கும் ஒழுங்கை. அந்த ஒழுங்கையில் காலை 9 மணிக்கு முன்னரும் மாலை 5 மணிக்குப் பின்னரும்தான் சனக்கூட்டம் அதிகமாகக் இருக்கும்.

மதியம் அந்த வீதியில் சன நடமாட்டம் மிகவும் குறைவாகவே காணப்படும்.

அந்த நேரங்களில் ஒவ்வொரு சனி, ஞயிற்றுக்கிழமைகளில் ஒரு பச்சை நிறத்திலான ஆட்டோ ஒன்று நிற்கும்.

நாம் நினைத்தோம் அந்த ஆட்டோ யாரையாவது எதிர்பார்த்து காத்திருக்கிறதென்று. இருப்பினும் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அதுவும் மதிய நேரத்தில் ஏன் இங்கு இந்த "ஆட்டோ" நிற்கிறது. என்ற கேள்வியும் மனதில் எழுந்தது.

சரி மனதில் எழுந்த சந்தேகத்தைத் தீர்ப்போம் என்று "ஆட்டோவை" நெருங்கினோம்.

ஆட்டோவுக்குள் காதல் ஜோடிகள். பிறகென்ன அங்கு மிகுதி என்ன நடந்தது என்று சொல்லவா வேணும்! நீங்களே புரிந்து கொண்டிருப்பீர்கள்.



இச்சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

ஏ-9 பாதை திறந்த பின்னர் எம்மவர்கள் மத்தியில் ஒருவித மாற்றம். அதில் இந்தச் சம்பவம் போல் பலவிதமான செயற்பாடுகளில் எம்மவர்கள் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள்.

காதலிப்பது தப்பென்று சொல்லவரவில்லை காதல் என்பது புனிதமானதும் - தெய்வீகமானதும் அதை எவ்வாறு- எங்கு தெய்வீகப்படுத்த வேண்டும் என்பது காதலிக்கும் உள்ளங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

அதைவிடுத்து அறைக்குள் நடக்கவேண்டிய விடயங்களை அரங்கத்தில் நடத்திக் கொள்வதால் காதலின் புனிதமும் புதைத்து, சிதைத்து அத்துடன் எமது இனத்தின் பண்பாட்டினையும் அந்தரத்தில் விட்டுவிடக் கூடாது.

இத்தகைய கலாசாரச் சீரழிவுகள் இடம்பெறுகின்ற போது அந்தந்தப்பகுதியில் உள்ள சனசமூகநிலையங்கள், இந்து இளைஞர் மன்றங்கள் மற்றும் பல்வேறு பொது நிறுவனங்கள் தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டும்.

எமது கலாசாரத்தின் கூறுகளை அழிக்கும் கூற்றன்களாக இருக்கும் இத்தகைய செயற்பாடுகளைத் தடுக் கும் பொறுப்பு ஒவ்வொருவரிடமும் உள்ளது.

சமூக, கலை, கலாசாரம் ஆகியவற்றில் அக்கறை கொண்டவர்களே! இது உங்களின் கவனத்திற்கு!

கவிநேசன்

---

# "தமிழ் மொழியைத் தாக்கும் நோய்க்கிருமிகள்"

தமிழர்களுடைய பண்பாடும் மரபும் பேணப்பட வேண்டியதெனக் கூறிக் கொள்ளும் தமிழ்ப் பற்றாளர்கள், தமிழ் மொழியைப் பயன்படுத்தும்போது இழைக்கப்படுகின்ற தவறுகளைக் கண்டும் பாராமுகமாக இருப்பது வேதனைக்குரியதே.

தமிழ் மொழிக்குரிய உச்சரிப்பு, அமைப்பு, பொருள், உணர்வு, சிறப்பு முதலிய அம்சங்கள் இன்றைய காலத்தில் சிதைக்கப்பட்டு வருவதைக் காணலாம். மொழிப் பயன்பாடு வடிவ மாற்றத்தையும் உச்சரிப்புச் சிக்கலையும் ஏற்படுத்தும் தன்மையில் அமையுமானால் நமது மொழியின் வளர்ச்சியையும் புதுமையையும் யாதென்று கூறமுடியும்.

தமிழர்கள் உலகெங்கும் பரந்து காணப்படினும் தமிழ்மொழியின் மேன்மையும் சிறப்பும் புகழப்படும் நாடுகளாக தமிழ் நாட்டையும் இலங்கையையும் குறிப்பிடலாம். ஆனால் இவ்விரு பிரதேசங்களிலும் தமிழ்மொழிப் பயன்பாடென்பது பல்வேறுவகைப்பட்ட வினாக்களைக் கொண்டு விளங்கினும் ஒரு சில மொழிப் பயன்பாட்டையும் அவை பெறுகின்ற இடத்தையும் இக் கட்டுரை விளக்க முற்படுகின்றது.

சொற்களின் இறுதியில் "ஆன" என்ற சொல் இன்று அதிகப்படியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது சொற் பயன்பாட்டில் பொருத்தமற்றதும் வழக்கற்றதுமான ஒரு சொல்லாகும். "ஆன" என்பது சொல்லின் இறுதியிலே தனித்தமைய வேண்டிய ஒன்றல்ல. 'மதிப்புக்குரியவர் ஆன' "பேராசிரியர் ஆன" என்ற சொற்களின் இறுதியிலே 'ஆன' என்ற சொல் தற்காலத்திலே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது பொருத்தமற்ற அமைப்பு முறையாகும். இவை "மதிப்புக்குரியவரான", "பேராசிரியரான" என அமைதல் வேண்டும். இன்று தொலைக்காட்சி அலைவரிசைகளில் 'திரைக்கு வந்து சில மாதங்களே ஆன' என்று விளம்பரம் அமைகின்றது. இச் சொற்றொடர் 'திரைக்கு வந்து சில மாதங்களேயான என்று அமைதல் வேண்டும்.

"ஆன " எனத் தனித்து எழுதும் போது அது தனித்துப் பொருள் தருமாறில்லை எனவே தனித்தெழுதும் போது பொருள்சிதைவையும் சொற்றொடர்ச் சிதைவையும் ஏற்படுத்துமொன்றாக விளங்குகின்றது. தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் எனப் பேசிக்கொள்வோர் இத் தன்மைகளை அதிகம் கவனத்திற் கொள்ளவேண்டும். மக்கள் மத்தியிலே தகவல்களை நாளாந்தம் சுமந்து செல்லும் பத்திரிகைகளும் தமக்கு வருகின்ற விளம்பரங்களை மேலே குறிப்பிட்ட விடயத்தைக் கருத்திற்கொண்டு மொழியின் பிரயோகத்தைச் செம்மையாக அமைத்தல் வேண்டும். ஊடகங்களின் மூலமே இவ்வாறான மொழியைத் தாக்கும் நோய்க்கிருமிகள் கடத்திச் செல்லப்படுகின்றன.

தமிழில் இச்சொல் மட்டுமன்றி "ஆனது" என்ற சொல்லும் தற்கால வழக்கில் பயன்படுத்தப்படுகின்றது.

"இந்த உலகம் ஆனது நிலையில்லாதது" என ஒரு வாக்கியம் அமையுமானால் இதன் பொருள் நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. ஆனால் வசன அமைப்பில் சிதைவு ஏற்படுகின்றதென்று கூறலாம். இச் சொல் தனியாக இடம் பெற்றமைக்கு எம்மிடையேயுள்ள மொழிப் புணர்ச்சி பற்றிய பயன்பாட்டுக் குறைவே காரணமாகும். உலகம் என்ற சொல்லின் இறுதியிலுள்ள "ம்" என்ற எழுத்தும் ஆனது என்ற சொல்லின் முதலுள்ள "அ"என்ற எழுத்தும் இயல்பாகவே புணர்ந்துவரும் தன்மையுடையது. உலகம் + ஆனது = உலகமானது என அமையும் இத்தன்மையை நோக்கும் போது மொழியைப் பயன்படுத்துகின்ற எமக்கு இலக்கண அறிவோ, மொழிப் பயன்பாட்டு அறிவோ, சரியாகப் புரியவைக்கப்படவில்லை என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.

சில எழுத்துக்கள் தமிழ் மொழியின் நடையில் அமையாதது எனக் கூறிக் கொள்ளினும் தமிழின் உச்சரிப்பு முறையில் பெரும் சிக்கலை ஏற்படுத்துவனவாகக் காணப்படுகின்றன.

இவற்றில் "ஆம்" என்ற சொல்லின் பயன்பாட்டை நோக்கின் "ஆம்" என்ற சொல் 'ம்'என்ற எழுத்தை மட்டும் பெற்றமை அவதானிக்க முடிகின்றது. எடுத்துக் காட்டாக.

"இரண்டாயிரத்து ஒன்பதாம்" ஆண்டு என்பதை எண் வடிவில் எழுதும் போது '2009 ஆம் ஆண்டு' என அமைதல் வேண்டும். ஆனால் நாம் '2009 ம் ஆண்டு' என எழுதுகின்றோம். இதன் விரிவான வடிவத்தை நோக்கின் இரண்டாயிரத்து ஒன்பதும் என்று அமையும். எனவே இதன் சரியான பிரயோகத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதேபோன்று மூன்றாம் இடம் என்பதை "3ம் இடம்" என எழுதினால் மூன்றும் இடம் என இதன் பொருள் அமையும். இதனை திருத்தமான வடிவில் எழுதினால் "3ஆம் இடம்" என அமையும். எனவே இவ்வாறான சொற் பிரயோகம் பொருள் பிழையை ஏற்படுத்துவதை அவதானிக்கலாம். ஊடகம் இன்று தமிழுக்குச் செய்யும் [illegible] துரோகங்களில் ஒன்று. சொல்லின் பொருள் சிதைவாகும். இச்சிதைவு எழுத்துக்களின் மேற்போடப்படும் குற்றாகவும் அமைகின்றது. கணனியின் உதவியுடன் பிரதியெடுக்கப்படும் புத்தக அச்சுக்களிலும் விளம்பர அச்சுக்களிலும் இத்தவறினை அவதானிக்கலாம்.

தேவையான எழுத்துக்களின் மேலே போடப்படும் குற்றானது




அளவில் சிறியதாகவும் கணனியின் வரியமைப்பு..... என்பவற்றின்போது அவதானிக்கப்படாததாகவும் உள்ளது. இது மிகப்பெரும் தவறாகும். எடுத்துக்காட்டாகக் கல்வி என்ற சொல் குறிக்கும் அர்த்தமும் பொருளும் புனிதமானதாகவும் போற்றப்படத் தக்கதாகவும் காணப்படுகின்றது. இங்கு 'கல்வி' என்பதிலுள்ள 'ல்' என்ற எழுத்தின் மேலே குற்றினைத் தவிர்த்து அச்சுப்பிரதி செய்யப்பட்டால் எழுதும்போது 'கலவி' என அமையும். கலவி என்பதன் பொருள் காமம், இச்சை என்பதாகும். 'கல்வி' என்ற இடத்தில் 'கலவி' என வருமானால் அங்கு ஏற்படுகின்ற பொருள்பிழை மிகப் பெரியது. கல்வி அலுவலகம் என்பது கலவி... என அமையுமானால் அதன் பொருள்பிழையை யார் பொறுப்பேற்பர்.

அதேபோன்று எழுத்துக்களுக்கு மேலே போடப்படும் 'விசிறி' வடிவமும் தற்காலத்தில் அச்சுத் தவறாக இடம்பெறுகின்றது. "மா திரிக்கப்படும் இடம்" என்ற சொற்றொடரில் "திரித்தல்" என்ற சொல் "தரித்தல்" என இடம்பெற்றால் அதன் பொருளும் வாக்கியத்தின் பொருளும் மாறுபட்டுவிடும்.

திருமணசேவை என்பதிலுள்ள 'தி' அதன் விசிறி எழுத்தை இழந்துவிட்டால் 'தருமண சேவை' என அமையும். எனவே எழுத்துக்களின் மேல் குற்றுப்போடுவதும் விசிறி இடுவதும் தவிர்க்கப்பட முடியாததாகின்றது. இத்தகைய தவறுகளை மாணவர்கள் இழைப்பார்களாயின் அவை திருத்தப்படக்கூடியன. ஆனால் பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட விளம்பரங்கள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் அதனைத் திருத்தும் நிலையென்பது கேள்விக்குறியாக உள்ளதுடன் அவற்றை அவதானிக்கும்போது எமது இளந்தலைமுறையினர் அவற்றைப் பின்பற்றாமலிருப்பதே மேலானதாகும்.

சொற்களைச் சேர்த்து எழுதும்போது விடும் தவறுகளும் இன்று அதிகரிக்கின்றன. சில சொற்கள் பிரித்து எழுதப்படலாம். கடற்கரை என்பது கடல்கரை என்றும் மட்குடம் என்பது மண்குடம் என்றும் தற்கால வழக்கில் எழுதுவது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆனால் ஒரு என்பதும் ஓர் என்பதும் எந்த இடத்தில் பயன்படுத்தப்படலாம் என்பது தொடர்பான கருத்து முரண்பாடுகள் இன்று அதிகமாகக் காணப்படுகின்றன. வாக்கியங்களை அமைக்கும்போது 'ஒரு' என்ற சொல் அமையலாம். ஆனால் 'ஓர்' என்ற சொல் அமைதல் கூடாது. ஏனெனில் ஓர் என்ற சொல்லின் அடுத்ததாக உயிர்எழுத்தே அமைதல் வேண்டும். இந்த உயிர் எழுத்தைத் தவிர மெய் எழுத்துக்கள் அமைதல் கூடாது. எடுத்துக்காட்டாக ஒரு பழம் என்பது ஓர் பழமென அமையாது. இந்த ஓர் என இடம்பெற்றால் அங்கு உயிர் எழுத்தே அமைதல் வேண்டும்.

ஓர்+ஊர், ஓர்+இலை என்பதே சரியான வடிவம். இங்கு ஓர் ஊர், ஓர் இலை என்று எழுதுதல் தவறு. மாறாக ஓரூர், ஓரிலை என்று அமைதல் வேண்டும். இப்பந்தியில் குறிப்பிட்ட விடயம் ஒரு என்பது தனித்தெழுதப்படலாம். ஆனால் ஓர் என்பது தனித்தெழுதப்படக்கூடாதது என்பதாகும். ஏனெனில் ஓர் என்பதை அடுத்து கட்டாயமாக உயிரெழுத்தே இடம்பெறும் என்பதால் அங்கு புணர்ச்சி ஏற்பட்டு "ஈ" என்ற எழுத்து புணர்ந்து மறைந்துவிடும். இவ்விதியை அல்லது இத்தன்மையை அண்மைக் காலங்களில் விளம்பரங்கள் மேற்கொள்வோர் கவனத்தில் கொள்வதில்லை. சில எழுத்தாளர்களும் இதனைக் கவனத்தில் கொள்வதில்லை. 'ஓர் அரிய சந்தர்ப்பம்" என விளம்பரம் அமையும்போது "ஓரரிய சந்தர்ப்பம்" என்று அமைதல் வேண்டும்.

இன்று தமிழில் சில சொற்கள் எழுதுனரின் விருப்பத்திற்கு ஏற்பவே அமைகின்றது. ஆன, ஆனது, ஓர் என்ற சொற்கள் அவற்றின் அமைவிடம் கருதிச் சரியாக அமைதல் வேண்டும். எனவே மொழியைச் சிதைத்து அவற்றுக்கு அவதூறையும் சிதைவையும் ஏற்படுத்தும் வகையிலான இவ்வாறான தவறுகளைக் கிருமிகள் எனக் கூறினால் அது மிகையாகாது.

சி.தங்கறுபன்
ஆசிரியர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவு கிழக்கு தல்

# அருள்மிகு சங்கரமூர்த்தி மு

# தேர்த் திருவிழாச் சிறப்

## முருகன் ஆங்கு வந்து உதித்தனன் உலகம் உய்ய



புங்குடுதீவு கிழக்கு, தல்லையப்பற்று சங்கரமூர்த்தி தேவஸ்தான முருகன் ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்த சிறப்புப் பொருந்திய பெரியோர்களால் ஸ்தாபனம் செய்யப்பட்ட ஆலயம். இப்பொழுது புதுப்பொலிவுடன் மிகவும் சிறப்பாக நித்திய பூசைகள், மஹோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. இம்முறையும் மாசி மாத மகத்தை அந்தமாகக் கொண்ட மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நடைபெற இருக்கின்ற தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்தி முருகன் திருவருள் உலகெங்கும்பரவி எல்லா மக்களும் சௌபாக்கியம் பெற்று நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல முருகப் பெருமானைப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

ஆலய மஹோற்சவ குரு, இ.மகேஸ்வரக் குருக்கள்.

## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



புங்குடுதீவு கிழக்கு, தல்லையப்பற்று அருள்மிகு சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது. கருணை மிகு கந்தப்பெருமான் திருவருட் கடாக்ஷம் நல்க தேரில் எழுந்தருளும் திவ்ய காட்சி பக்தி பூர்வமானது.

மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தலைக்குறிப்பதாகும். ஆகவே, அடியவர்களின் பாவ வினைகளை யெல்லாம் வேரோடுகளைய எம்பெருமான் திருத்தேரில் ஆரோகணிக்கின்றார்.

பக்தர்கள் வந்து பாலசுப்ரமண்யனின் பதமலர் பணிந்து இம்மைக்கும் மறுமைக்கும் அம்மைக்கும் சிறப்புற்றுத் திகழ வணங்கி வாழ்த்திச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்குமாறு வேண்டி, உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்கி, நல்லைக் குருமணியையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## துணைவேந்தரின் வேண்டுதல்



எங்கள் பண்பாட்டின் தொன்மைக்கும் தொடர்ச்சிக்கும் அணியாக முருகவழிபாடு விளங்குகின்றது.

வடக்கே மாவிட்டபுரம் தொடங்கி கிழக்கு மண்டூர் உகந்தையென விரிந்து தெற்கே கதிர்காமம்வரை வியாபித்துள்ள முருகவழிபாட்டின் சிறப்பினால் எங்கள் வாழ்வின் நம்பிக்கைகள் காக்கப்படுகின்றன.

இந்தவகையில் எங்கள் பாரம்பரிய பண்பாட்டுப்புலமான புங்குடுதீவு தல்லையப்பற்றில் விளங்குகின்ற சங்கரமூர்த்தி முருகமூர்த்திப் பெருமான் பெருந்திருவிழா நிறைவில் தேரிலே வீதிவலம் வரும் செய்தி எல்லையிலா ஆறுதலைத் தருகின்றது.

சூழ்கலி நீங்கி- நம் தேசத்து மக்களெலாம் மேன்மையுற தல்லையப்பற்று தமிழ் முருகன் தேர்வடம் பிடித்து இறைஞ்சுவோம்.

ஞான வேல்முருகன் நல்லன எல்லாம் தருவான்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்,
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## ஆலய பூசகரின் ஆசியுரை



புங்குடுதீவு கிழக்கு, தல்லையப்பற்று பதியிலே கோயில் கொண்டிருக்கும் சங்கரமூர்த்தி- முருகமூர்த்தி முருகப்பெருமான் இப் பகுதி மக்கள் எல்லோரையும் நாட்டுப் பிரச்சினையின் மத்தியிலும் காத்து மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ அருள் புரிந்துள்ளான். இம் முருகன் மூலஸ்தானத்திலே வேல் பெருமானாக இருந்து அருள் பாலிக்கின்றான்.

இங்கே கிரியைகள் அனைத்தும் குமாரதந்திர முறைப்படியே நடைபெறுகின்றன. இப்பொழுது புதிய நிர்வாகத்தின் கீழ் பல வருடங்களுக்குப் பிறகு தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுவது இந்த ஊருக்கும் இந்த் நாட்டிற்கும் மிகவும் நன்றாக அமையும்.

இவ் அழகன் முருகனின் தேர்த்திருவிழா சிறப்பாக அமைய அவன் தாள் வணங்கி எல்லோரும் இன்புற்றிருக்க ஆசிகூறி அமைகின்றேன்.

சிவசுப்பிரமணியக் குருக்கள்
ரமேஸ்சர்மா நித்தியபூசகர்,
தல்லையப்பற்று சங்கரமூர்த்தி
முருகமூர்த்தி தேவஸ்தானம்.



## ஆலயதர்மகர்த்தா தலைவரின் ஆசிச் செய்தி



அழகன் முருகன் இன்று அடியார்க்கருளத் திருத்தேரில் ஆரோகணிக்கின்றான்- சங்கரமூர்த்தி முருகமூர்த்திச் செல்வன் முத்துக் குமாரன் வள்ளி தெய்வானையுடன் திருவீதி வலம் வருங்காட்சி காணக்கண்கோடி வேண்டும். கார்த்திகைக் குமரன் கந்தன் தேரில் வருங்காட்சி தனைக் கண்டு களிக்க வருமாறு அடியார் பெருமக்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் கந்தப் பெருமான். ஆகவே கலியுக வரதனான கந்தனைக் கரங்குவித்து அனைவரும் காலமெல்லாம் சிறப்புற வாழவேண்டுமென்று மனமார வாழ்த்தி நிற்கின்றோம். இத்தனை நாளும் பட்ட இன்னல்கள் விலகி இன்பம் பெருக வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். "கந்தனைக் கரங்குவித்தால் பந்தவினையகலும்"

சு.நித்தியானந்தன் J.P.தலைவர்
(ஆலய பரிபாலன சபை மற்றும் வடபிராந்திய
இந்துப்பேரவை, யாழ்.மாவட்டம்)

## தேர்த்திருவிழா வாழ்த்துச்செய்தி



புங்குடுதீவு கிழக்கு, தல்லையப்பதியிலே அமைந்துள்ள அருள்மிகு சங்கரமூர்த்தி- முருகமூர்த்தி ஆலயத்தில் வள்ளி தெய்வசேனா சமேத முருகப்பெருமானின் தேரோட்ட விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடை கிறேன்.தீவுப் பகுதியில் அமைந்துள்ள ஆலயங்களில் தல்லயப்பற்று அருள்மிகு சங்கரமூர்த்தி- முருகமூர்த்தி ஆலயமும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாகும்.

அந்த வகையிலே முருகப்பெருமான் சிங்காரத் தேரில் வள்ளி தெய்வயானை சமேதராய் ஆரோகணித்து அழித்தல் தொழிலினைப் புரிய வலம் வரும் இந் நாளில் எல்லோருக்கும் வாழ்வு கொடுத்து வினை யாவும் போக்கி இவ் வையத்தில் பெரும்பேறு பெற்று வாழ அருள்புரிய அவர் தம் பாதக் கமலங்களை வேண்டுகின்றேன்.

மு.நந்தகோபாலன், பிரதேச செயலர்,வேலணை.

## அருட்காட்சி கா
## புண்ணியம் செ



வி
கலி
மு
கெ
தல்
சங்
எனும் நாமத்துடன்
வழிபடும் அடியார்
நல்லருள் புரிகின்ற
தமிழ்க்கடவுள
தண்ணருள்புரிந்து
அழகியதேரிலே ஆ
தீர்க்கும் வேலன் அ
அருட்குமரனாக
மிளிரும் அருட்கா
ஜென்ம புண்ணிய
முத்தமி ல்
கன் இ ு தே
ஆரோகணித்து அ
அல்லல்களைந்து ந
சௌபாக்கியங்க
மங்கள வாழ்வருள
உளமாரப் பிரார்த்தி
வாழ்த்துகின்றோம்.
சரவணன், சண்மு
பெற்றுய்யும் வண்
அடியார்களைப் ப
சைவப்புல
கலைஞானச்சு




நியூ நகுலா
ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2225511

சாளினி
அழகுமாடம்
21, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0772242118

சிறிமதனா
நகைமாளிகை
இல.155/M கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7772

கபிலா
காலணி அகம்
இல.4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Naagaa
Builders Property
Developers (PVT) LTD
No: 44,St.Benedicts's Mawatha,
Colombo - 13.
Tel: +94 - 115627606
Fax: +94 - 112581735

சி
93,
தொ.

S.P.S. Agency
Importers, Exporters
General Merchants
& Commission
Agents for Local Productes
113, 4th Cross Street, Colombo 11.
Tel: 326204, Fax: 441824

Jaffna Traaders
Transport Service
336, 338 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9453, 021 2228998
135, வூல்பென்ரல் வீதி,
கொழும்பு.
தொ.பே: 0114987935

மைதிலி
நகைமாடம்
தங்க நகை வியாபாரி
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2227902

Jaffna Traaders
336, 338 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9453,
021 2228998
135, வூல்பென்ரல் வீதி,
கொழும்பு.
தொ.பே: 0114987935

அபிராமி
மலர் சென்ரர்
இல. 127/3, யூபிலி பசார்,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2858,
0776615973.

அ
இல.14, ந
மின்சாரநி
தொ.
பக்

சிவகணேசன்
ரெக்ஸ்ரைல்ஸ்
#41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2063

உள்நாடு, வெளிநாடுகளுக்கு தொடர்பு
கொள்வதற்கு நாடவேண்டிய இடம்
சவரிமுத்து ஸ்ரோர்ஸ் அன்
தொலைத்தொடர்பு நிலையம்
அம்பலவாணர் வீதி, புங்குடுதீவு 12
தொ.பே: 021 321 2
021 321 0631, 021 49

தேனு ஸ்ரோர்ஸ்
அம்மா கடைச்சந்தி,
11 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு

விஜி
வண்ணச்சோலை
பிரதான வீதி,
புங்குடுதீவு 01

S.P சிங்கம்
ஸ்ரோர்ஸ்
புங்குடுதீவு-02
தொ.பே: 0215680265

கீதா
திரும
ஓடரு
செ
பிரதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...க்கு தல்லையம்பற்று

# ...முருகமூர்த்தி தேவஸ்தான

# ...றப்புமலர் 27.02.2010





## ஆலய வரலாறு

இயற்கை எழில் நிறைந்த இலங்கையின் சரித்திரப் பெருமை பெற்ற யாழ்.குடாநாட்டின் சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவு எனும் கிராமம் அமைந்துள்ளது. அங்கே பல அறிஞர்களும், சைவப் பெருங்குடி மக்களும் வாழ்கின்ற இக்கிராமத்தில் இவ் சங்கரமூர்த்தி- முருகமூர்த்தி வேல் பெருமாள் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

இவ் ஆலயத்தின் தொன்மையை- வரலாற்றை அடுத்து நோக்குவோமாக இருந்தால் புங்குடுதீவு கிழக்கு 12 ஆம் வட்டாரத்தில் தலையப்பற்று என்று 1800-1900 வரையன காலப்பகுதியில் தீவகத்தில் ஒரு நிர்வாக அலகாக இருந்ததாக சொல்லப்படுகிறது.இவ் ஆலயம் யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள பதிவேடுகளின்படி 1892 ஆம் ஆண்டு தீவக மணியகாரர் மகள் இராமாசிப் பிள்ளை அவர்களால் சுண்ணாம்புக் கட்டடத்தில் வேலை மூலவராகக் கொண்டு மடாலயமாய் குடமுழுக்கு நடத்தப்பட்டதாக கூறப்படுகின்றது. அதன் பின்னர் மூன்று நேரப் பூசை நடைபெற்றதாகவும் பெருமளவான அடியார்கள் விசேட தினங்களில் பங்கு பற்றியதாகவும் கூறப்படுகின்றது.

இவ் ஆலயம் கச்சேரியில் 1892 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு 1805என்ற பதிவு எண்ணையும் கொண்டுள்ளது. ஆகவே இது முதலாவது குடமுழுக்கின் போது பதியப்பட்டாலும் இவ் ஆலயம் 1892 ஆம் ஆண்டிற்கு முன்பே தோன்றியதாகக் கருதப்பட வேண்டியுள்ளது.

அத்துடன் இத் தல்லையப்பற்று முருகன் ஆலயம் இரு ஆலயங்களின் கூட்டு ஆலயமாக விளங்குகின்றது. புங்குடுதீவு புதையல் ஆதிவிநாயகர் ஆலயம் கவனிப்பாரின்றி விடப்பட அவ் ஆலயத்தின் ஆதிவிநாயகர் விக்கிரகத்தை எடுத்து வந்து புங்குடுதீவு தல்லையப்பற்று முருகன் ஆலயத்தின் மகா மண்டபத்தில் பாலஸ்தாபனம் செய்து பூசிக்கப்படுகின்றார். தற்போது இவ் ஆலயம் இரு ஆலயங்களின் கூட்டு ஆலயமாக விளங்குகின்றது.இவ் ஆலயத்தில் அமைந்துள்ள வேல் ஞானசக்தி வடிவானது வேண்டுவார் வரங்களை அள்ளி வழங்குவது. அந்தப் பகுதியில் வாழ்ந்தவர்கள் அனைவரையும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. தல்லையப்பற்று சங்கரமூர்த்தி- முருகமூர்த்தி முருகன் ஆலயவேல் பெருமானும் புதையல் ஆதி விநாயகரும் ஒன்று சேர்ந்து அருள்பாலிக்க இவ் வட்டாரத்து மக்களில் பலர் கல்வி, கேள்விக்கு பெயர் பெற்ற மகான்களாக உருவாகினர். இத் தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் 1892இலும் பின்னர் 1928இலும் மீண்டும் 1957 இலும்,1972 இலும் , 1985 இலும் கும்பாபிஷேகம் நடை பெற்றுள்ளது. பின்னர் 1991 இன் இடப்பெயர்வின் பின்னர் இவ்வாலயத்தில் இறுதியாக 2005 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மஹோற்சவம் நடைபெறாமல் அலங்காரத்திருவிழாக்களே வருடாந்தம் நடைபெற்று வந்தது. தற்போது செயல்திறன் மிக்கதும் தலைமைத்துவக் கட்டமைப்பு மிக்கதுமான கௌரவ திரு.சு.நித்தியானந்தன் தலைமையிலான மிகச் சிறப்பான குழுமம். சுமார் இருபத்தொன்பது ஆண்டுகளுக்கு பின்னர் முருகப்பெருமானுடைய பழைய கட்டுத்தேரினிலே எம் பெருமானாகிய புங்குடுதீவு கிழக்கு தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி முருகப் பெருமானுக்கு இந்த ஆண்டு தேர்த்திருவிழாவைசிறப்பாக நடத்திக் கொண்டிருக்கின்றது. அத்துடன் அன்னதான சபை மூலம் மஹோற்சவ தினங்களில் தினமும் அன்னதானம் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு தேர்த்திருவிழாவில் வெளிநாடுகளில் உள்ள இவ்வூர் மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி வேல் பெருமான் தேரினிலே பவனி வந்து எங்கள் குறைகளெல்லாம் தீர்த்து நாட்டிலே நிரந்தரமான அமைதியும் சுபீட்சமும் நிலைக்க அவருடைய பாதார விந்தங்களை வேண்டுவோமாக

தொகுப்பு:
*சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி*
*ஓய்வுபெற்ற அதிபர், புங்குடுதீவு -12*



## தேரின் மகிமையும் தத்துவச்சிறப்பும்

சிவாகமங்கள் விதித்துக் கூறும் நைமித்தியக் கிரியைகளில் மகோற்சவம் உன்னதமானது.

இறைவனது ஐந்தொழில் தத்துவத்தைக் குறிக்கும் மகோற்சவத்தால் அடியார்கள் பெறும் பயனும் சிறப்பாகும். சாம்பவ தீட்சையை நல்கும் சிறப்பு மகோற்சவங்களுக்கு உண்டு. இறைவனுக்கு கொடியேற்றம் நிகழ்ந்து இடம் பெறும்

உற்சவங்களில் பிரமோற்சவம் எனச் சிறப்பு பெறும் இரதோற்சவம் சிறப்பங்கமாக விளங்குவது குறிப்பிடற்பாலது. ஆன்மாக்களிடத்தே

தீயவற்றை நல்கும் ஆணவ மலத்தை அழித்து புனித தத்துவத்தை ஏற்படுத்தும் கருணை மிகுந்த சங்காரமாக இரதோற்சவம் அமைகிறது. அடியார்களின் அகந்தை அகன்று அன்புள்ளம் கொண்டவர்களாக உன்னதமான சமய வாழ்வு வாழ உதவும் ஒரு புண்ணிய விழா இதுவாகும்.

தேர் ஒரு நடமாடும் ஆலயம். அடியார்கள் ஆலயத்தை நாடிச்செல்வர். ஆனால் அடியார்களை ஈர்த்து ஆட்கொண்டருள் கருணை மேலீட்டினால் அவர்களைத் தேடி இறைவன் வீதி உலா வருவதற்கு வழிவகுப்பதே தேர். மேற்கூறப்பட்ட தத்துவங்களையுடைய தேர்த்திருவிழா இன்று புங்குடுதீவு- தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறுகின்றது. முருகவேள் வள்ளி தெய்வானை சமேதராக தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு வேண்டியவற்றை வேண்டியாங்கு அருளை வழங்க

தேரில் வீதி வலம் வருகின்றார். ஆலயத்தில் சிறந்த பரிபாலனத்தை முருகன் அருளால் தலைவர் சு.நித்தியானந்தன் (J.P) அவர்களும் சகபரிபாலன சபை உறுப்பினர்களும் மிகவும் சிறப்பாக மகோற்சவத்தை நடத்தி கொண்டிருக்கின்றார்கள்.

அனைவரும் ஒன்றிணைந்து ஊர்கூடித் தேர் இழுத்து எம்பெருமான் சங்கரமூர்த்தி முருகமூர்த்தி கதிர்வேலாயுத சுவாமியின் திருவருள் கடாஷ்சத்துக்குப் பாத்திரராகும் வண்ணம் இத் தேர்த்திருவிழா சிறப்படைவதாகுக!

"தேரேறி வரு முருகன் திருக்கோலம் காண என்று
ஊரிலுள்ள மக்களெல்லாம் ஒன்றாய் உன் சந்நிதியில்
சீரோடு கூடிநின்று கரங்கூப்ப வல்வினைகள் வேரறுக்க
வருவான் புங்கதீவு சங்கரமூர்த்தி, முருகமூர்த்தி வடிவேலன் தேரேறி"

மொழியருவி, ஆத்மீக சிந்தனையாளன்
லயன் ஐ.கோ.சந்திரசேகரன் (J.P)
பிரதிப் பிரதம ஒழுக்காற்று அதிகாரி (Deputy Chief Marshal), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அருட்காட்சி காண ஜென்ம புண்ணியம் செய்யவேண்டும்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற கலியுகவரதனான முருகப்பெருமான் பொன் கொழிக்கும் பூமி தல்லையப்பற்றிலே சங்கரமூர்த்தி முருகமூர்த்தி எனும் நாமத்துடன் எழுந்தருளி வீற்றிருந்து வழிபடும் அடியார்களின் வல்வினை போக்கி நல்லருள் புரிகின்றார்.

தமிழ்க்கடவுளான முருகன் இன்று தண்ணருள்புரிந்து இன்னருள் வழங்க அழகியதேரிலே ஆரோகணிக்கின்றான். வினை தீர்க்கும் வேலன் அடியார்க்கருளும் அருட்குமரனாக ஸ்ரீ வள்ளிதேவசேனாபதியாக மிளிரும் அருட்காட்சி காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். ...முத்தமி...ல் வைதாரையும் வாழ வைக்கும் ...ருகன் இ...று தேரில் எழுந்தருளி ஆரோகணித்து அடியார்க்கு வரும் அல்லல்களைந்து நல்லருள் பாலித்து சகல சௌபாக்கியங்களும் நிறைந்து விளங்கிடும் மங்கள வாழ்வருள வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து ஆசிநல்கி வாழ்த்துகின்றோம். அழகன், குமரன், ஆறுமுகன், சரவணன், சண்முகன், முருகனின் அருள் பெற்றுய்யும் வண்ணம் வணங்கி வாழ்த்தி அடியார்களைப் பணிந்து போற்றுகின்றோம்.

சைவப்புலவர், வில்லிசைக் கலைஞர்
கலைஞானச்சுடர் இராசையா ஸ்ரீதரன்.


**பிரணகா**
நகைத் தொழில்கம்
உரிமையாளர்:
சுந்தரம் பத்மநாதன்
68/C, கன்னாதிட்டி வீதி
(ஊர்காவற்றுறை),
யாழ்ப்பாணம்.

**நாதன்ஸ் சூ பலஸ்**
இல.17, நவீனசந்தை, யாழ்ப்பாணம். தொ.பே: 2225211

**நேசன் புடவையகம்**
மீண்டும் புதுப்பொலிவுடன்
புங்குடுதீவில் இயங்குகிறது
மாவடி, புங்குடுதீவு.01

பித்தளை, சில்வர், தகடு,
பைப்வகைகள்
அனைத்திற்கும்
**நந்தலாலா**
இரும்பகம்
29, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்**
(வரைவுள்ளது)
கூட்டுறவுநகர், எரிபொருள் நிரப்பு நிலையம், கிராமியவங்கி,
படகுச்சேவை குடிதண்ணீர் விநியோகம் வாகனசேவை, நுகர்ச்சி விற்பனை
மக்கள் சேவைக்காக வீறுநடைபோட்டு வருகின்றது.
தொ.பே: 0213210868

...TD
...atha,

**சிங்கப்பூர்**
ஜுவலறி
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4590260

**ஸ்ரீ முருகன்**
ஸ்ரோர்ஸ்
31D, சந்தை உட்புறம்,
சுன்னாகம்
தொ.பே: 0778469119

**ஸ்ரீ சரவண பகவான்**
சைவ உணவகம்
இல.141, கதிரேசன் வீதி,
கொழும்பு - 13
தொ.பே: 0755726524

**தீபம் ரேடர்ஸ்**
இல.50 டாம் வீதி,
கொழும்பு 12.
தொ.பே: 2326903

**அன்னை நாகா**
பூட் சிற்றி
175, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2225515
பக்ஸ்: 021 2225223

**மயூரா**
அன்பளிப்பகம்
இல.14, நவீனசந்தை வெளிப்புறம்,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2084
பக்ஸ்: 021222 9151

***Mala Impex***
Importers, Exporters &
General Merchants Dealers &
Importers of Glassware,
Aluminiumware, Enamelware &
Sundry Goods.
*No: 5, New Moor Street, Colombo 12*
*T.P: 2422396*

உங்கள் திருமண
தேவைகளுக்கான
பரிசுப்பொருள்களைப்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
**விஸ்கா கோல்ட் பென்சி**
*No: 166, Sea Street, Colombo -11,*
*Tel: 4893810, Mobile : 0772 435899*

**சாந்தி புடவையகம்**
157, 158, நவீனசந்தை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2045
கே.கே.எஸ்.வீதி,கோண்டாவில்.
தொ.பே: 070 212748

**கண்ணகி ஸ்ரோஸ்**
நாதன் கடை
சகல விதமான பொருள்களும்
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
புங்குடுதீவு 11.

**கீதா சுவையகம்**
திருமண வைபவங்களுக்கு
ஓடருக்கு மற்றும் ஓடர்கள்
உடனுக்குடன்
செய்துகொடுக்கப்படும்.
பிரதான வீதி, புங்குடுதீவு 03

**நியூ கல்யாணி**
ஜுவெல்லறி
22கரட் தங்க நகைகளுக்கு
தனித்துவம் பெற்ற நிறுவனம்.
24 A; பல்கலைக்கழக வீதி,
திருநெல்வேலி.

**அபிராமி சில்க்**
155, 156 நவீனசந்தை
வெளிப்புறம்
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவசக்தி**
ஸ்ரோர்ஸ்
இல.103 A, மெயின்வீதி,
குளியாப்பிட்டி.

**கண்ணன்**
லொட்ஜ்
06, இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**



மற்றவர்கள் பேச்சை கேட்டு நடப்பதன் மூலம், சில விடயங்களில் சிரமங்களுக்கு ஆட்படலாம். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் இழுபறியா கலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்க ளிடம் பெருமை பேசுவீர்கள்.



**இடபம்** உத்தியோகத்தர்கள் ஊக்கம், உற்சாகத்துடன் செயற்படுவர். பணப்பற்றாக்குறை அகன்று நிதி நிலைமை மேம்படும். உங்களின் யோசனைக்கு உறவினர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை இருக்கும். நண்பர் ஒருவருக்கு ஓடிச் சென்று உதவி செய்வீர்கள். தவறு என தெரிந்தே சில காரியங்களை துணிச்சலாகச் செய்வீர்கள்.



**மிதுனம்** எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர் கள். தேடி வந்த ஒருவருக்கு பிறரிடம் கைமாத்து வாங்கியாவது உதவி செய்வீர்கள். உறவினர்கள் சிலரின் பாச மழையில் நனைவீர்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக் கலாம். கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளலாம்.

**கடகம்**



நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும் நாள். வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். காலை முதல் மாலை வரை காலில் சக்கரம் கட்டிக்கொண்டு செயற்படுவீர்கள். நெருக்கமான உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி, உற்சாகம் அதிகரிக்கும். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். கோபம், வேகம் தவிர்க்கவும்.



**சிங்கம்** நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். பணவரவுகளை எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். உறவி னர்களுக்காக சில செலவுகளைச் செய்யலாம். திடீர் பய ணங்கள் செல்ல நேரிடலாம். உங்களின் அருமை, பெருமை களைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள்.

**கன்னி**



நண்பர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் கருதி சில முக்கிய முடிவு களை எடுப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் எளிதில் வரலாம். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருள்கள் வாங்கலாம். உறவினர்கள் வழியில் சந்தோஷமான செய்தி களைக் கேட்கலாம்.

**துலாம்**



உறவினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். நேற்றே சில வேலைகளை முடிக்காததால் இன்று அவதிகளுக்கு ஆட்ப டலாம். தொழில் ரீதியாக சிலரின் சந்திப்பு நிகழும். கடன் பிரச் சினைகளை மாற்றி அமைப்பீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சனி வழிபாட்டின் மூலம் சங் கடம் விலகும்.

**விருச்சிகம்**



சந்தோஷமான, உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். இரண்டு நாள்களாக வராமல் இருந்த பணவரவுகள் இன்று வர லாம். நீண்ட நாள்களாக தள்ளிவைத்த காரியம் ஒன்றை இன்று செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக் கும். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்களை நம்பி ஒப்ப டைப்பீர்கள்.

**தனுசு**



புதிய முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். விளையாட்டாகச் செய்த காரியங்கள் விபரீதமாக முடியலாம். வியாபாரிகள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆட்படலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களுக்காக கணிசமாக செலவு செய்வீர்கள். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் ஏற்படலாம்.

**மகரம்**



உறவினர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். வரவுகளை மிஞ்சிய செலவுகளால் அவதிகளுக்கு ஆட்படலாம். கொடுக்கல் - வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். வெளியூர் பயணங்களின் போது சில்லரை எதிர்பாராதவிதமாக சந்திக்கலாம். அலைச்சல் இருந்தாலும், திட்டமிட்ட வேலைகள் முடியும்.

**கும்பம்**



வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். நண்பர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பு அகன்று பாசம் அதி கரிக்கும். கடந்த கால இழப்பு ஒன்றை ஈடுகட்ட முற்படுவீர்கள். கடன் வசூலிப்பு முயற்சிகளில் பலன் உண்டு.

சுபகாரிய விடயங்களில் நினைத்தது நடக்கும் வாய்ப்பு உருவாகும்.

**மீனம்**



குடும்பத்தினரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். கையிருப்பு குறைந்து பணப்பற்றாக்குறை ஏற்படும்.

குழந்தைகள் வழியில் மருத்துவச் செலவுகள் உருவாகலாம். உத்தியோகத்தர்கள் தொழிலில் அதிக கவனமுடன் செயற்பட வேண்டும்.

இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.


அன்னை மடியில் 28.04.1933

சிவன் அடியில் 28.01.2010

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

சரவணை-மேற்கைப் பிறப்பிடமாகவும், 84/6, தபாற்கந்தோர் லேன், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி விஜயரத்தினம் மகேஸ்வரி

(திதி:- பூர்வபக்க சதுர்த்தசி)



அன்புக் கடலொன்று இன்று அமைதியானது!
பரிவலைகளால் எமைத் தாலாட்டி சீராட்டி
பரிவுடன் எமை வளர்த்த அன்னை இன்று
தன் காலக் கடமைகளை முடித்துக் கொண்டதேனோ?

ஏங்குகின்றோம் அம்மா! எம் இதயம் கனக்க.....
உயிர்தந்து, உன்னுதிரம் தந்து எமை வளர்த்து
உலகில் ஏற்றம்பெற வைத்த தாய் இன்று
காலனவன் இருள் குகைக்கு வேளைக்கு விடைபெற்றாயே!

இதயமெனும் பாசஇழையில் என்றும் எமைக் கட்டி வைத்து
பார்போற்றும் உத்தமியாய் பரிவுடனே பணிசெய்து
சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திட்ட மாதா நீ இன்று
காலத்தின் பெருமூச்சால் அணைந்து மாதம் ஒன்றாகிற்று!

கருத்தினில் இனிய ஒளிச்சுடர் நீங்கள் தாயே!
நீங்காது உங்கள் நாமம் எம் இதயத்தில் உண்டு
தேங்காது உதிர்கின்ற கண்ணீர் துளி கொண்டு
செலுத்துகிறோம் எம் அஞ்சலியை உங்கள் திருவடிதனில்.....

கடந்த 28.01.2010 அன்று சிவபதமடைந்த எம் அன்னை மறைந்த வேளையில் உடன் வந்து உதவியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.02.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

84/6, தபாற்கந்தோர் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) அச்சு ஊடகம் பற்றிய பிழையான தகவல்,
1) இது எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டது.
2) எழுத வாசிக்கத் தெரிந்தவர்களே இதன் மூலம் தகவல்களைப் பெறலாம்.
3) பத்திரிகைகள், சுவரொட்டிகள் என்பன அச்சு ஊடகமாகும்.
4) இன்று உலகில் உள்ள மிகவும் சக்தி வாய்ந்த ஊடகமாகும்.

11. தரப்படும் சொற்களைக்கொண்டு இடைவெளி நிரப்புக.

| | | |
|---|---|---|
| ஜப்பான் | சீனா | வடகீழ் பருவக்காற்று |
| நவம்பர்-பெப்ரவரி | இந்தியா | மிகிந்தலை |
| மஸ்ஜித் | பொலன்னறுவை | தென்மேல் பருவக்காற்று |
| மே - செப்டெம்பர். | | |

1) கண்டி, அநுராதபுரம் .................................. என்பன கலாசார முக்கோண பிரதேசமாகும்.
2) தென்மேல் பருவக்காற்று .................................. காலப்பகுதியில் வீசும்.
3) உலகில் மக்கள் தொகை அதிகமாக உள்ள நாடு .................................. ஆகும்.
4) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை அமைக்க .................................. உதவி செய்த நாடாகும்.

12. பின்வரும் பூக்களின் பெயர்களை எழுதுக.

1)  2)  3)  4) 

____________ ____________ ____________ ____________

13. மிகச் சரியான விடையினை எழுதுக.

01) 9, 2, 1, 8 ஐக் கொண்டு உருவாக்கப்படும் ஆயிரத்தினிடத்தில் 2 வரக்கூடிய நான்கிலக்க எண் ஒன்று தருக.

(..................................)

02) ஹபதியிடம் 402 ரூபாவும் பஸ்மியிடம் 296 ரூபாவும் உண்டு. ஹம்தி எவ்வளவு பணத்தொகையை பஸ்மிக்கு கொடுத்தால் இருவரிடமும் உள்ள தொகை சமனாகும்?

(..................................)

03) 3 மணித்தியாலம் 45 நிமிடம் எத்தனை நிமிடம்?

(..................................)

04) பிற்பகல் 6 கழித்து 45 நிமிடம் என்பதை நியம நேரத்தில் குறித்துக்காட்டுக.


☐ ☐ ☐ ☐

05) 2.5*l* கொண்ட பானம் 250ml கொண்ட பாத்திரத்தில் ஊற்றப்பட்டது எனின், அது எத்தனை பாத்திரங்களில் ஊற்றப்படலாம்?

(..................................)

06) 0.4, 0.8, 1.2, 1.6 ☐ பெட்டிக்குள் வரவேண்டிய தசம எண்ணை எழுதுக.

07) சுற்றளவைக் காண்க.





(..................................)

08) இங்கு பெறக்கூடிய முக்கோணங்கள் எத்தனை?



(..................................)

09) இங்கு பெறக்கூடிய சதுரங்கள் எத்தனை?



(..................................)

10) அப்ரானின் வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் 2km 800m ஆகும். அவன் 900m நடந்தும் மீதியை பேருந்து வண்டியிலும் வருவான் எனின், அவன் பேருந்து வண்டியில் பயணம் செய்த தூரம் எவ்வளவு?

(..................................)

11) [12 × 3] [18 + 9] [9 × 1] [96 / 12]

என்பதை இறங்கு வரிசைப்படுத்துக.

(..........................................................................................)

தேர்தல் ஒன்றில் A, B, C, D என்ற 4 அபேட்சகர்கள் பெற்ற வாக்குகள் பின்வருமாறு:

| அபேட்சகர் | பெற்ற வாக்கு |
|---|---|
| A | 8438 |
| B | 7904 |
| C | 4357 |
| D | 4081 |

13) A அபேட்சர் பெற்ற வாக்கு எந்த இரு அபேட்சகர் பெற்ற வாக்குகளுக்கு சமனாகும்?

(........................................................)

14) A, B அபேட்சகர்கள் பெற்ற வாக்குகளிடையேயான வித்தியாசம் எத்தனை?

(........................................................)

15) 4 அபேட்சகர்களும் பெற்ற மொத்த வாக்குகள் யாது?

(........................................................)

14. நாம் சென்ற கல்விச்சுற்றுலா எனும் தலைப்பில் கருத்துள்ள 4 சொற்களுக்கு குறையாத 6 வசனம் எழுதுக.

1) ..........................................................................................
2) ..........................................................................................
3) ..........................................................................................
4) ..........................................................................................
5) ..........................................................................................
6) ..........................................................................................

(நிறைவுற்றது)

ஆசிரியர்:- U.L.M சாஜித்,
அல்-மஷ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை, நிந்தவூர்.
தொலைபேசி இலக்கம்: 077-9597407

கல்விச்சுடர் தொடர்பான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 071-8724054/071-6850005/071-4273035




கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்திராகக் கலந்துகொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளர் சூ.சாள்ஸ் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (288)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட செ.குபேரநாதன், முன்னாள் அதிபர் க.சிவநடராசா, பாடசாலை அதிபர் ந.பிரதா ஆகியோர் பாடசாலைச் சமூகத்தால் மாலை அணிந்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.



ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி உரையாற்றுவதையும் பாடசாலை அதிபர் திருமதி ந.சந்திரகுமார் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்குப் பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு மெய்வன்மைப் போட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்டச் செயலக அபிவிருத்தி உதவியாளர் பா.சிறீபவன் மற்றும் பாடசாலை அதிபர் செல்வி நா.ஜெயராணி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னம்பலங்களின்.......

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

போட்டியிட வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தார்.

(அவ்வாறானால் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் தமிழீழ தனியரசுக்குள் வரவில்லையா என்ற கேள்வி எழுகிறது.)

தேர்தல் முடிவடைந்த பின்னர் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றக் குழு இது தொடர்பாகத் தீர்மானித்து செயற்படுமென முடிவு எடுத்த பின்னர் வெள்ளிக்கிழமை மாலை கஜேந்திரகுமார் மீண்டும் புதிய நிபந்தனை ஒன்றை முன்வைத்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வேட்பாளர் பட்டியலில் சேர்க்கப் பட்டிருந்த தன்னுடைய பெயரையும் விநாயகமூர்த்தியின் பெயரையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக செல்வராசா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரின் பெயர்களைச் சேர்க்குமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது வேட்பாளர் தெரிவுக்குழுவுக்கு சங்கடங்களை ஏற்படுத்தினாலும் அவற்றை பரிசீலிக்கும் நடவடிக்கை களில் ஈடுபட்ட போதுதான் ஞாயிறு காலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திடீரென ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்து தான் வெளியேறுகிறார் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவித்த போதிலும் தமது கட்சியைச்சேர்ந்த ஏனையவர்கள் தொடர்பாக அவர் எந்த அறி விப்பையும் இதுவரை வெளியிடவில்லை.

அவரின் வெளியேற்றம் என்பது அவரின் சுயமான முடிவு இல்லை என்றும் பிரித்தானியாவில் உள்ள சிலரின் அழுத்தம் காரணமாகவே அவர் இந்த முடிவை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் எனவும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியார் சிலரின் அழுத்தங்கள் காரணமாகவே இந்த முடிவை எடுத்தார் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வட்டாரங்கள் கருதினாலும் என்னைப் பொறுத்தவரை இது பொன்னம்பலங் களின் குழப்பகரமான அரசியல் பயணங்களில் ஒன்றுதான்.

தமிழ் காங்கிரஸ் கட்சியின் இந்த வெளியேற்றம் மட்டக்களப்பு, அம் பாறை, திருகோணமலை மாவட்டங் களில் ஒரு வீதம் கூடப் பாதிப்பை ஏற்படுத்தப்போவதில்லை.

ஆனால் யாழ். மாவட்டத்தில் மட்டுமே ஓரளவு பாதிப்பை ஏற்படுத் தலாம். யாழ். மாவட்டத்தில் கூட குமார் பொன்னம்பலத்தின் மறைவின் பின்னர் ஓரளவுக்கு அனுதாபம் காரணமாக 2000ஆம் ஆண்டில் ஓர் ஆசனத்தை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி பெற்றிருந்தது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை பிளவு படுத்த வேண்டும், பலவீனப் படுத்த வேண்டும், கிழக்கு மாகாணத் தைச்சேர்ந்த சம்பந்தனை ஓரங்கட்ட வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷ அரசும், மேற்குலக நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கங்கணம் கட்டிச் செயற்பட்டனர். அண் மைக்கால நகர்வுகளைப் பார்க்கும் போது இந்த இரு தரப்பினரின் முயற்சிளும் வெற்றி பெற்றுவருகின்றன என்றே தெரிகிறது.

எது எப்படி இருந்தபோதிலும் மஹிந்த ராஜபக்ஷ அரசும் சிங்கள தேசமும் எதிர் பார்ப்பது போல அல்லது மேற் குலக நாடு களில் உள்ள விடு தலைப் புலிகளின் பிரதிநிதிகளின் எண்ணங்களுக்கு இசை வான தீர்ப்பை நிச்சயம் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் வழங்க மாட் டார்கள் என்றே நம்புகிறேன். ***


வெள்ளிவிழாவை முன்னிட்டு

அனைத்து கணினி பாடநெறிகளுக்கும் CSC வழங்கும்

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை

25 YEARS

மேலதிக விபரங்கள் எமது பயிற்சிமையங்களில்

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088


## 2 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 27 . 05 . 1970

மறைவு 19 . 02 . 2008

அமரர்

### சோமசுந்தரம் சதானந்தன்

(உரிமையாளர், ஈசன் மோட்டார் விற்பனை நிலையம்)

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
உள்ளத்தில் நினைவுகள் நிறைந்துள்ளன
ஈர விழிகளுடனும் ஏங்கும் உள்ளத்துடனும்
தங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"பிருந்தாவனம்",
இல 13B, ஐயனார் கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்.
(கிஷ்கிந்தாராம், [illegible])

(95050)

## ஊற்று நிறுவனம்

### தொழில் பயிற்சி நெறிகள் (2010) - பயிலுனர்கள் விண்ணப்பம்

கனேடிய உலக பல்கலைக்கழக சேவையும் (WUSC), ஊற்று நிறுவனமும் இணைந்து அமுல் செய்யும் தொழிற்பயிற்சித் திட்டத்தின் கீழ் வடமராட்சிப்பிரதேசத்தில் பின்வரும் தொழிற்பயிற்சி நெறிகள் பங்குனி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

01. கணனி வன்பொருள் திருத்துதல் (07 மாதங்கள்)

02. மரவேலை (07 மாதங்கள்)

இப்பயிற்சி நெறிகளைப் பயில தகைமையும், ஆர்வமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிலுநர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று அவற்றை பூர்த்தி செய்து 06.03.2010ஆம் திகதிக்கு முன் கையளிக்கவும்.

**பதவி வெற்றிடம்**

01. கணக்கு உதவியாளர், பயிலுநர்கள்.

தகைமைகள்: HNDA, B.Com. க.பொ.த.உயர்தரம் (வர்த்தகம்)

02. சாரதி (ஓட்டோ)

தகைமைகள்: சாரதி அனுமதிப்பத்திரம், ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

தகைமையானவர்கள் சுயவிபரங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு *10.03.2010ஆம் திகதிக்குமுன் அனுப்பிவைக்கவும்.*

பணிப்பாளர், ஊற்று நிறுவனம், மாலைசந்தி, அல்வாய் கிழக்கு, அல்வாய்.
தொ.பே.இல: 0212264505. (92169)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 ★ 01 ★ 1940

மறைவு 09 ★ 03 ★ 2009

### அமரர் வேலன் மாணிக்கன்

(ஓய்வுபெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்)

*திதி: சதுர்த்தசி (27.02.2010)*

மானிட வாழ்வின் மகத்துவம் தெரிந்தாய்
மேதினி இதிலே மேன்மைகள் புரிந்தாய்
நாவினில் உண்மை நயம்பெறு சேவை
யாவிலும் நேர்த்தி நன்மையுன் சேர்க்கை
பாரிது உம்மை மறந்துதான் போமோ?
ஆண்டது ஒன்றா ஆயிரம் வரினும்
நீண்டவும் புகழை ஊரது பகரும்
சாந்திகொள் ஐயா சரித்திரம் பேசும்.

வேரவல்,
மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை. (95067)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி மாசிலாமணி கனகாம்பிகை

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நீராவியடியை வசிப்பிடமாகவும், இந்தியாவில் வசித்தவருமான மாசிலாமணி கனகாம்பிகை (19.02.2010) வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் இளையபிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், முத்தையா நல்லம்மா தம்பதியரின் மருமகளும், நாகரெத்தினத்தின் மருமகளும், மாசிலாமணியின் (கடை மாமா) அன்பு மனைவியும், தவமணி (ரதி-கனடா), பாலகுமாரன் (ராசன்-கனடா), செஜராசன் (சின்னராசன்-பிரான்ஸ்), திலகவதி (ராசாத்தி-இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயகுமார் (உதயன்-கனடா), கிளி(கனடா), தர்சினி (பிரான்ஸ்), கோபு (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, பாலசிங்கம் மற்றும் கண்ணம்மா (இந்தியா), பரமேஸ்வரி (பிரான்ஸ்), பரநிருபசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புவனேஸ்வரி, கமலாதேவி (இலங்கை), பிரகலாதன் (இந்தியா), சிவராமலிங்கம் (பிரான்ஸ்), லீலாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரதீஸ், ரமிதா, ரதீஸ்ஷன், மயூரன், செந்தூரன், மதுசன் (கனடா), நிசாந்தி, நிருசன், நிசாந்தன் (பிரான்ஸ்), பார்த்தீபன், கஜலக்ஷன், விவேக்ஷன் (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2010) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு.மாசிலாமணி (கணவர்).
இந்தியா. தொ.பே: 00914426504107.
உதயன்: 9056538731 (கனடா).

(95902)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர் அமரர் சைவப்புலவர் வ. கந்தசாமி



''அரிது அரிது மானுடராய் ஆதல் அரிது'' என்ற முதுமொழிக்கிணங்க இம் மனிதப் பிறவி நமக்கு வாய்த்தது முற்செய் தவத்தினாலேயே.

எனும் வள்ளுவர் வாக்குக்கமைய அத்தகு மனிதப்பிறவி எடுத்த யாவரும் பகுத்தறிந்து செந்நெறி உணர்ந்து சீரிய வாழ்வினை மேற்கொண்டொழுக வேண்டும்.என்பதை நம் முன் னோர் பலர் எடுத்துரைத்து,வாழ்ந்து காட்டிச்சென்றனர்.

இவ் வழிகாட்டலின் வழிச்செல்வோராக எம்மிடையே ஒரு சிலரையே நாம் காண்கின்றோம். என்னை? நோற்பார் சிலர் நோவாதோர் பலர் ஆகலின்,அத்தகையோரை நாம் காண்பதும், பேசுவதும் அவரோடு இணங்கிப்பழகுவதும், அவ்வழிப்படுத்தலும் எம் மேலைத்தவப்பேறே.வடமராட்சிப் பிரதேசத்தில் அமைந்த பொலிகண்டி கந்தவனக் கடவையில் 1931- 01-18ஆம் திகதியில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று ஆசிரியராகி திருமணத்தின் பயனாக கந்தர்மடம் யாழ்ப்பாணத் தில் வாழ்ந்து 2010-01-18 ஆம் திகதி நோர்வே நாட்டில் அமரத் துவம் எய்திய சைவப்புலவர் கலாநிதி வல்லிபுரம் கந்தசாமி அவர்களும் மேற்சொன்ன ஒரு சிலரின் ஒருவராகக் கொள்ளத்தக் கவர் எனலாம். சிவந்த நிறமுடைய,மெல்லிய உருவம், வெள்ளை வேட்டி, வெள்ளை மேலங்கியோ அல்லது சால்வைப் போர்வை நெற்றியிலணிந்த விபூதி, சந்தனம், குங்கு மப்பொட்டுடன் கூடிய நெற்றி, அத்தியாவசிய காலங்களில் அணியப்படும் உருத்திராக்க மாலை'

இதற்கேற்ற பொலிவுடன் எம்மி டையே உலாவி,அன்புடன் பழகி அறிவார்ந்த வழி காட்டி வகித்த பதவிகள் யாவற்றிலும் திரிகரண சுத்தியுடன் பணியாற்றி பலரது உள்ளத்திலும் தனக்கெனத் தனியிடம் பெற்றுக்கொண்ட பெருந்தகையே அமரர் சைவப்புலவர் கலாநிதி வ.கந்தசாமி அவர்கள்.

பண்டைத் தமிழ் சைவ நூல்களை நன்கு ஆராய்ந்து கற்று தாம் இன்புற்றதோடு தம்மையடைந்த மாணவர்களுக்கும் உளங்கொள்ளுமாறு கற்பித்த நல்லாசிரியர்.

கல்விப்பணியாற்றிய தாபனங்களில் தம்கடைமைகளை கல்விச்சமூகத்தினர் யாவ ரும் போற்றத்தக்கவகையில் நிறைவேற்றிய முகாமையாளர். சைவசமயப் பணியாற்றும் சபைகள், சங்கங்கள், மன்றங்கள் யாவற்றிலும் முழுமையாகப் பூரண ஈடுபாட்டுடன் பங்காற்றிய பங் காளன். பல்வேறு ஆலயங்களின் வளர்ச் சிக்கும் மேம்பாட்டிற்கும் அயராது தொண்டாற் றித் தொழுதுழைத்த பெருந்தகை.

## நீத்தார் நயப்புரை

'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்றதற்கிணங்க எப்பணியில் ஈடுபட்டாலும் திரிகரண சுத்தியுடன் அப்பணி சித்தியடைவதற்காகத் தன்னை முழுமையாக அதனில் ஈடுபடுத்தி, நிறைவேற்றி அனைவரின் அன்பையும் மதிப்பையும் தன்பால் ஈர்த்துக் கொண்ட அறிவுடைச் சான்றோன்.கல்விப் பணியுடன் சமூகப்பணி யினையும் சமயப் பணியினையும் ஆற்றக்கூடிய வகையில் அமைந்த சைவபரிபாலன சபை, சைவப் புலவர் சங்கம் ஆலய பரிபாலன தர்ம கர்த்தா சபை போன்றின்னோரன்ன நிறுவனங்களின் செயலாளராக, தலைவராக மற்றும் பொறுப்பார்ந்த பதவிகளை வகித்து அவற்றின் பல்வேறு பணிகளையும் செவ்வனே வழிப்படுத்தி நெறியாழ்கைக்குச் சிறப்பான சேவையாற்றியவர்.

"வினைப்போகமே ஒருதேகம் கண்டாய்
வினை தான் ஒழிந்தால்
ஒரு தினைப் போதளவும் நில்லாது''

என்ற மூதுரைக்கிணங்க அன்பர், அமரர்கந்தசாமி அவர்களின் இவ்வுலக வாழ்வுக்கு அமைந்த மாயை வடிவாகிய தனுகரண புவன போகங்கள் யாவும் அவரின் முன்செய் பிரவாகவநாதியான வினையின் பயனாகவே கிடைத்தன. அவற்றை அனுபவித்து முடிக்குங்காலம் வரையும் அவர் அவ்வுடலோடு இவ்வுலகில் சீவிதமாக.இருக்க வேண்டியது நியதி தத்துவம். நியதி காலதத்துவம் முன்னிட ஒழிந்து அடுத்த நிலையடைந்தது. அதுவே அமரரின் இவ்வுலக வாழ்வின் இறுதி-இறப்பு.

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது
நாம் கடவுளை வணங்கி
முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்''

என்னும் நாவலர் பெருமானின் வேதசாரமாகிய வாக்கியத்தைக் கற்றாங்கு கற்று, தன் உள்ளேவாங்கி, உள்பொருள் உணர்ந்து, தன்வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டி, எம்மையெல்லாம் தம்பால் அன்பெனும் பண்பால் ஈர்த்து, அப்பெரும் பெயர் முருக நாமத்துள் ஒன்றானதையே தம்பெயராகக் கொண்டு நடமாடிய அமரர் சைவப்புலவர் கலாநிதி சைவபூஷணம் வ.கந்தசாமி அவர்களின் ஆத்மா ''ஆடவல்லான் திருக்கழற்கீழ் பேராவின்புற்றிருக்க'' எனப்பிரார்த்தனை செய்வதே எங்கடனாகும்.

சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, தலைவர், அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் உபதலைவர் (சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்).

# வாசகர் திருமுகம்

## இவர்களின் தயவான கவனத்திற்கு...

யாழ். வேம்படிச்சந்தியிலுள்ள அரசியல் கட்சி ஒன்றின் அலுவலகத்தின் முன்னால் தினமும் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர்.

தமது இழப்புகளுக்கு நிவாரணம் பெறும் நோக்குடனேயே தாம் காத்து நிற்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு அரசநிர்வாக கட்டமைப்பு இயங்கி வருகிறது. அரச அதிபர் , உதவிஅரசாங்கஅதிபர், கிராமசேவகர் என இந்த நிர்வாகக் கட்டமைப்பு மக்களை நோக்கிச்செல்கிறது.இப்படி ஒரு நிர்வாகக் கட்டமைப்பு இயங்கிக்கொண்டிருக்கையில் ஓர் அரசியல் கட்சி எவ்வாறு நிவாரணம் வழங்க முடியும்?

பொலிஸ்,நீதிமன்றம் என்பனவற்றின் தயவான கவனத்திற்கு இது சமர்ப்பணம்.

ந.பரமேஸ்வரன்,
யாழ்ப்பாணம்


# மக்கள் முகம் மக்கள் முகம்



பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் சிரேஷ்ட பதிவாளர் நாயகமாகக் கடமையாற்றிவந்த ந.சதாசிவஐயர் அவர்கள் தற்போது பிரதிப்பதிவாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். வடக்கிலும், கிழக்கிலும் கடமையாற்றி யுத்தத்தினால் இடம் பெயர்ந்து அல்லலுற்ற மக்களுக்குச் சேவைசெய்து வந்த இவர் தற்போது தலைமை அலுவலகத்தில் கடமையாற்றும் வேளையிலும் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களின் சான்றிதழ்களை பெற்றுக் கொடுப்பதிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி அலுவலகங்களை மீளப்புனரமைப்பதிலும் சிரத்தையுடன் செயற்பட்டு வருகின்றார். பதிவாளர் நாயகம் திணைக் களத்தின் வரலாற்றில் தமிழர் ஒருவர் பிரதிப்பதிவாளர் நாயகமாக நியமிக்கப்பட்டமை இதுவே முதற்தடவை.

# புத்தக சாலை

## சவால்களைச் சாதனைகளாக்கிய சாந்தி விக்னராசா




சாந்தியின் குடும்பத்தினரால் தொகுக்கப்பட்டு, இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர் மாண்புகு மிகு க.ஸ்ரீபவன் அவர்களால் வெளியிட்டுவைக்கப் பட்ட திருமதி கீதா ஜெராடீன் சாந்தகுமாரி விக்னராசா அவர்களின் ஞாபகார்த்த மலரைப் படித்த போது மேலைத்தேயப் புலவர்களுடைய கல்லறைப் பாடல்களைப் படிப்பது போலவும், புறநானூற்றுப் புலவர்களின் நடுகற் பாடல்களைப் படிப்பது போலவும் இருந்தது. அதற்கு மேலாக இம்மலர் அறிவு, ஆறுதல், நல்லிணக்கம், நேர்மை, நெஞ்சுரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியனவற்றை எமக்கு ஊட்டுவதாகவும் அமைகின்றது. இதனை ஆக்கிய சங்கீதா, சவீந்திரா, சஞ்சேந் திரா ஆகிய சாந்தி விக்னராசாவின் பிள்ளைகள் ஆங்கில மொழியில் 'இம்மலர் வெறுமனே மிகவும் நேசிக்கப்பட்ட எங்கள் அம்மாவின் வாழ்வு பற்றிய நயப்புரைகளையும் சான்றுரைகளையும் தொகுத்துத் தரும் தொகுதியல்ல. இது ஒரு வியத்தகு வாழ்வுக்கு நன்றி கூறுவதாகவும்,துயர் பகிர்வதாகவும், துயர் வெளிப்பாடாகவும் அமைந்தது'' என்று கூறியிருப்பது மிகவும் பொருத்தமாகவுள்ளது.

''உலகுக்கு காதல் கடிதம் அனுப்பும் ஆண்டவருடைய கையிலே நான் ஒரு சிறிய பென்சில்'' என்று சாந்தி கூறுவதான ஓர் அருமையான வாசகம் மலர் முன் அட்டையிலே தரப்பட்டுள்ளது. ''எழுதிச் செல்லும் விதியின் கை'' என்று 'ஒமர் கய்யாம்' பாடினான். அதற்கு மாறாக எழுதிச் செல்லும் இறைவனின் கை இங்கே நினைவு கூறப்பட்டுள்ளது . ஆண்டவர் கையிலே சாந்தி ஒரு சிறிய பென்சிலாக இருப்பதென்பது மிக அரிய தெய்வீகக் கலைக்கோலமாகும்.

இந்த மலரிலே 'சாந்தியின் வாழ்வுடன் வாழும் கணவர்' விக்னராசா 'சவால்களைச் சாதனைகளாக்கிய சாந்தியின் வாழ்க்கை வரலாறு' எழுதியுள்ளார். உரைநடையிலே அமைந்ததாயிருப்பினும், அப் பகுதியினைப் படிக்கும் பொழுது ஒரு நீண்ட கவிதைக் கதையினைப் படிப்பது போல இருந்தது. பணிஸ் புதிய சுவை கொடுத்த இடம், நெருப்பாறு கடந்து சென்று கணவனைக் காப்பாற்றிய சாவித்திரியை நினைப்பூட்டும் இடம் அற்புதமாக அமைகின்றன. யாழ்ப்பாணக் கல்லூரியிலே இளையவர்களாக விக்னராசாவையும் சாந்தியையும் கண்டிருக்கிறேன். அவர்களுடைய வாழ்வின் உயர்வினைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். இவ்வரலாற்றைப் படித்த போது மனது கரைந்தது. இறைவனுள் சேர்வதற்கு சாந்திக்கு ஏன் இந்த அவசரம்? என்று நான் எண்ணினேன். நாகாரோஹினி மற்றும் நிரு எழுதிய ஆங்கிலக் கவிதையும் இதே கேள்வியைத் தான் கேட்கின்றது.

Yor Were in Such a mighty hurry
To serve humanity Such haste
As if you felt your clock was ticking fast
Lest you might not have enough time to last.

வாசிக்க நெஞ்சை உருக்கும் இன்னொரு கட்டுரை நாம் நன்கு அறிந்த பிரபலம் வாய்ந்த ஊடகவியலாளர் திரு . ஈ.ஆ.கு.ஜெயராஜ் ஆங்கிலத்தில் ''My Friend Shanthi- A personal Tribute'' என எழுதிய பகுதியாகும். வாழ்ந்த வாழ்வும் வளமும் கண்ணைப் பனிக்க வைக்கும் முடிவும் பற்றி அற்புதமான மொழி நடையிலே எழுதப்பட்டுள்ளது. விக்னராஜாவும் ஜெயராஜூம் இரு இலக்கியங்கள் படைத்துள்ளனர்.

பெருந்தொகையான அஞ்சலிச் செய்திகளைக் கொண்டதாக இம்மலர் அமைகின்றது. சமயத் தலைவர்கள், அமைச்சர்கள், நீதியரசர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள்,சட்டத்தரணிகள், பல்கலைக்கழகச் சமூகத்தினர்,நண்பர்கள் என அஞ்சலிச் செய்தி அனுப்பியவர்களைப் பட்டிய லிட லாம். செய்தி அனுப்பிய பெரும்பாலானவர்கள் சாந்தியினுடைய புன்னகை பற்றிக் குறிப்பிட்டு மனம் நெகிழ்ந்துள்ளனர்என்றும் 'இன் முகத்துடன் புன்சிரிப்பு நிறைய' என்றும் 'புன்னகைக்குள் புனிதமும் புகழ் விரும்பாக்கொள்கையும்' என்றும் ''The Smile is her 'Trade Mark'. Even after a day's work both at the University and home. the Smile never fades. The smile is the same whether you are a prince or a pauper"என்றும் "Always with a smiling face and a cheerful dispo sition" என்றும் கூறப்பட்டுள்ளன. சாந்திக்குத் தூவப்பட்ட கவிதை மலர்கள் பல துயர் பகிர்வனவாகவும், துயர் துடைப் பனவாகவும், நயம் மிகுந்த பாடல்களாகவும் அமைகின்றன. குறிப்பாக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பாடல்களே இச் சிறப்புகளு டையனவாக அமைகின்றன. தி. பரந்தாமனுடைய ஆங்கிலக் கவிதை நாம் பலவீன முறும் போது எங்களுக்குச் சக்தி தருகின்றன. நாம் உயர்வடையும் போது,எங் களைப் புகழ் கின்ற நாம், மத்தியிலிருந்து விலகும்போது எங்களுக்குக் கவனம் சொல்லுகின்ற; எங்கள் நாளாந்த கருமங்களை நடத்துவதற்கு எங்களைத் தயார் படுத்துகின்ற நாம் எம் இலட்சியத்தினை இழக்கும் போது, எங்களைத் தாளலயப் படுத்துகின்ற தனித்துவமான தாய் என்று சாந்தியைக் குறிப்பிடுகின்றது. ஆங்கிலத் தில் அவர் நயம் மிக்க சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். இது போன்ற கவிதை கள் இம் மலரிலே இடம் பெற்றுள்ளன. இம்மலரினுடைய இன்னொரு சிறப்பு 'செத்தும் கல்விக் கொடை கொடுக்கும்' பண் பாகும். சாந்தி எழுதிய ஆய்வுக் கட்டுரைகளும், அறிக்கைகளும், விக்னராசாவினுடைய கருத்துச் செறிவு டைய கட்டுரைகளும்,சொற்பொழிவுகளும் மொழி, ச ட்டம், அரசியல் பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் உதவக் கூடியன. துயர்பகிர்வுக்கு மேலாக கல்விப் பகிர்வும் செய்வதாக இம்மலர் விளங்குகின்றது. இம்மலருக்கு அணிந்துரை எழுதிய செஞ்சொற் செல்வன் ஆறு. திருமுருகன் 'கல்வெட் டில்' இறப்பும் பிறப்பும் பேசப்படும். இம்மலரில் வாழ்வும் வளமும் வாழ்ந்த பாதை யும் பேசப் படுகின்றது . இம்மலரைப் படிப்பவர்கள் அம்மலருக்குரியவரை மட்டுமன்றி தம் வாழ்வினையும் நின்று நினைக்க வழிகாட்டும்' என்று கூறியிருப்பது பொருத்தமாய் அமைகின்றது. மனம் தளரும் போது; சவால்களை எதிர் கொள்ளும் போது; அமைதிவேண்டி நிற்கும் போது இம் மலரினை எடுத்து வாசியுங்கள். அந்தச் சின்னப் பென்சில் உங்களுக்கும் ஆண்டவரிடமிருந்து ஆறுதல் கடிதம் வரைவிக்கும்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வண்ணை கன்னாதிட்டிப்பதி

# ஸ்ரீ காளி அம்பாள் ஆலய

# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 28.02.2010



### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச்செய்தி

கன்னாதிட்டி உறையும் ஸ்ரீ காளி அம்பாள் ஆலயத்தில் இன்று இரதோற்சவம். அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியான அன்னை ஆதிபராசக்தியானவள் காளி அம்சமாக அருள்புரியும் இந்த ஆலயம் யாழ்ப்பாணத்திலே கன்னாதிட்டி என்னும் புண்ணிய ஸ்தலத்திலே அமைந்துள்ளது.

வருடாந்த மஹோற்சவத்திலே ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். இன்று அடியார்களின் துன்பதுயரங்களை அழித்தொழிக்க அம்பிகையானவள் சித்திரத்தேரிலே சிங்காரப்பவனி வருகின்ற காட்சி பக்திமயமானது.

'அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாமே' என்பதற்கிணங்க அடியார்கள் அனைவருக்கும் அருள்புரியும் நோக்கில் அம்பாள் தேரிலே ஆரோகணிக்கும் அற்புதக்காட்சியை இன்று அடியார்கள் எல்லோரும் கன்னாதிட்டியிலே கண்டு களிக்கலாம்.

ஆகவே, வழிபடும் அடியார்களின் வருத்தம் போக்கும் அம்பிகையின் திருவருட் கடாட்சம் அனைவருக்கும் கிட்டவேண்டுமென்று உளமாரப்பிரார்த்தித்து நல்லைக் குருமணியின் பாதபங்கஜம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைந்து இறும்பூதெய்து கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

### கன்னாதிட்டி வளரும் காளிகாதேவியே சரணம்!

அம்பிகையே ஈஸ்வரியே காளி பரமேஸ்வரியே!
ஆதிபராசக்தியே தாயே அகிலாண்ட நாயகியே
நம்பியுன்னைச் சரணடைந்தோம் காத்தருள் புரிவாய்!
நாளுமுனைத் தோத்தரித்தோம் நல்லருள்தந்திடம்மா
வெம்பியழுகின்ற எமது வேதனையைப் போக்கிடவே
தேரிலே ஆரோகணித்து வீதிவலம் வந்திடம்மா!
தும்பிமுகனும் தம்பியும் தொழுகின்ற காளித்தாயே
எங்களுக்குருள்புரிய அருட்காட்சியளிப்பாய் தேவி!

உன் நாமம் உச்சரிக்க உவகையே பெருகுதம்மா!
உலகநாயகியே உனைச் சரணடைந்தோம் தாயே
என் நாவில் நீயுறைந்து நல்வாக்குத் தந்து நிதம்
நிம்மதியாய் நாம் வாழ அருள்புரிவாய் அம்மா!
சின்னாபின்னமாய் எம்வாழ்வு சிதைந்து போகாமல்
சிங்காரப் பவனிவந்து தீமைகளை அழித்திடம்மா!
கன்னாதிட்டி வளரும் காளிகாதேவியே தாயே
காத்தருள்புரிவாய் அம்மா திருவடி சரணம் சரணம்

சிவநெறிக் கலாநிதி, இராசையா ஸ்ரீதரன்.

### அம்பாளின் திருக்கடாட்சம் பெற்றுய்ய வேண்டுகின்றோம்

ஸ்ரீகாளியம்பாள் தேவஸ்தானத்தின் வரலாற்றில் இன்றைய நாள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு திருநாளாகும். புதிய தேர் நிலையத் தரிப்பிட மண்டபத்தில் சித்திரத் தேர்தனில் ஆரோகணித்துப் பவனிவரும் திருக்கோலக் காட்சியை கண்டு இன்புற்றிருக்கப் பெரும்பாக்கியம் பெற்றுள்ளோம். அத்திபாரமிடப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் ஒன்பது மாதங்களில் நாம் எதிர்கொண்ட சோதனைகளையும் வேதனைகளையும் வெற்றிகொள்ள வைத்த அம்பாளின் கிருபையை எண்ணி வியந்திருக்கின்றோம். இக்கட்டடத்தை பூர்த்திசெய்ய ஆரம்பத்திலிருந்து கடுமையாக உழைத்த செயற்குழு உறுப்பினர்கள் பெருநிதி பெற்றுத்தர தங்கள் ஒத்துழைப்பை நல்கிய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் அம்பாளின் திருவருட் கடாட்சம் பெற்றுய்ய வேண்டுகின்றோம்.

நந்தபாலா,
செயலாளர், அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்.


யாழ்.நகரில்...
வஜிதா
சைக்கிள் சேவிஸ் மற்றும் திருத்தகம்
நாவலர் வீதியில் புகையிரதத் தண்டவாளத்துக்கு அருகில் அமைந்துள்ளது.
இல. 512, கே.கே.எஸ்.வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: வசந்தன்
தொ.பே: 0779670441

கிருஷ்ணா நகை மாளிகை
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
கிருஷ்ணா அடைவு கடை,
370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

நியூ நகுலா
ஜூவல்லறி
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்:
நியூ லலிதாஸ்
ஜூவல்லறி
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறி நதியா
டிஜிட்டல் கலர்லாப்
வீடியோ & ஸ்ரூடியோ
லக்ஸன் பிளாஸா கட்டடம்,
108 A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8412
சிறி நதியா நகை மாளிகை
இல.01 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
இணை நிறுவனம் :
சிறி நதியா நகை மாளிகை
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6972
சாரங்கா ஜூவலறி
55, செட்டித்தெரு, கொழும்பு-11.
தொ.பே:0112434971

ஸ்ரீலக்சுமி ஜூவல்றி
162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

TRACTOR SPARES
Importers and Dealers In Tractor Spare Parts
Specilist in Massy ferguson Engineers.
7, Kannathiddy Road, Jaffna.

Multilac Paint வகைகளை பிரதேச வாரியாக உள்ள எமது Colour Bank களில் பெற்றுக்கொள்ளலாம்
கந்தவேலன் ரேடர்ஸ்
இல.110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222822

யசோ
மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212227566

பாரத்
ஸ்ரூடியோ
82/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மணியம் கபே
சைவ உணவகம்
309, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கரன் ஜூவெலர்ஸ்
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

துர்க்கா நகைப் பூங்கா
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கஜமுகன்
ஹாட்வெயர்
கட்டடப் பொருள்கள், மிற்சுஜி சீமெந்து, பெயின்ற் வகைகள், கல் ரெக்ஸ் ஒயில் என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
கஜமுகன் ஹாட்வெயர்
இல.147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

லக்சன் வீடியோ
பழைய, புதிய பாடல்கள் Record பண்ணிக் கொடுக்கப்படும். கெசட் வகைகள் நியாயமான விலையில் கொடுக்கப்படும்.
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

சந்திரன் ஸ்ரோர்ஸ்
பலசரக்கு வியாபாரம்
சகல பொருள்களும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சண்முகம்
சைவ உணவகம்
கன்னாதிட்டி (சிவன் கோயிலடி), யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வைத்தியப் பரிசோதனை


பொது அறிவுப் பரீட்சை


வைத்திய நிபுணர் பேரானந்தராஜா கண்காட்சியைப் பார்வையிடுகிறார்


நோயாளருக்கான உணவுவகை


உணவுக் கட்டுப்பாடு தொடர்பான செயலமர்வு


கண்காட்சி குறித்து அபிப்பிராயம் எழுதப்படுகிறது

# பன்முகத் தன்மைகொண்ட பயன்தரு கண்காட்சி

# நாளாந்தம் பெருகிவருகிறது பார்வையாளர் கூட்டம்

'நீரிழிவை வெற்றி கொள்வோம்' எனும் மாபெரும் விழிப்புணர்வு விழா மற்றும் கண்காட்சி நிகழ்வின் ஐந்தாம் நாள் நிகழ்வில் நேற்று மட்டும் சுமார் மூவாயிரம் மக்கள் பங்கேற்றுப் பயனடைந்துள்ளனர்.

இந்தக் கண்காட்சி நிகழ்வினைக் காணவென கடந்த ஐந்து தினங்களிலும் பத்தாயிரத்துக்கும் அதிகளவான மக்கள் கலந்து கொண்டனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தினமும் 2500 இற்கும் அதிகமான மக்கள் பங்குபற்றும் இந்தக் கண்காட்சி நிகழ்வில் நேற்று பொதுமக்கள், நீரிழிவு நோயாளர்கள் அதிகம் பங்கு பற்றியதனைக் காண முடிந்தது.

இந்தக் கண்காட்சி நிகழ்வில் நேற்று மதியம் வரையும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், தாதிய மாணவர்கள், பல்கலைக்கழக, கல்வியியற் கல்லூரி மாணவர்களும், பிற்பகலில் அரச, அரசசார்பற்ற நிறுவன மற்றும் தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், நீரிழிவு நோயாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.ஒரு வார காலமாக இடம்பெறும் இந்த 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' எனும் விழிப்புணர்வுக் கண்காட்சி ஐந்து பகுதிகளாக இடம் பெற்று வருகிறது.

உடற்பயிற்சி சாதனங்களை உள்ளடக்கிய பகுதி, உணவு சம்பந்தமான ஆலோசனை வழங்கும் பகுதி, நீரிழிவினால் நீண்ட கால பாதகமான விளைவுகளை விளக்கும் வகையிலான பகுதி, குருதிப் பரிசோதனையும் மருந்துகள் தொடர்பான விளக்கப் பகுதி, மன ஆறுதலுக்கான அறிவுரைகள் வழங்கும் பகுதி என ஐந்து பிரிவுகளாக இடம்பெற்று வருகின்றன.

தினமும் காலை 8.30 மணி தொடக்கம் 7.30 மணி வரையும் இடம்பெறும் இந்தக் கண்காட்சி நிகழ்வில் குருதிப் பரிசோதனை, விசேட மருத்துவ ஆலோசனைகள், சுகவாழ்வுக்கான திரைப்படங்கள், நீரிழிவு ஏற்படாமல் தடுக்கும் மற்றும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முறைகள், நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்த வேண்டிய மாத்திரைகள், உபகரணங்கள் மற்றும் உடலுறுதி, மன ஆறுதலுக்கான வழிவகைகள் என்பன மிகச் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றன. நீரிழிவு நோயாளருக்கு மன ஆறுதல்களும் பகுதியில் மிகக் குறைந்த விலையில் அழகிய பூ மரங்கள், வளர்ப்புப் பிராணிகள், மீன்கள், நீரிழிவு நோயாளர்கள் மற்றும் சுகதேகிகளுக்கென தயாரிக்கப்பட்ட இறுவெட்டுகள், நூல் கள் என்பனவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### பரிசோ தனை செய்யப்பட்டவர்களில் 42 பேருக்கு நீரிழிவு

இந்தக் கண்காட்சி நிகழ்வில் விசேடமாக உருவாக்கப்பட்டிருக்கும் குருதிப் பரிசோதனை ஆய்வு நிலையத்தில் தமது குருதியைப் பரிசோதனை செய்தவர்களில் 42 பேருக்கு நீரிழிவுநோய் இருப்பது இனங்காணப்பட்டிருக்கிறது. நோயின் தாக்கத்துக்கு ஏற்ப அவர்களை வைத் தியசாலைக்கு சென்று சிகிச்சை பெறும்படியும், தேவையானவர்களுக்கு விசேட ஆலோச னைகள், அறிவுரைகள் வழங்கப்பட்டுவருகிறது.

### உடன் பயன் அறியும் திட்டம்

மேலும், நீரிழிவு தொடர்பான இந்தக் கண்காட்சி நிகழ்வினை முழுமையாகப் பார்த்தவர்க ளிடமிருந்து அபிப்பிராயம் பெறப்பட்டு வருகிறது. அது மட்டுமின்றி கண்காட்சியில் பார்த்த, அறிந்த விடயங்களைக் கொண்டு மதிப்பிடுவதற்கு என 'ஒன் லைன்' மூலம் வினாக் கள் வழங்கப்பட்டு தேர்ச்சி பெறுபவர்க ளுக்கு உடனேயே சான்றிதமும் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறன பல்வேறு அம்சங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் இந்தக் கண்காட்சி நிகழ்விடம் விழாக் கோலம் பூண்டு பெரும் சன நடமாட் டத்துடன் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்து வருகிறது. மக்களின் நலன் சார்ந்த இவ்வாறான நிகழ்வுகள் மற்றும் விடயங்களுக்கு பொது மக்களிடமிருந்து வரவேற்புக் கிடைக்கும் என்பதற்கு இந்தக் கண்காட்சி ஒர் உதாரணம் எனலாம்.

## ஏனையோரும் பார்க்கத் தூண்ட வேண்டும்



பொது வைத்திய நிபுணர்
ரி.பேரானந்தராஜா
(யாழ்.போதனா வைத்தியசாலை)

உலகளாவிய ரீதியாக மக்களில் பத்து வீதத்தினர் நீரிழிவு நோய்க்கு உட்பட்டிருக்கிறார்கள். இந்த நீரிழிவு நோய் குறித்து எமது மக்களும் மிக விழிப்பாக இருக்க வேண்டும். கண் பார்வை இழப்பு, சிறுநீரகம் பாதிப்பு, இதயப்பாதிப்பு, கால், கை விறைப்பு, அவயவ இழப்பு என்பன நீரிழிவு நோயி னால் ஏற்படும் பாதிப்புகளில் சில.

இவற்றிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கில் மருத்துவ பீட மாணவர்கள், யாழ். போதனா வைத்தியசாலை என்பன இணைந்து இந்தக் கண்காட்சியினை நடத்தி வருகின்றன.

நீரிழிவு நோய் வராமல் தடுத்தல், கட்டுப்படுத்தல் தொடர்பான அறிவுரைகள், ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

நீரிழிவு நோயாளர் மட்டுமின்றி ஏனையவர்களின் எதிர்பார்ப்புக்கள், சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதாக இந்தக் கண்காட்சி அமைந்திருக்கிறது. குறிப்பாக நீரிழிவு நோய் ஏற்பட்டதன் பின்னர் தேவையான உணவுப் பழக்க வழக்கம், மன ஆறுதலை எற்படுத்தக் கூடிய தியானம், யோகாசனம் மற்றும் தேவைப்படும் மருந்துவகைகள் என்பன மிகத் தெளிவாக படக் குறிப்புக்களாக காட்சிப்படுத்தப்பட்டு கவர்ச்சிகரமான முறையில் கண்காட்சியின் நோக்கம் நிறைவு செய்யப்பட்டு வருகிறது.

ஐந்து பிரிவுகளாக இடம் பெறும் இந்த விழிப்புணர்வுக் கண்காட்சியை நீரிழிவு நோயாளர்கள் மட்டுமின்றி இளம் சமூகத்தினரும் பார்த்துப் பயன்பெற வேண்டியது அவசியமானது.

இந்தக் கண்காட்சியைப் பார்த்துப் பயன்பெற்றவர்கள், ஏனையோரையும் பார்த்துப் பயன்பெறக் கூடியவாறு வழிப்படுத்தித் தூண்ட வேண்டும். இந்தக் கண்காட்சி நிகழ்வின் மூலம் மக்கள் மத்தியில் பரவலாக நீரிழிவு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கும் என நினைக்கிறோம்.

## இளம் சமூகத்தினர் மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது



வைத்திய கலாநிதி ப.நந்தகுமார்
(சமுதாய வைத்தியத் துறை)

நீரிழிவு நோயாளர்கள் மற்றும் பொது மக்கள் தம்முடைய சந்தேகங்களைக் கேட்டு தெளிவு பெற்றார்கள். உடல் நிறை கூடிய பிள்ளையை உடைய பெற்றோர்கள் தமது பிள்ளையின் நிலையைக் குறிப்பிட்டு நீரிழிவுநோய் ஏற்படுமா எனக் கேட்டனர்.

நீரிழிவு நோய் மாற்றக் கூடிய நோயா எனவும் பலர் கேட்டனர்.உடற்திணிவு சுட்டி குறித்து அறிந்து கொள் விரும்பினார்கள்.குருதி அமுக்கமுள்ளவர்கள் தமக்கு நீரிழிவு நோய் வருமா எனச் சந்தேகத்தைத் தீர்க்க விரும்பினர். அத்துடன் குருதியிலுள்ள குளுக்கோஸ் அளவு குறித்தும் அறிய விரும்பினார்கள். மன நெருக்கீட்டினை எவ்வாறு கையாள்வது? பெண்கள் கற்பகால நீரிழிவு தொடர்பாக தமது சந்தேகங்களைக் கேட்டனர். நீரிழிவு நோயாளி பாவிக்க வேண்டிய மருந்துகள் உள்ளிட்ட விடயங்களைக் கேட்டு தெளிவு பெற்றுள்ளனர். எமது மக்களிடையே சிறுவர், நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு இல்லாது உள்ளனா. எனவே இளம் சமூக மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்பட இந்தக் கண்காட்சி மேலும் பயன்படும் என நம்புகிறேன்.

## மூட நம்பிக்கைகளை அகற்றும் விளக்கங்கள்



சி.சிவலோகநாதன் (ஆசிரியர்)

நீரிழிவினால் ஏற்படும் பக்கவிளைவுகள் தொடர்பான முழுவிளக்கங்களையும் வழங்கினார்கள். அதுமட்டுமன்றி உணவு தொடர் பான முக்கிய மூடநம்பிக்கையை விளங்கப் படுத்தி அது மிகவும்தவறானது எனவலியுறுத்தினார்கள். மக்களுக்குப் பயனுள்ள இவ்வாறான கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும். அதன் மூலம் மக்கள் பயனடைய வேண்டும். இதனை ஒழுங்கு செய்த அனைவருக்கும் பார்வையாளர்கள் சார்பாக நன்றி கூறுகிறேன்.

## சந்தேகங்களைக் கேட்டு மிகவும் தெளிவடைந்திருக்கிறேன்

சி.செல்லத்துரை (நீரிழிவு நோயாளி) வயது 66



என் போன்ற நோயாளர்களுக்கு மிக மிகப் பயன்தரும் கண்காட்சி இது.எனக்கு இதுவரையிலி ருந்து வந்த சில சந்தேகங்களைக் கேட்டு தெளிவடைந் திருக்கிறேன். இதனால் மிகத்திருப்தியான மன நிலையில் நான் இருக் கிறேன். நாம் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக மிகவும் பொறுப்புணர்வுடன் எமக்கு விளங்கப்படுத்தினார்கள்.

என்னைப் போன்ற நீரிழிவு நோயாளிகள், வயது முதிர்ந்தவர்களின் எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்றவிதமாக கண்காட்சி அமைந்திருந்தது. உதயன் பத்திரிகையில் இந்தக் கண்காட்சி நிகழ் வினை முதன்மைப்படுத்தி மக்களுக்கு அறிவித்து வருகின்றார்கள். உதயன் பத்திரிகையில் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கென பிரசுரிக்கப்படும் வினாக்கள் மூலம் பல சிறார்கள் பயனடைந்து வருகிறார்கள்.

இவ்வாறு பல வகையில் உதவிவரும் உதயன் பத்திரிகைக்கு எமது நன்றிகள்.

## மாணவர்கள் அனைவரும் பார்க்க வேண்டிய கண்காட்சி

ப.நிரோஜன் (மாணவன்)



நான் பலகண்காட்சிகள் பார்த்திருக்கின்றேன். எனினும் இந்த விழிப்புணர்வுக் கண்காட்சி மிக நல்லமுறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. நான் கேட்ட கேள்விகளுக்கு விளங்கக் கூடியமாதிரி பதிலைத் தந்தார்கள். கொலஸ்ரோல் எப்படிக் கூடுகிறது என விளங்கப்படுத்தினார்கள். அது எனக்குப் பிடித்திருக்கிறது. நீரிழிவு நோய் தொடர்பாக அனைத்து விடயங்களையும் அறியக் கூடியதாக இருந்தது. இந்த ஆக்கபூர்வமான விழிப்புணர்வுக் கண்காட்சியை மேலும் சில தினங்கள் நீடித்தால் மிக நன்றாக இருக்குமென நான் நினைக்கிறேன். இதை மாணவர்கள் அனைவரும் பார்க்க வேண்டும்.

தொகுப்பு : உமா
படங்கள் : கரன்

யாழ்.மருத்துவ பீடத்தில் நடைபெறும் "நீரிழிவை வெற்றிகொள்வோம்" கண்காட்சி மூலம் அது குறித்த விழிப்புணர்வைப் பெறுவோம்

பிந்தாதீர்கள்! இன்று சனிக்கிழமை வரை மட்டுமே (காலை 8.30 மணி - மாலை 7.30 மணிவரை)
★குருதிப்பரிசோதனை. ★ நீரிழிவு ஏற்படாமல் தடுக்கும் முறைகள். ★விசேட மருத்துவ ஆலோசனைகள்.
★மன அழுத்தத்துக்கான பரிகாரங்கள். ★ மாணவ[illegible]
★ சுகவாழ்வுக்கான குறுந்திரைப்படங்கள்.

ஊடக அனுசரணை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரவணைக்கும் கரங்கள்

## தவக்காலச் சிந்தனை



அன்று ஒரு நாள் பேருந்து ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தவேளையில் ஓர் இளம் பெண்ணை அவதானிக்கக் கிட்டியது. அப்பெண்ணிற்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அவள் ''கலோ ஏன் எடுத்தனீ, ஏன் எடுத்தனீ'' எனப் பலமுறை வினாவினாள். கோபம் மிகுந்த கனத்த குரலில் கவலையையும் உள்வாங்கிப் பதற்றமின்றிப் பேசத் தொடங்கினாள். குறைந்தது 20 நிமிடங்கள் அவ்வுரையாடல் இருந்தது. பேருந்தில் பயணம் செய்வோர் பலர் அதனைச் செவிமடுக்கின்ற அளவிற்குத் தன்னையே மறந்து விரக்தி அடைந்த மனநிலையுடன் பேசுவது புரிந்தது. அது மட்டுமல்ல இது ஒரு வாலிபனுடனான உரையாடலாகவும் தெரிந்தது. அவளின் மனநிலைதான் என்ன? ஏமாற்றப்பட்ட, ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய மனநிலை. இவ்வாறு பல உள்ளங்கள் இன்றைய கால கட்டத்தில் இருப்பதை நாம் அவதானிக்கிறோம்.

இப்படிப்பட்டவர்களைப் பார்த்து இயேசு கூறுகின்றார். ''இப்பொழுது அழுது கொண்டிருப்போரே, நீங்கள் பேறுபெற்றவர்கள், ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள்'' (லூக் 6:21) அழுது கொண்டு இருப்பவர்களை நாம் அனுதினமும் எம் அனுபவத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. பிறர் அழுதுகொண்டிருக்க சிரித்துக் கொண்டு இருப்பவர்களாகப் பலர் இருக்கின்றனர். இதுவே தமது வாழ்வில் ஒரு இன்பமாகக் கருதுகின்றார்கள். ஆனால் இறை இயேசுவின் பதில் அழுகின்றவர்கள் மட்டில் அவர்கள் சிரித்து மகிழ்வார்கள் என்பதாகும்.

பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டு அதாவது ஏமாற்றம், பழிவாங்கப்படுவது, குற்ற உணர்வு, பலவிதமான துன்பங்கள், நோய்கள், வறுமை, இழப்புக்கள், தனிமை, சிறை வாழ்க்கை, முதுமை போன்ற நிலைகளுடன் தினமும் அழுது கொண்டிருப்பவர்களை நாம் காண்கின்றோம். இவை மனிதன் மனிதனுக்குச் செய்து வருகின்ற செயற்பாடே ஆகும். மனிதனை மாண்புடன் தமது சாயலாகப் படைத்த இறைவனுக்கு மனிதன் கொடுக்கும் பரிசு இதுதானா? நாம் ஒவ்வொருவரும் இதிலிருந்து மனமாற்றம் பெறவேண்டும்; காரணங்களைக் கண்டறிய வேண்டும். நாம் வாழ அழைக்கப்பட்ட ஒவ்வொரு சூழலிலும் அழுது கொண்டு இருப்பவர்களை இனங்காணுவோம். அவர்களுக்கு ஆறுதல் வழங்குவோம். நல்லதொரு சூழல், சமூகம் உருவாக வழி சமைப்போம். அனைவரும் சிரித்து வாழும் சூழலை உருவாக்க முன்வருவோம். இறை இயேசுவின் விருப்பத்தை நாமே நிறைவேற்றுவோம்.

திருமதி செல்வராணி ஞானரட்ணம்,
சுன்னாகம்.




# சகல வர்த்தகர்கள், கைத்தொழிலாளர்களுக்கும்

23.02.2010 ஆம் திகதி பிரதேசசபைச் செயலாளர் வர்த்தகர்களுக்கென நடத்திய கலந்துரையாடலில் என்னால் (செயலாளரினால்) முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்கனவே இயங்கிவந்த சங்கானை வர்த்தகர் கைத்தொழிலாளர் சங்கத்தின் செயலாளராக, 2005 ஆம் ஆண்டில் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட செயலாளர் என்ற வகையில், சொற்பகாலம் செயற்பட்ட மேற்படி சங்கத்தைப் புனரமைக்க வேண்டிய அவசிய தேவை எழுந்துள்ளது.

எனவே 06.03.2010 ஆம் திகதி சனிக்கிழமை சங்கானை சந்தை உட்புற மண்டபத்தில் புனரமைப்புக் கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். சகலரும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:சங்கானைப்பகுதி வர்த்தகர்கள், கைத்தொழிலாளர்கள் மட்டும் அழைப்பாக இதைக் கருதவும்.

த.சிவசுப்பிரமணியம்
உபதலைவர்.

செ.கோபாலகிருஷ்ணன்
செயலாளர்.

(95133)

கலைத்தூது அழகியல் கல்லூரியின் வளர்ச்சிக்காக
## திருமறைக் கலாமன்றம் வழங்கும்
# சலங்கையின் ஜதிகள்
- நடன அளிக்கைகள் -

காலம் : நாளை (28.02.2010) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 4 மணி
இடம் : கலைத்தூது கலையகம்
286, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமறைக் கலாமன்றம்
238, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

(சி/565151)

# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701250024 முதல் 701266560 வரை. சீட்டிழுப்பு இல. 626 திகதி 25-02-2010

வெற்றி எண்கள்
**02 28 36 58** ஆங்கில எழுத்து **P**

ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,000,000/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 2,000/= | 32,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 365 | 1,000/= | 365,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 633 | 1,000/= | 633,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14520 | 60/= | 871,200/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6947 | 40/= | 277,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 171794 | 20/= | 3,435,880/= |
| | | மொத்தம் ரூ. 6,414,960/- | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - M.D. மங்களிகா தமயந்தி பிரனாந்து - தெஹிவளை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - K. நந்தன நிஷாந்த - மாக்கந்துறை.

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,814,960/=

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அநுராதபுரம் | 701259658-3-28 |
| யாழ்ப்பாணம் | 701250820-3-35 |
| கேகாலை | 701257626-4-08 |
| கொழும்பு | 701251767-8-20 |
| கம்பஹா | 701264908-0-21 |
| கொழும்பு | 701251967-5-34 |
| மொனராகலை | 701254146-7-25 |
| பொலன்னறுவை | 701254665-5-27 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
**ரூ. 10,464,700/=**

தொடர் இல. 601292943 க்கு மேற்பட்ட டிக்கட்டுகள் 2010 மார்ச் 01 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

# கண்ணீர் அஞ்சலி



நாவடியைப் பிறப்பிடமாகவும், தாவடி அம்பலவாண வேத விநாயகர், யாழ்.வண்ணை வேங்கடேஸ்வரப்பெருமாள் ஆலய முன்னைநாள் பிரதம குருவும் தற்போது லண்டன் கிறவுளி மாநகரின் சொர்ணகாமாட்சியம்மன் ஆலயப் பிரதம குருவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தாவடியைச் சேர்ந்த

**சிவஸ்ரீ சுவாமி ரத்னசர்மா சுந்தரேசக்குருக்களின்**

திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவஸ்ரீ பால. வைத்தியநாத சிவாச்சார்யார் குடும்பம்**
**சிவாச்சார்யார் பீடம், ஊரெழு.**

(95126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு யாழ்.செயலகத்தில் இறுதிநாளான நேற்று அரசியல் கட்சியினர் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, இடதுசாரி விடுதலை முன்னணியின் முதன்மை வேட்பாளர் ந.ஸ்ரீகாந்தா ஆகியோர் வேட்பு மனுத் தாக்கல் செய்துவிட்டு திரும்பியபோது எடுக்கப் பட்ட படங்கள் இவை. யாழ்.செயலகத்துக்கு முன்னால் கூடியிருந்த ஆதரவாளர்கள், பொதுமக்களை இறுதியாக உள்ள படத்தில் காணலாம். *(படங்கள் : கவிநேசன்)*

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில் களம் இறங்கியோர்

யாழ்ப்பாணம்,பெப்.27

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 15 அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட களம் இறங்கியுள்ளன.

15 அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் விவரமும் சுயேச்சைக் குழு சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் விவரமும் வருமாறு:-

**தமிழரசுக்கட்சி**
**(சின்னம் - வீடு)**

மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சீ.வீ.கே.சிவஞானம், சேவியர் குலநாயகம், நடேசு இராசேந்திரன், கந்தையா அருந்தவபாலன், சிவஞானம் சிறிதரன், ஈஸ்வரபாதம் சரவணபவன், இராசரத்தினம் சிவசந்திரன், ஐங்கரநேசன் பொன்னுத்துரை, முடியப்பு றெமிடியஸ்.

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு**
**(சின்னம் - வெற்றிலை)**

டக்ளஸ் தேவானந்தா, சந்திரகுமார் முருகேசு, செல்வஸ்திரி அலன்ரின், பசுபதி சீவரத்தினம், அலெக்ஸ்சாண்டர் சூசைமுத்து, கந்தசாமி கமலேந்திரன், ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், முருகுப்பிள்ளை ஸ்ரீபதி, கிருஷ்ணபிள்ளை சிறிபவன், நவரத்தினம் யோகராசா, அப்துல் ஹமீம் மொஹமட் அமீன், அங்கசன் இராமநாதன்.

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**
**(சின்னம் - மிதிவண்டி)**

சின்னத்துரை, வரதராஜா, ஜோன் மனோகரன் கெனடி, கந்தசாமி திருலோகமூர்த்தி, சந்தனம் ஸ்ரீபன், நடேசு துரைராசா, நாகலிங்கம் குழந்தைவேலு, விஸ்வலிங்கம் மணிவண்ணன், பிரான்ஸிஸ் வின்சென்டீ போல், செல்லத்துரை சுப்பிரமணியம், பத்மினி சிதம்பரநாதன், செல்வராஜா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

**தமிழர்விடுதலைக் கூட்டணி**
**(சின்னம் - சூரியன்)**

ஆனந்தசங்கரி வீரசிங்கம், சதாசிவமூர்த்தி குமாரசாமி, மகாலிங்கம் செல்லப்பா, கோபிதாசன் சீவரத்தினம், திருஞானசம்பந்தர் தம்பையா, முருகேசு அரியகுட்டி, முத்துலிங்கம் செல்லப்பா, பத்மநாதன் சுப்பையா, இராஜஇராஜேஸ்வரி சுப்பையாபிள்ளை, சாந்தசொரூபன் இளையதம்பி, இரத்தினமணி இராசையா, சண்முகராசா வல்லிபுரம்.

**பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**
**(சின்னம் - மெழுகுதிரி)**

திருநாவுக்கரசு ஸ்ரீதரன், கந்தையா சிவராசா, நீக்கிலஸ் அரியரட்ணம், காளிக்குட்டி ஜெயகுமாரன், வசந்தநாதன் சிவநாதன், இராஜேந்திரம் செல்வராசா, கயிலாபதி பகீரதன், துரைஐயா மகாலிங்கம், இராஜரட்ணம் கோணேஸ்வரன், தில்லைநாதன் தங்க வேலு, அரியகுட்டி ஜோன், சின்னத்தம்பி தங்கராசா.

**தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள்**
**(சின்னம் - வள்ளம்)**

கந்தையா அருமைலிங்கம், ரமணி தங்கராசா, முத்து கோணலிங்கம், சுப்பிரமணியம் பவானி, மனோகரன் ஹரிகரன், சித்திரவேல் சிவானந்தி, நல்லசேகரம் சிவஜோதி, திகரன்பிள்ளை பிரஜித், பூபாலபிள்ளை ஹரதாஸ், சுப்பிரமணியம் யோகநாதன், வடிவேல் றமேஸ்குமார், சுந்தரராஜா சுதந்திரராஜா.

**ஈழவர் ஜனநாயக முன்னணி**
**(சின்னம் - கலப்பை)**

ரிச்சட் அருட்பிரகாசம், தெய்வேந்திரம் சிறிதரநாதன், இம்மானுவேல் கைமர், முத்துக்குமாரு சிவநாதன், கார்த்திகேசு யோகரட்ணம், மார்க்கண்டு துரைராஜா, சண்முகம் இராஜலிங்கம், சின்னையா செல்வநாயகம், பரம்ஜோதி வினோத்குமார், எம்.ஜெஸ்மின், சிங்கராசா ஞானேஸ்வரி, நாகலிங்கம் திருநாவுக்கரசு.

**இடதுசாரி விடுதலை முன்னணி**
**(சின்னம் - குடை)**

நல்லதம்பி ஸ்ரீகாந்தா, கனகலிங்கம் சிவாஜிலிங்கம், இரத்தினம் ஜெகராசா, தமியான் யூலியான், அருமைநாதன் தவநாதன், சுப்பிரமணியம் செல்வநேசன், பொன்ராசா பூலோகசிங்கம், கனகசபாபதி நமநாதன், மொஹமது இஸ்மாயில் உம்மசசீலா, விஜயதர்மா கேதீஸ்வரதாசன், சண்முகலிங்கம் சஜீவன், தியாகராசா இராசரத்தினம்.

**ஜனநாயக தேசிய கூட்டணி**
**(சின்னம் - வெற்றிக்கிண்ணம்)**

வீராயு லலித்குமார், டிசிமுத்து நடராசா, பாலசிங்கம் கமலகுமார், சிவகுருநாதன் மேனன், பத்மநாதன் கருணாவதி, தங்கரத்தினம் சசிகலா, அம்பிகைகுமார் லலிதா, சக்திவேல் தங்கேஸ்வரன், முத்துத்தம்பி பாலசுந்தரம், நாகரத்தினம் நளாயினி, முது மொஹமட் நிவாஸ், கோபாலன் அருளப்பன்.

**ஸ்ரீலங்க ஜயத பெரமுனை**
**(சின்னம் - உழவுஇயந்திரம்)**

சம்பத் விதான, நிலாந்தினி ராஜபக்ஷ, தினேஸ்குமார, உதயதர்மசிறி, சதுராத பிரியதர்சிக, நுனுகல நந்தாராம, தர்மசிறி ரணதுங்க, அனுரமத்துமகே, ஆனந்தகுணரத்ன, நிமல் குரே, பண்டாரஜெயசிங்க, சாந்த பண்டார சுனில் கமகே.

**சோஷலிச சமத்துவக் கட்சி**
**(சின்னம் - கத்தரிக்கோல்)**

திருச்செல்வம் சுப்பிரமணியம், கிருஷ்ணன் சித்திரகுமார், இராசேந்திரம் சுதர்சன், முத்துலிங்கம் முருகானந்தன், சிவலிங்கம் சிவசீலன், ராஜரத்தினம் ராஜவேல், மகாலிங்கம் திருமாறன், நந்தா விக்கிரமசிங்கி, பிரியதர்ஷ மதியவதா, நாகராசா கோடீஸ்வரன், ஐயம்பிள்ளை லக்ஷ்மன், நாகரத்தினம் பாலகௌரி.

**ஜனநாயக ஐக்கிய முன்னணி**
**(சின்னம் - இரட்டை இலை)**

செல்வரத்தினம் சாந்தகுமார், பாலசிங்கம் அனிஷன், சிஹாப்தீன் கிர்ஷாத், சண்முகநாதன் ஜெகன், சீவரத்தினம் மானன் விக்டர் லோநாதன், சிதம்பரப்பிள்ளை இராசேந்திரம், புஸ்பராசா புவிலன், மாயழகர் உதயகுமார், யோகராசா முகுந்தன், விஜயரத்தினம் பிரதீப், சண்முகலிங்கக் குருக்கள் ராஜீவ்பாவு, சின்னத்துரை அகிலேஸ்வரன்.

**ஐக்கிய தேசியக் கட்சி**
**(சின்னம் -யானை)**

திருமதி மகேஸ்வரன் விஜயகலா, நடராசா சண்முகவேல், தியாகர்ராஜா துவாரகேஸ்வரன், சாம்பசிவம் சத்தியேந்திரா, ராஜரத்தினம் சிறிதாமோதரராஜா, சண்முகசுந்தரம் லவகுமார், சின்னத்துரை குலேந்திரராஜா, அந்தோனி யூட் ராஜசிங்கம், வல்லி மகேந்திரம், சுந்தரலிங்கம் ஸ்ரீகஜன், மொஹமட் அப்துல்காதர் மொஹமட் மூபின், மமுனா லீபய் செயிட்அமீர்.

**ஐக்கிய சோஷலிச கட்சி**
**(சின்னம் - முச்சக்கரவண்டி)**

சுப்பிரமணியம் நகுலராசா, ஜீ.சிவரஞ்சன், எம்.மொஹைறய்ர், ரி.சுரேந்திரகுமார், பி.ராகுமார், கே.சிவராசா, ஏ.யோகநாதன், கே.ஜெயன்சி, ஏ.பசித், வீ.சின்னையா, எஸ்.சசிகுமார்.

**சுயேச்சை 01**
**(சின்னம் - இரட்டைக்கொடி)**
சங்கரலிங்கம் சத்தியசீலன்

**சுயேச்சை 02**
**(சின்னம் - மூக்குக் கண்ணாடி)**
சண்முகநாதன் மனோகரன்

**சுயேச்சை 03**
**(சின்னம் - ஹெலி)**
பர்ணாந்து யோசப் அன்ரனி

**சுயேச்சை -04**
**(சின்னம் - ஆமைப்பூட்டு)**
கதிரவேல் செவ்வேள்

**சுயேச்சை 5**
**(சின்னம் வானொலி)**
அன்ரனி தங்காதுஷாரா

**சுயேச்சை 06**
**(சின்னம் - கேற்றில்)**
காசிப்பிள்ளை செந்திவேல்

**சுயேச்சை 07**
**(சின்னம் - கணனி)**
பொன்னுத்துரை சிவபாலன்

**சுயேச்சை - 08**
**(சின்னம் - அணில்)**
அருணாச்சலம் சொக்கநாதன் சந்திரன்

**சுயேச்சை 09**
**(சின்னம் - பந்து)**
வல்லி நடராசா

**சுயேச்சை 10**
**(சின்னம் - பட்டம்)**
நாகமுத்து தணிகாசலம்பிள்ளை

**சுயேச்சை 11**
**(சின்னம் - மாம்பழம்)**
திலக் உடுகம

**சுயேச்சை 12**
**(சின்னம் - அன்னாசிப்பழம்)**
முஹமது அஹீத்தாஹீர். (ஒ-9)

# ஜனநாயக மக்கள் முன்னணியின் 9பேர் ஐக்கிய தேசிய முன்னணி அணியில் போட்டி

## மனோ கணேசன் கண்டியில்



கொழும்பு,பெப். 27

ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் 9 வேட்பாளர்கள் ஐக்கிய தேசிய முன்னணியின் பட்டியலில் போட்டியிடு கின்றனர்.

கண்டி மாவட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனும் -

கொழும்பு மாவட்டத்தில் பிரபா கணேசன், கலாநிதி ந.குமரகுருபரன் ஆகிய இரண்டு தமிழ் வேட்பாளர்களும் -

நுவரெலியா மாவட்டத்தில் லெ.பாரதிதாசன், மட்டக்களப்பு மாவட்டத்தில் வி.கணேஷானந்தம், வன்னி மாவட்டத்தில் எம்.ரவிச்சந்திரன், கம்பஹா மாவட்டத்தில் சி.விக்னேஸ்வரம் (ஜெரொம்), களுத்துறை மாவட்டத்தில் ஆர். மேகநாதன் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் எம்.சந்திரகுமார் ஆகியோரும் -

ஜனநாயக மக்கள் முன்னணியின் வேட்பாளர்களாக ஐக்கிய தேசிய முன்னணியின் யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றனர் என ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் இந்நாட்டில் வாழும் நான்கு பிரதான பிராந்தியங்களான வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு ஆகிய அனைத்துப் பிராந்தியங்களிலும் போட்டியிடும் ஒரே தமிழ்க் கட்சியாக ஜனநாயக மக்கள் முன்னணி வளர்ச்சி பெற்றிருப்பதை எதிர்வரும் தேர்தல் அடையாளப்படுத்துகின்றது எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது. (அ-சி)

# 11 மாவட்டங்களில் மு.காவின் 23 பேர் போட்டி ஐ.தே.முன்னணியின் வேட்பாளர்களாகக் களத்தில்



கொழும்பு,பெப். 27

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய முன்னணியின் பட்டியலில் 11 மாவட்டங்களில் 23 பேர்ரக் களமிறக்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

கொழும்பு மாவட்டத்தில் சபீக் ரஜாப்தீன், களுத்துறையில் அஸ்லம், கம்பஹாவில் ஷாபி ரஹீம், குருநாகலில் ரிஸ்வி ஜவ்பர் ஷா, புத்தளத்தில் எஹியா ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் எச்.எம்.எம். ஹரீஸ், பைஸல் ஹாஸீம், எம்.ஐ.எம். மன்சூர் ஆகியோரும், மட்டக்களப்பில் பஸீர் சேகுதாவூத், முஹம்மட் முபீன், அல்ஹாஜ் லெவ்வை, முஹம்மட் ஹுஸைன் ஆகியோரும், திருகோணமலை மாவட்டத்தில் எம்.எஸ்.தௌபீக், ஹரீஸ் மாஸ்டர் ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

வன்னி மாவட்டத்தில் நூர்தீன் மசூரின் தலைமையில் அவருடன் சேர்த்து ஐந்துபேர் போட்டியிடுகின்றனர். அதேபோல் யாழ். மாவட்டத்தில் முபீன் மற்றும் அமீன் ஆகிய இருவர் போட்டியிடுகின்றனர். (அ-சீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது காரைநகர் பிரதேசசபையில்
கடமையாற்றும் கு. ரவீந்திரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### நமசிவாயம் குமாரசாமி

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைகி ன்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
காரைநகர் பிரதேசசபை.

(C/65152)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2010

காலம் : 21.03.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : முற்பகல் 10மணி
தலைவர் : R.இராஜாராம்
இடம் : யாழ்.மத்திய கல்லூரி

**நிகழ்ச்சி நிரல்**

* இறை வணக்கம்
* தலைவர் உரை
* போஷகர் உரை
* சென்ற கூட்ட அறிக்கை
* செயற்பாட்டு அறிக்கை
* பிரேரணைகள் (இருப்பின்)
* புதிய நிர்வாக சபை தெரிவு
* பிற விடயங்கள்
* நன்றியுரை

★ *பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் 12.03.2010இற்கு முன் சமர்ப்பிக்கவும்.*

*இன்று (27.02.2010) சனிக்கிழமை நடைபெறும் மத்திய இரவு நிகழ்வில் (Central Nite) கலந்து கொள்ள விரும்புபவர்கள் இன்று நண்பகல் 12 மணிக்கு முன் பதிவு செய்து கொள்ளவும்*

யாழ்.மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(சி/565157)
*ச.தவநேசன்,*
*கௌரவ செயலாளர்.*

## நன்றியுடன் நினைவு கூருகின்றோம்



இம்மைக்குள்
21★12★1910

கர்த்தருக்குள்
27★02★2008

திருமதி
### ஹரியட் தம்பிநாயகம்

மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல்
கர்த்தருக்கென்றே நல்மனதோடே
ஊழியஞ்செய்யுங்கள்
*எபே: 6:8*

(95136)

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 808 திகதி: 25.02.2010

ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 05 21 38 60
போனஸ் இல: 35

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 12,988,546.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 02 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 300 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14693 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 206116 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**10,591,620.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**12,988,546.50**

ஐந்து லெட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
தொலைபேசி: 2470662, 2470663
இணையம்: www.nlb.lk



## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

06 கிழமைகள் பூர்த்தியாகி, முற்றாகப் பூச்சி நீக்கப்பட்ட BOXER (பொக்சர்) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0777531552

## குத்தகைக்குக் காணி தேவை

கராச் போடுவதற்கு காணி அல்லது கடை தேவை.
தொடர்புகொள்ள வேண்டியது: 0213008615.
K.K.S றோட்டில் விரும்பத்தக்கது

## Vision Care Optical
### மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர்

குறைந்த விலையில் அனைவருக்குமான மூக்குக் கண்ணாடிகள் விநியோகிக்கப்படும்.
★ சன் Glass - 100.00 தொடக்கம்
★ வாசிப்புக் கண்ணாடி (Reading Glass) - 300.00
*மாணவருக்கான விசேட சலுகை:*
இலவச வைத்திய பரிசோதனையுடன் 2500.00க்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்.
இல: 17, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## ஒத்து மாறல்

கொழும்பு, ஆட்பதிவுத் திணைக்களத்தில் பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் 2 இல் கடமையாற்றும் ஒருவர் யாழ். மாவட்டத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்புகளுக்கு - 0113159263, 0213217086

## விற்பனைக்கு

**3 Wheeler விற்பனைக்கு. Bajaj 4 Stroke, Double Head Light, Latest Model, Red Colour**
குறைந்த பட்ச பாவனை.
உடன் விற்பனைக்கு.
**0714 - 896711**

## காணி குத்தகைக்கு உடன் தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லையை அண்டிய பகுதிகளில் (கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் கடற்கரைப்பகுதிகள் கூடுதலாக விரும்பத்திற்குரியன) 5-10 பரப்புக் கிணற்றுடன் கூடிய வெறும் காணி 5-10 வருட குத்தகைக்கு உடன் தேவை. குத்தகை முற்பணம் பற்றிய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
தொடர்பு: இல 396 (570), கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ்,முட்டை என்பன மலிவான விலையில் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலை குறைக்கப்பட்டுள்ளது.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி,கலட்டி.
T.P:0217912783


## பனங்கள் 'சீஸன்'; விலையில் சரிவு

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் பனங்கள்ளின் விலையை ஐந்து ரூபாவினால் குறைத்துள்ளனர்.

பனங்கள் 'சீஸன்' ஆரம்பித்துள்ளதை அடுத்து விலை குன்றக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்னிலங்கைப் பயணிகள் பனங்கள்ளை விரும்பி அருந்துவதால், ஏ-9 வீதியை அண்மித்த பகுதிகளில் உள்ள தவறணைகளில் பனங்கள் விற்பனை அமோகமாக நடைபெறுகிறது என்றும் - இதனால் தங்களுக்கு அரிதாகவே கள் கிடைக்கிறது என்றும் மதுப்பிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

(ஒ-207)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கதிர்காமு சிவானந்தம்

யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி. ஆசிரியரான திரு. சி.ரங்காதரனின் தந்தையாரின் இழப்பிற்கு அனுதாபம் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(95132)

யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்,
ஆசிரியர், ஊழியர் நலன்புரி சங்கம்.

## நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



### சிவஸ்ரீ சுவாமி சுந்தரேசக் குருக்கள்

(முன்னாள் பிரதம குரு, தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் தேவஸ்தானம், யாழ்.வண்ணை வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானம், தற்போது லண்டன் கிறவுளி மாநகர் சொர்ண காமாட்சி அம்மன் ஆலய நிர்வாகியும் பிரதம குருவும்) அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா ஸ்ரீ வைகுண்டப் பேறு அடைய ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளையும் பிரார்த்திக்கின்றோம்.

M.A.பஞ்சநாதன் (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி அலுவலர்) குடும்பம்,
A.ரவீந்திரன் (லண்டன்) குடும்பம்,
P.N.சுதர்ஷன் (ஆசிரியர்) குடும்பம்.

(95734)

## மரண அறிவித்தல்

### டக்ளஸ் டிலான்



குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட டக்ளஸ் டிலான் அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் டக்ளஸ்-வசந்தி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், அந்தோனி- பொன்னரியம், காணிக்கை- திரேஸ்மலர் ஆகியோரின் அன்புப் பேரனும், தீபிகா, தர்சிகா, பிராங்கோ, டெஸ்மன், நிசான் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.02.2010) சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து புனித கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*றெக்ளமேசன்,*
*குருநகர்.*
(95147)
தகவல்:
கிறேவின்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
### கதிர்காமு சிவானந்தம்
(ஓய்வுபெற்ற ஊழியர், சிமேந்துத் தொழிற்சாலை)

கடந்த 12.01.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அன்புள்ளங்களுக்கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்புடன் இன்று (27.02.2010) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
(95138)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அன்பு உள்ளங்களின் நினைவலைகள்

வேலுப்பிள்ளை சரவணமுத்து
தோற்றம்: 10.11.1918
மறைவு: 14.03.2008



சரவணமுத்து ஆயிலியம்
தோற்றம்: 27.06.1937
மறைவு: 15.12.1993

எமது வாழ்வில் வழிகாட்டிய அன்புத் தெய்வங்களை நினைவுகூருகின்றோம்.

இவர்களின் நினைவாக நாளை (28.02.2010) ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறும் அன்னதானத்தில் பங்குபற்றுமாறு அன்பர்கள், அடியார்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திருவாசக முற்றோதுதலும் நடைபெறும்.

*கோண்டாவில் கிழக்கு.*
(95142)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தெற்கில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புத் தலைவர்கள் வேட்புமனுத்தாக்கல் செய்த பின்னர் ஆதரவாளர்களால் வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் வேட்புமனுத்தாக்கல் செய்யச் செல்வதை இரண்டாவது படத்திலும், ஜனநாயக தேசிய முன்னணியின் பிரமுகர்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா சகிதம் வேட்பமனுத்தாக்கல் செய்யச் செல்வதை இறுதிப்படத்திலும் காணலாம்.

# சர்வதேச சமூகத்தின் உதவியுடன் யுத்தக் குற்ற விசாரணை அவசியம்

## பிரிட்டிஷ் எதிர்க்கட்சி இலங்கையிடம் வற்புறுத்து

லண்டன், பெப். 27

இலங்கையின் ஆயுத மோதலின் இறுதித் தருணங்களில் இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்து சர்வதேச சமூகத்தின் உதவியுடன் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரிட்டனின் எதிர்க்கட்சியான 'கொன்சவேர்ட்டிவ்' அமைப்பும் இலங்கை அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுத்தக்குற்ற விசாரணைகள் குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனிற்கு இலங்கை ஜனாதிபதி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு சிறிதளவு முயற்சிகளைக் கூட இலங்கை எடுக்கவில்லை என 'கொன்சவேர்ட்டிவ்' கட்சியின் நிழல் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரிட்டனில் ஆரம்பமாகியுள்ள 'உலகத் தமிழர் பேரவை'யின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது, மீண்டும் ஆயுத மோதலிற்கான சூழ்நிலையை உருவாக்கலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சிவில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும். அவர் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளை பிரிட்டனும் சர்வதேச சமூகமும் உன்னிப்பாக அவதானிக்கும். - என்றும் வில்லியம் ஹேக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களிலிருந்து ஒருலட்சத்து 90 ஆயிரம்பேர் விடுவிக்கப்பட்டுள்ள அதேவேளை, இன்னமும் பலர் மெனிக்பாம் முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசுடன் நாம் தொடர்ச்சியாக இது குறித்து உரையாடி வந்துள்ளமையுடன் அவர்களை வெளியேற அனுமதிக்குமாறும் கோரி வந்துள்ளோம். நாங்கள் அவர்களது நிலைமையை மறக்கக் கூடாது.

### சமாதானம் வெற்றி கொள்ளப்பட வேண்டும்

இதேவேளை, இலங்கையில் சமாதானம் இன்னமும் வெற்றிகொள்ளப்பட வேண்டியுள்ளது. அது நீண்ட காலம் நிலைக்க வேண்டுமானால் அதனைப் பாதுகாக்க வேண்டும்.

இதற்காக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடினமான அரசியல் விவகாரங்களுக்குத் தீர்வு காணுமாறும் தமிழ் மக்களினதும், ஏனைய சிறுபான்மை இனத்தவர்களினதும் கரிசனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் கோருகிறோம்.

இலங்கையின் ஆயுத மோதலின் இறுதித் தருணங்களில் இருதரப்புகளும் இழைத்தவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்து முழுமையான சர்வதேச விசாரணை இடம்பெறவேண்டும் என நாங்கள் கருதுகிறோம்.

கடந்த வருடம் மே மாதம் இலங்கை ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படும் என உறுதியளித்தார்.

எனினும், இதுவரை மிகச் சிறியளவு கூட உறுதியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை மோதலில் ஈடுபட்ட சகல தரப்பாலும் இழைக்கப்பட்ட துஷ்பிரயோகம் குறித்து சர்வதேச சமூகத்தின் உதவியுடன் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

நாடொன்றில் செயற்படும் ஜனநாயக முறைமையுள்ளது என்பதற்கான அறிகுறியாக தேர்தலை மாத்திரம் கருத முடியாது.

மனித உரிமைகளுக்கான மதிப்பே ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கான முக்கிய தூணாகும். இலங்கையின் மனிதஉரிமை நிலைவரம் குறித்து எமக்கு நீண்டகாலக் கவலை உள்ளது.

எதிர்க்கட்சி வேட்பாளர் சரத்பொன்சேகா கைது செய்யப்பட்டமை இலங்கையின் மோசமான மனிதஉரிமை சூழலில் மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு அதன் ஜனநாயக பாரம்பரியங்கள் மற்றும் பல கட்சி ஆட்சிமுறை குறித்த பெருமை உண்டு. இவ்வாறான சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவதால் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அருமையான வாய்ப்பை அரசு இழக்கும் ஆபத்துள்ளது. - என்றார் (சி)

## தொழில்நுட்பக் கல்லூரி நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.27

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் 3 மாத கால பயிற்சி நெறியில் மேலும் 3 ஆயிரம் மாணவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை இன்றும் நாளையும் கல்லூரியில் இயங்கும் விசேட கருமபீடத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரியின் பதில் அதிபர் எஸ். துரைராஜா இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தக் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கான அனுமதியை கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி ந. யோகராஜா தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுள்ளார் என்றும் -

இந்தப் பயிற்சி நெறியைத் தொடர விரும்பும் மாணவர்கள் ஆவணங்களுடன் நேரில் வருமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-1)

## பட்டச்சான்றிதழ் பெறுவது குறித்த கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான பட்டச்சான்றிதழ் பெறுவது தொடர்பான கலந்துரையாடல் புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டம் பெற்ற யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரிகள் அனைவரையும் இக்கலந் துரையாடலில் கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது. (1)

## பலாலி கலாசாலை பரீட்சை பெறுபேறு

யாழ்ப்பாணம், பெப்.27

பலாலி ஆசிரிய கலாசாலை 2006/2007 ஆம் கல்வியாண்டுக்கான இறுதிப் பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் கலாசாலை விளம்பரப் பலகையில் பெறுபேறுகளைப் பார்வையிடலாம். என்றும் அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, 2007/2008 ஆம் கல்வியாண்டுக்கான ஆங்கில நெறியினருக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது என்றும் அவர்களுக்கான அனுமதிஅட்டைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி வழங்கப்படும் என்றும் [illegible] துள்ளார். (ஒ)


உளமார வாழ்த்துகின்றோம்



யாழ்.மண்ணில்
பதினாறு ஆண்டுகள்
ஹற்றன் நஷனல் வங்கியின்
சிரேஷ்ட முகாமையாளராக
தனது பதவியை வகித்து வந்த
உயர்திரு
திசைவீரசிங்கம்
ஜெயராசசிங்கம்
அவர்கள் தம் நலன் கருதாது எம் மக்களின் நலன்காத்து உற்ற நண்பராய் தனது அளப்பரிய சேவையை வழங்கி தற்போது வடபிராந்திய முகாமையாளராக பதவிஉயர்வு பெற்று இம்மண்ணிற்குத் தொடர்ந்து சேவையாற்றவுள்ளமையையிட்டு உளமார வாழ்த்துகின்றோம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம் - கொழும்பு.


## வார இறுதி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.27

ஹற்றன் நஷனல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர்கள் மாநாடு இன்று காலை 9 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பிரதமவிருந்தினராக வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர்களில் ஒருவரான திருமதி கிருஷாந்தி தம்பையா கலந்து கொள்வார்.

வங்கியின் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம், கிழக்கு பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் ஏ.வி. பீடில் ஆகியோரும் இன்றைய மாநாட்டில் பங்கு பற்றுவர். (ஒ-1)

* * *

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ஒ-207)

* * *

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர்ப்பிரிவு மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர் மகளிருக்கான விளையாட்டுப் போட்டிகளை நாளை பி.ப.3 மணிக்கு நடத்தவுள்ளனர்.

போட்டிகள் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளன.

பங்கு பற்ற விண்ணப்பித்தவர்கள் உரிய நேரத்திற்கு முன்னர் வருகை தருமாறு சங்கச் செயலாளர் திருமதி ம. கீர்த்திநாதன் அறிவித்துள்ளார். (ஒ-207)

* * *

யாழ்.மாவட்ட கராத்தே சங்கம் நடத்தும் கராத்தே பயிற்சிப்பாசறை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியலாயத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தரும் அன்ரோடினேஸ் பயிற்சியை வழங்கவுள்ளார்.

மாணவர்கள் தங்களது கழக தலைமை ஆசிரியர்கள் ஊடாக இந்த பயிற்சி பாசறையில் கலந்து கொள்ள முடி யும் என யாழ் மாவட்ட கராத்தே சங்கச் செயலா ளர் ஆர்.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

* * *

யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணியளவில் 'சென்ரல் நைற்' நிகழ்வு மத்திய கல்லூ ரியில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவனும், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் வேர்ணன் பெர்னாண்டோவும் கலந்துகொள்வர்.

* * *

செவிப்புலன் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கலட்டியில் உள்ள நிறுவனத்தின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளன்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

* * *

பருத்தித்துறை, அத்தியடி ஆரம்ப சுகாதார நிலையம், கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கென மாகாண சுகா தார அமைச்சின் நிதி மூலம் அமைக்கப் பட்ட புதிய கட்டடம் என்பன நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளன.

* * *

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கென மாகாண சுகாதார அமைச்சின் நிதி மூலம் அமைக்கப் பட்ட புதிய மகப்பேற்று விடுதிக்கட்டடம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு வைத்திய கலாநிதி திருமதி ப.ஏகாம்பரமூர்த்தி தலைமையில் வைபவ ரீதியா கத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சுச் செயலாளர் இ.இரவீந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஏ.ஈ. ஞானசோதி, யாழ்.பிராந்திய சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஒ-1)

* * *

யாழ். மாவட்ட மெய்வன்மைத் தொழில் நுட்ப அலுவலர் சங்கத்தின் விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

இலங்கை மெய்வன்மை தொழில் நுட்ப அலுவலர் சங்கத்தின் பிரதி நிதி கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

தரம் 4 பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கல், மரதன் ஓட்டப் போட்டிக்கு நடுவர் தெரிவு ஆகியனவும் இடம் பெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்.



## சுரேஷ் அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளை வானில் வந்தோரால் கல் வீச்சு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-1)

## யாழ்.தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஆட்சேபனைகள் நிறைவு பெற்றதும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், அரச அதிபருமான கே.கணேஷ், யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் ஆகியோர் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உத்தியோக பூர்வமாக தகவல்களை வெளியிட்டனர்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 16கட்சிகளும், 16சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத்தாக்கல் செய்தன.

அவற்றில் 4சுயேச்சைக் குழுக்களினதும் ஒரு கட்சியினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. வேட்பு மனுத் தாக்கல் தொடர்பான விண்ணப்பங்களில் பூரணமான தகவல் வழங்கப்படாமையால் அவை நிராகரிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 12 சுயேச்சைக் குழுக்களும் 15அரசியல் கட்சிகளும் போட்டியிடவுள்ளன.

இங்கு தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகளின் விவரம் வருமாறு:-

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், இலங்கைத் தமிழரசுக் கட்சி, சோஷலிஸ சமத்துவக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயகத் தேசியக் கூட்டணி, ஜனசெத பெரமுன, ஐக்கிய சோஷலிஸக் கட்சி, எல்லோரும் மக்கள் எல்லோரும் மன்னர்கள் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயக ஐக்கிய முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இடதுசாரி விடுதலை முன்னணி, ஈழவர் ஜனநாயக முன்னணி.

தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேச்சைக் குழுக்களின் தலைமை வேட்பாளர்களின் விவரம் வருமாறு:-

சந்திரலிங்கம் சத்தியசீலன், சண்முகநாதன் மனோகரன், பர்னாந்து ஜோஸப் அன்ரனி, கதிரவேல் செவ்வேள், அன்ரனி தங்கா துஷாரா, காசிப்பிள்ளை செந்தில்வேல், பொன்னுத்துரை சிவபாலன், அருணாச்சலம் சொக்கநாதன் சந்திரன், வல்லி நடராசா, நாகமுத்து தணிகாசபிள்ளை, திலக் உடுகம, முகம்மது அஹீத் தாஹீர். (அ-9)

## மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுடன் முடிவடைந்துள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள பல அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தமது வேட்பு மனுக்களை சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் தாக்கல் செய்துள்ளன.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 38 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இங்கு 16 அரசியல் கட்சிகளும், 22 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

கிழக்கில் அம்பாறையில் 49 சுயேச்சைக் குழுக்களும் 17 அரசியல் கட்சிகளும் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ள அதேவேளை, மட்டக்களப்பில் 17 அரசியல் கட்சிகளும் 28 சுயேச்சைக் குழுக்களும் களத்தில் நிற்கின்றன. மட்டக்களப்பில் 315 பேர் 05 ஆசனங்களுக்காகப் போட்டியிடுகின்றனர்.

கண்டியில் 14 அரசியல் கட்சிகளும் 17 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ள அதே வேளை, நுவரெலியாவில் 14 சுயேச்சைக் குழுக்களும், 16 அரசியல் கட்சிகளும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் 15 அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

அநுராதபுர மாவட்டத்தில் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 240பேர் போட்டியிடுகின்றனர். 13 அரசியல் கட்சிகள், 7 சுயேச்சைக் குழுக்கள் களத்தில் குதித்துள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் 17 அரசியல் கட்சிகளும், 14 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இந்த மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 4 பேர் தெரிவுசெய்யப்படுவர்.

பதுளை மாவட்டத்தில் 12 அரசியல் கட்சிகளும் 5 சுயேச்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன. என்றுமில்லாதவாறு கூடுதல் வேட்பாளர்கள் களம் இறங்கியுள்ளனர். 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 324பேர் களம் இறங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னி மாவட்டத்தில் 16 அரசியல் கட்சிகளும், 12 சுயேச்சைக்குழுக்களும் மோதுகின்றன. அந்த அணிகளில் 252 பேர் களமிறங்கியுள்ளனர். இந்த மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் தெரிவுசெய்யப்படுவர். (அ-9-சி)

## டக்ளஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று உறுப்பினர்கள் களம் இறங்கியுள்ளனர். பிரபல பொருளியல் ஆசிரியரான சின்னத்துரை வரதராஜாவை முதன்மை வேட்பாளராகக்கொண்டு காங்கிரஸ் போட்டியிடுகிறது.

இந்த அணியில் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், செல்வராஜா கஜேந்திரன் ஆகிய முன்னாள் எம்.பிக் கள் இடம்பெற்றுள்ளனர். (சி)

## பிள்ளையானின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி வட்டாரங்கள், இது குறித்து பொலிஸ் அதிகாரிகளுக்குத் தாம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரச தரப்புடன் இணையாமல் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளதைத் தொடர்ந்தே கிழக்கு மாகாண முதலமைச்சரின் பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

## மனுத்தாக்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்து வாகன்ங்களும் உடைந்து சேதப்படுத்தப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் இருவர் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் பற்றி முறைப்பாடு செய்யச் சென்றபோது பேருவளை மற்றும் பயாகல பொலிஸார் முறைப்பாட்டை ஏற்கவில்லை எனக் கட்சி வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன.

இதுசம்பந்தமாகப்பயாகல பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு விசாரித்தபோது அத்தகைய முறைப்பாடு எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தனர். (அ-சி)

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளமையுடன், மிக விரைவில் சரத் பொன்சேகா இராணுவ நீதிமன்றின் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிராக சாட்சியமளிப்பதற்கு 25 பேர் முன்வந்துள்ளனர்.

அவருக்கு எதிராக ஆதாரங்களைச் சேகரிக்கும் பணிகள் முடிவடைந்துவிட்டன.

பொன்சேகா நவம்பர் 14 ஆம் திகதி இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். இதன் காரணமாக அவர் மே 14 ஆம் திகதி வரை இராணுவச் சட்டத்திற்கு உட்பட்டவராகின்றார்.

பொன்சேகாவிற்கு எதிரான சில குற்றச்சாட்டுகள் காரணமாக அவரிற்கு எதிராக ஆறு மாதத்திற்குள் சட்ட நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

இதன் காரணமாக அவர் மிக விரைவில் இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்.

இதேவேளை, இராணுவ நீதிமன்றத்திற்கு சமாந்திரமாக அவர் சிவில் நீதிமன்றத்திலும் நிறுத்தப்பட்டுள்ளார்.

பொன்சேகா இராணுவ நீதிமன்றத்தின் முடிவை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் உயர்நீதிமன்றிற்கும் போகலாம்.

இராணுவ சட்டத்தின் கீழ் ஒருவர் இழைத்த குற்றத்தின் பாரதூரத் தன்மையைக் கருத்தில் கொண்டு 20 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை வரை வழங்கலாம்.

இராணுவ நீதிமன்றால் மரண தண்டனையும் கூட வழங்கப்படலாம். - எனக் குறிப்பிட்டார். (அ-சி)

A/L BIOLOGY
PERSONAL CLASS
2012 ENGLISH MEDIUM
2010 A பெறுபேற்றிற்கான
எதிர்பார்க்கை வினா விடைகளுடன்
9அலகுகளும் விரைவு மீட்டல்.
110 மணித்தியாலங்களில்!
S.SRIHARAN
11, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம்.
(95296)

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=
(ல/562626)

NALIN இன் காட்சியறையில்
ALIN இன் INFORTEL அறிமுகம்
NALIN இன் Show Room இல்
Slim Top கணனிகள்
ரூபா 29 990 இல் இருந்து
(1.6, 80 GB H.D, 1GB Ram, 16'' LCD)
வடமாகாண ஏக விநியோகஸ்தர்
NALIN மட்டுமே..!
3 வருட உத்தரவாதம்
NALIN Information Technologies Pvt Ltd
195/4 PARAMESWARA JUNCTION TP:0212221166, 0777667974 email: nitpvt@nalininfotech.com
வரும் தலைமுறைகளுக்காக என்றும் NALIN இன் கணனிகள்

பாராளுமன்றத் தேர்தல் 2010 – யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
தந்தை செல்வாவின் நேர்மையும் தளபதி அமிர்தலிங்கத்தின் வீரமும் என்றும் எமது ஆராதனைக்கு உரியன.




இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்
(தமிழ் தேசியக் கூட்டமைப்பு)
எஸ். எக்ஸ். குலநாயகம் அவர்கள்
வெற்றி பெற உழைப்போம் – வட்டுக்கோட்டைத் தொகுதி வாக்காளர்கள்.



இலங்கைத் தமிழரசுக் கட்சி ✕

PRINCESS OF WALES NURSING HOME வேல்ஸ் இளவரசி மருத்துவமனை
Rgd No: NAL/DS/774
132, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் சிகிச்சையில் வெளிநோயாளர் பிரிவு (OPD)
தினமும் காலை 8மணி தொடக்கம் மாலை 7மணி வரை நடைபெறுகின்றது.
★ சகல விதமான இரத்த, சல பரிசோதனைகள் ★ EGC, Scan வசதிகள் ★ விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையும் சிகிச்சையும்
குழந்தை வைத்தியம், தோல் வைத்தியம், பொது வைத்தியம், சிறு சத்திரசிகிச்சைகள் யாவும் இங்கு நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு: Dr. S.நித்தியானந்தா MBBS (Srilanka). 021 222 6179
(C/565097)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.